DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1358 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 15, 2022

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# Ontario Premier Doug Ford announces that the Province would build a new Hospital for Scarborough

# ஸ்காபுறோ நகருக்கான புதிய வைத்தியசாலை ஒன்றை நிறுவும் அறிவிப்பை இன்று விடுத்த மாகாண முதல்வர்

ஸ்காபுறோ நகருக்கான புதிய வைத்தியசாலை ஒன்றை நிறுவும் அறிவிப்பை இன்று மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் ஸ்காபுறோ கிறேஸ் வைத்தியசாலையில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றில் விடுத்தார் அச்சந்தர்ப்பத்தில் ஸ்காபுறோ அஜின்கோர்ட் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் – **MPP Aris Babikian** ஒன்ராறியோவின் முதல்வர் அவர்களுடன் இணைந்திருந்தார், மாகாணத்தின் சுகாதார அமைச்சர் எலியட், மூத்தோர் மற்றும் அணுகல் அமைச்சர் றெமண்ட் சோ , **MPP** விஜய் தணிகாசலம், **MPP** கிறிஸ்டினா மிடாஸ் மற்றும் **Scarborough Health Network** இன் **CEO Elizabeth Buller** ஆகியோர் முக்கிய வரலாற்று அறிவிப்பை வெளியிட்டனர். பிர்ச்மவுண்ட் (கிரேஸ்) மருத்துவமனையின் தற்போதைய இடத்தில் ஒரு புதிய மருத்துவமனையை கட்டவதற்கான அறிப்பையே இன்று



முதல்வர் டக்போர்ட் அவர்கள் விடுத்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)

RE/MAX ACE Realty Inc., Brokerage
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
Mortgage Alliance
MORTGAGE AGENT
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE Realty Inc. Brokerage
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

## கனடிய திரைப்பட ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்து பாராட்டிய யாழ் மண்ணின் திரைப்படம் 'புத்தி கெட்ட மனிதர் எல்லாம்'

### காணத் தவறியவர்கள் மீண்டும் திரையிடும் வண்ணம் வேண்டுகின்றனர்





கடந்த 9ம் திகதியன்று சனிக்கிழமையன்று கனடாவின் ஸ்காபுறோவில் அமைந்துள்ள "நெற்வின்" கலையரங்கில் 3 காட்சிகளாக திரையிடப்பெற்ற யாழ் மண்ணின் திரைப்படம் "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படத்தை பார்த்து மகிழ்ந்த ரசிகர்கள் பாராட்டிமகிழ்ந்த வண்ணம் தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் திரைப்பபடத்தின் சிறப்புக்கள் பற்றி தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறிருக்கையில் மேற்படி திரைப்படத்தை பார்க்கத் தவறியவர்கள் "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படத்தை மொன்றியால் நகரிலும் மிசிசாகா பிரம்ரன் நகரங்களிலும் திரையிடும் படி சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இது தொர்பாக திரைப்படத்தின் இயக்குனர் ராஜ் சிவராஜ் அவர்கள் அங்கிருந்து கனடாவிற்கு தொடர்பு கொண்டு. திரைப்படத்தை கனடா-வில் திரையிட முயற்சி எடுத்து அதில் வெற்றி கண்ட குழுவின-ரையும் பாராட்டியுள்ளார்.

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX Blue Force
TEAM BLUE FORCE
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
North York, Scarborough & Brampton.
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Cleaning வேலை வாய்ப்பு

Richmond Hill, Vaughan நகரங்களில் Cleaning வேலை செய்வதற்கு ஆட்கள் உடனடியாகத் தேவை. காலை. மாலை. நள்ளிரவு ஆகிய 3 Shifts களில் வேலை செய்யலாம்.
Full Time and Part- Time.

தொடர்புகளுக்கு: சங்கர்
(416) 305-0264

### Help Wanted

**East end restaurant needs cook and helpers on full time basis Tuesday to Sunday. Accomodation Sunday night or Monday morning drop off is available. Wages details will be discussed with the interested candidate.**

**Please contact 416-294-7887 for further details**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

**Requirements:**
**- Minimum 3-4 years experience**
**- Cross Border experience**
**- Good Communication Skills**
**- Clean Abstract**

**Please Contact**
**416-835-6701**

### COMPUTER REPAIR

**Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.**

**VARUNAN: 416-894-6244**

### Office Assistant Wanted

ஸ்காபுறோவில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றிற்கு பகுதி நேர உதவியாளர் தேவை. தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
**Computer skills and strong communication skills are required.**

**For more details call:**
**416-752-1524**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# அரசியவாதிகளின் அதிகார பலமும் சுரண்டும் சிந்தனையும் நாட்டு மக்களை நடுத் தெருக்களுக்கு கொண்டு வருகின்றன

உலகின் பல நாடுகளில் பஞ்சமும் பட்டினியும் ஏற்பட்டு அந்த நாடுகளின் மக்கள் எலும்பும் தோலுமாய் வீதிகளில் அலைந்து உண்ண உணவின்றி வீழ்ந்து மடியும் காட்சிகளை புகைப்படங்களிலும் ஒளிப்படங்களிலும் பார்த்து அதிர்ந்து போயிருந்தோம்.

ஆனால் அதற்கெல்லாம் காரணம் இயற்கையின் செயற்பாடுகளும் அதன் விளைவுகளும் என்று தான் எண்ணியிருந்தோம். ஆனால் நாளடைவில் நாம் அறிந்து கொண்ட விடயங்கள் எமக்கு அதிர்ச்சியைத் தந்தன.

வறுமையும் பட்டினியும் சூழ்ந்து கொண்ட நாடுகளின் அந்த நிலைக்கு காரணம் மக்களோ அன்றி இயற்கையோ அல்ல அந்தந்த நாடுகளில் அரசியல் அதிகாரங்களில் காலாதி காலமாய் நிலைத்திருந்த அரசியல்வாதிகள் தான் இந்த நிலைக்கு காரணம் என்று அறிந்தோம். ஆனால் இலங்கையிலும் இந்த இக்கட்டான நிலை வரும் என்று நாம் எண்ணியிருக்கவில்லை.

ஆமாம்! இலங்கையின் பரம்பரை பரம்பரையாகவும் குடும்பம் குடும்பமாகவும் ஆட்சி செய்தவர்களே தங்கள் அரசியல் பலத்தாலும் அதிகார பலத்தாலும் நாட்டைச் சூறையாடியுள்ளனர் என்புத தற்போது புலனாகியுள்ளது

அரசியவாதிகளின் அதிகார பலமும் சுரண்டும் சிந்தனையும் நாட்டு மக்களை நடுத் தெருக்களுக்கு கொண்டு வருகின்றன என்ற உண்யை கம்யுனிய தத்துவவாதிகளான மார்க்ஸ் ஏங்கெல்ஸ் லெனின் போன்றவர்கள் பல இடங்களில் எழுதியும் பேசியும் வந்திருந்தாலும் மக்கள் அதனைப் புறக்கணிக்க வேண்டும் என கண்டிப்பாக இருந்த அந்த வகையான மக்கள் விரோத அரசியல்வாதிகளே இலங்கையை மட்டுமல்ல, பல நாடுகளையும் அழிவு நிலைக்கு கொண்டு வந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

ஆனால் ஏற்கெனவே சுரண்டிச் சேர்த் சொத்துக்களை பாதுகாக்கவும் அவற்றை அனுபவிக்கவும் வேண்டும் எண்ணம் கொண்ட அரசியல் கொள்ளையர்கள் தற்போது இலங்கையில் எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் எவ்வித அழுத்தங்களும் அடிப்பணியாமல் அவசியமான நபர்கள் அடங்கிய அமைச்சரவை ஒன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை நியமியத்து அரசாங்கத்தை தொடர்ந்து நடத்தி செல்வதற்காக ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான தாமரை மொட்டு கட்சியின் பிரதான அரசியல்வாதிகள் தீர்மானித்துள்ளனர். இவ்வளவு ஆண்டுகளும் அனுபவித்த சுகபோகங்கள் அனைத்தை இழந்து விட விரும்பாததே இந்த மறுப்புகளுக்க காரணம் என்புத தற்போது மக்களுக்கு புரிந்த ஒன்றாகவிட்டது அமைச்சரவையை பெயரிடும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சில முன்னாள் அமைச்சர்களுக்கு மட்டும் அமைச்சுக்கள் வழங்கப்பட மாட்டாது எனவும் அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

புதிய அமைச்சரவையை நியமித்து, அரசாங்கத்தின் பணிகள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து தொடர வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் விடுக்கப்பட்ட தொடர் கோரிக்கைகளுக்கமைய புதிய அமைச்சரவை நியமனம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆனாலும். மக்கள் இவர்களை நம்புவதற்கு தயாராக இல்லை. தொடர்ந்து கோத்தாபாயவை வீட்டுக்கு அனுப்பும் எண்ணத்தோடு தான் தங்கள் தொடர் போராட்டத்தை நடத்திய வண்ணம் உள்ளார்கள்.

அவர்கள் போராட்டம் வெற்றியடைய அனைவரும் உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நாமும் ஆதரவை வழங்க வேண்டும்.

**இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா**
**பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்**

காலம் : 23-04-2022 (சனிக்கிழமை)
இடம் : Scarborough Village Theatre
3600 Kingston Road (At Markham road) Scarborough

நேரம் : மாலை 3.00 மணி - 5.00 மணி வரை
கனடா வாழ் இணுவில் மக்களை இக்கூட்டத்திற்கு வருகை தந்துகலந்து சிறப்பிக்குமாறு பணிவன்போடு அழைக்கிறோம்.
தொடர்புகளுக்கு:
416-286-4780 416-430-0422 416-438-2463

SATURDAY APRIL 16TH 2022
கவனயீர்ப்பு
உலகமே
தமிழர் தேசத்தை
பிரித்துவிடு
INTERNATIONAL COMMUNITY:
SEPARATE TAMIL NATION FROM SRI LANKA
JOIN 12PM CAR RALLIES
வாகனப் பேரணிகள்
Markham & Steels
(சந்திப்புக்கு அருகாமையில்)
Brampton City Hall
(Queen St & Main St)
BOTH CAR RALLIES START AT
12PM
360 UNIVERSITY AVE. FROM 5:00 PM
கவனயீர்ப்பு
கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்
தொடர்புகளுக்கு: 416 830 7703 | 647 975 0524 | 416 662 2326 | 647 741 5228

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் அதீத பாதுகாப்புச் செலவீனங்கள் அதன் பொருளாதார நெருக்கடியையும், தமிழ் மக்கள் மத்தியில் கசப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளன

- போர் முடிந்த பின் அதிகரித்துள்ள பாதுகாப்புச் செலவு (US $14.92 -> US $17.28 பில்லியன்)
- விரயமாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு செலவு US $34.7 -> US $200 பில்லியன்
- வெளிநாட்டுக் கடன் US $50.7 பில்லியன்
- யுத்தம் முடிந்த பின்னும் அதிகரிக்கும் இராணுவ ஆளணி (223.000 -> 317>000)
- பாதுகாப்புச் செலவிற்கான நடப்பு வருட ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தின் 15% (சுமார் US $2 பில்லியன்)
- 19 இல் 16 படை பிரிவுகள் வட மாகாணத்தில் நிலைநிறுத்தம்

மே 2009இல் உள்நாட்டுப் போர் முடிவடைந்த போதிலும், இலங்கையின் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்துள்ளதை தேர்ச்சி பெற்ற பொருளாதார அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட ஆய்வுத் தகவல்கள் நிரூபிக்கின்றன.

மேக்ரோ ட்ரெண்ட்ஸ் அறிக்கையின்படி, (முதலீட்டாளர்களுக்கான ஆராய்ச்சி தளம்) 1960ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பாதுகாப்புக்கான வரவு செலவுத் திட்டச் செலவுகள் பின்வருமாறு:

2020ஆம் ஆண்டு வரை இலங்கை அரசானது தனது பாதுகாப்புக்காக US $34.7 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளதாக உலக வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன்படி 2020 ஆம் ஆண்டு பாதுகாப்புக்காக மட்டும் US $1.58 பில்லியன் டொலர்களை இலங்கை செலவிட்டுள்ளது. போருக்குப் பிந்தைய கால வரவு செலவுத் திட்ட பாதுகாப்பு செலவு (US $17.28 பில்லியன்) போர் கால பாதுகாப்பு செலவை விட (US $14.92 பில்லியன்) அதிகமாக உள்ளது.

| காலம் | மொத்தம் US$ Billion | ஆண்டு சராசரி US$ Billion |
|---|---|---|
| 1960 to 1982 | 0.52 | 0.023 |
| 1983 to 2009 | **14.92** | 0.553 |
| 2010 to 2019 (போரின் பின்) | **17.28** | 1.728 |
| மொத்தம் | 32.72 | |

இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் வெளியுறவு செயலாளருமான சிவசங்கர் மேனனின் அறிக்கையில் மே 2009இல் முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போரால் நாட்டிற்கு சுமார் US $200 பில்லியன் டாலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்திருப்பதை கருத்தில் கொள்வது பயனுள்ளது ஆகும். இந்த US $200 பில்லியன் டாலர்கள் மிகப்பெரியது மட்டுமன்றி சிறிலங்காவின் பதிவுகளில் கணக்கில் காட்டப்படவில்லை.

மேலும், மேலே மேற்கோள் காட்டப்பட்ட பாதுகாப்பு செலவின் புள்ளிவிபரங்களில் சர்வதேச சமூகங்களால் இலவசமாக வழங்கப்பட்ட அனைத்து பாதுகாப்பு உபகரணங்கள், வெடிமருந்துகள், ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள் ஆகியவை உள்ளடக்கப்படவில்லை.

இலங்கையின் இராணுவத்தினர் தொகை பின்வருமாறு:

| வருடம் | மொத்தம் |
|---|---|
| 1985 | 21,600 |
| 2009 (போர் முடிவில்) | 223,000 |
| 2018 | 317,000 |


மேற்கூறிய விவரங்களிலிருந்து, 2009 இல் போர் முடிவடைந்த பின்னரும், இலங்கையில் இராணுவத்தை அதிகரிப்பதில் தனது வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான தொகையைச் செலவழித்து வருகிறது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாகிறது. நடப்பு ஆண்டு மொத்த வரவு செலவுத் திட்டத்தின் 15%ஐ அதாவது சுமார் US $2 பில்லியன் டாலர்களை பாதுகாப்புச் செலவிற்காக ஒதுக்கியுள்ளது.

இராணுவத்தினர் தொகையை 2009ல் போர் முடிவடையும் கட்டத்தில் 223,000 பேரிலிருந்து இன்றுவரை 317,000 ஆக (94,000 பேரால்) அதிகரித்தது. இது 2009 இல் நடந்த போருக்குப் பிறகு, தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர் தாயகங்களில் இராணுவத்தினர் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளதை குறிக்கிறது. இதற்கிடையில், சிறிலங்காவின் சமாதானம் மற்றும் நீதிக்கான பிரச்சாரக் குழு, (Sri Lanka Campaign for Peace & Justice) அதன் 06 மார்ச் 2013 அறிக்கையில் பின்வரும் புள்ளிவிவரங்களை வழங்கியது.




மேற்குறிப்பிட்ட அறிக்கையானது, வடக்கில் மாத்திரம், யுத்தத்தின் முடிவில் 200,000 படையினர் இருந்ததாகவும், 2012 இல் 300,000 ஆகவும், 2015 ஆம் ஆண்டளவில் 400,000 படையினரை நிலை கொள்ள வைக்க கணிப்பிடப்பட்டது. இக் கணிப்பீடானது, இலங்கை அரசாங்கம், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அவர்களின் பூர்வீக வாழ்விடங்களிலிருந்து தற்காலிக வாழ்விடங்களுக்கு விரட்டி ஏழ்மை நிலைக்கு தள்ளி விட்டு, அங்கு ஏறக்குறைய தனது அனைத்து இராணுவத்தினரையும் நிலைநிறுத்தி வருவதைக் குறிக்கிறது. ஏற்கனவே 2009 ஆம் ஆண்டு வரை 30 வருட உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்காக நில அபகரிப்பினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இடர் பகுப்பாய்வுகளை மேற்கொள்வது, ஊழல்கள் மீதான தணிக்கை போன்ற நடைமுறைகளை மேற்கொண்டு சிறிலங்கா தனது பாதுகாப்பு செலவினங்களை வீணாக்காமல் இருந்திருந்தால், US $50.7 பில்லியன் டாலர் வெளிநாட்டுக் கடன்களினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை ஓரளவு தணித்திருக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.




இலங்கை அரசியல்வாதிகள் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் எவ்வாறு சொத்து சேர்த்தார்கள் என்று கேள்வி எழுப்புவதன் மூலம், பாதுகாப்புக் கொள்வனவுகள் மட்டுமன்றி உரக் கொடுக்கல் வாங்கல்கள், 2004 சுனாமி நன்கொடைகள் மற்றும் எண்ணெய்க் கசிவுகளுக்காக வழங்கப்பட்ட நஷ்டஈடு போன்றவற்றிற்கான நிதி ஆய்வை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும்.

மேற்கூறிய காரணிகளை ஆராயும் அதே வேளை, பின்வரும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால கொள்கைகளை மீளாய்வு செய்தல் முன்னேற்றத்துக்கான ஆக்கபூர்வமான வழியாகும்.

- கொள்கை நெருக்கடி
- பொருளாதார நெருக்கடி, மற்றும்
- அரசியல் நெருக்கடி

இலங்கையின் தற்போதைய அவலநிலை குறித்து சர்வதேச சமூகம் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப்பது அத்தியவசியமாகும்.

அதே வேளையில், நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்துவது என்னவென்றால் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவத்தின் அளவை குறைப்பதற்கு இலங்கையின் மேல் அழுத்தங்களை கொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற் கொண்டு தமிழ் மக்கள் மீதான இராணுவ நெருக்கடிகளை நீக்குவதுடன் இராணுவமயமாக்கலை முற்றாக நிறுத்துவதன் மூலம் அதிகரித்த தேசிய செலவினத்தை குறைப்பதே முதல் மற்றும் முதன்மையான நடவடிக்கையாகும்.

அதே வேளையில், நாங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் வலியுறுத்துவது என்னவென்றால் இலங்கையின்மேல் அழுத்தங்களை கொடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற் கொண்டு இலங்கையின்வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்களை முழுமையாக நீக்குவதுடன் இலங்கையின்தேவையற்ற யுத்தசன்னதத்தை குறைப்பதன் மூலம் அநாவசியமான தேசிய செலவினத்தை ஒழிப்பது முதன்மையான நடவடிக்கையாகும்.

# யாழ் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு அருகில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்




யாழ். தெல்லிப்பளையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை மக்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களின் ஏற்பாட்டில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு அருகில் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்கள் எங்கே? வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றத்தைத் துரிதப்படுத்து. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு. வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளை உடனடியாக விடுவி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.






குறித்த போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# Ontario Premier Doug Ford Announces that Province Would Build a New Hospital for Scarborough

# ஸ்காபுறோ நகருக்கான புதிய வைத்தியசாலை ஒன்றை நிறுவும் அறிவிப்பை இன்று விடுத்த மாகாண முதல்வர்

ஸ்காபுறோ நகருக்கான புதிய வைத்தியசாலை ஒன்றை நிறுவும் அறிவிப்பை இன்று மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் ஸ்காபுறோ கிறேஸ் வைத்தியசாலையில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றில் விடுத்தார் அச்சந்தர்ப்பத்தில் ஸ்காபுறோ அஜின்கோர்ட் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் – MPP Babikian ஒன்ராறியோவின் முதல்வர் அவர்களுடன் இணைந்திருந்தார், மாகாணத்தின் சுகாதார அமைச்சர் எலியட், மூத்தோர் மற்றும் அணுகல் அமைச்சர் றெமண்ட் சோ, MPP விஜய் தணிகாசலம், MPP கிறிஸ்டினா மிடாஸ் மற்றும் Scarborough Health Network இன் CEO Elizabeth Buller ஆகியோர் முக்கிய வரலாற்று அறிவிப்பை வெளியிட்டனர். பிர்ச்மவுண்ட் (கிரேஸ்) மருத்துவமனையின் தற்போதைய இடத்தில் ஒரு புதிய மருத்துவமனையை கட்டவதற்கான அறிப்பையே இன்று முதல்வர் டக்போர்ட் அவர்கள் விடுத்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதல்வர் அவர்கள் அங்கு உரையாற்றுகையில்; “2019 ஆம் ஆண்டில், பிர்ச்மவுண்ட் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவை மறுவடிவமைக்க ஸ்கார்பரோ ஹெல்த் நெட்வொர்க்கைத் திட்டமிடுவதற்கு அரசாங்கம் $500,000 முதலீடு செய்தது. திட்டமிடல் செயல்முறை முழுவதும், ஸ்காபரோ மற்றும் அதைச் சுற்றியுள்ள சமூகங்களுக்குத் தேவையான நாளாந்தம் வரும் நோயாளிகளுக்கும் குடும்பங்களுக்கும் தொடர்ந்து வழங்குவதற்கு ஒரு புதிய அவசர சிகிச்சைப் பிரிவு தேவை என்பது தெளிவாகியது.

இன்றுவரை செய்யப்பட்ட வேலைகளின் அடிப்படையில், புதிய பிர்ச்மவுண்ட் மருத்துவமனையைத் திட்டமிட அரசாங்கம் கூடுதலாக $3 மில்லியனை முதலீ-டு செய்கிறது. பிராந்தியத்தில் சுகாதாரப் பாதுகாப்பை மாற்றியமைப்பதற்கான ஸ்கார்பரோ ஹெல்த் நெட்வொர்க்கின் பரந்த திட்டத்தின் முக்கியப் பகுதியாக இந்த முதலீடு உள்ளது. கட்டம் கட்டமாக பில்லியன் டாலர் மறுவளர்ச்சியின் போது தற்போதுள்ள வசதிக்கு பெரிய சீரமைப்புகளைச் செய்து புதிய உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் ஒரு புதிய மருத்துவமனையை உருவாக்க நெட்வொர்க் திட்டமிட்டுள்ளது.

முதல் கட்டத்தின் ஒரு பகுதியாக, 200க்கும் மேற்பட்ட புதிய படுக்கைகள், 14 புதிய அறுவை சிகிச்சை அறைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சிக்கு கூடுதல் இடவசதியுடன் கூடிய புதிய, அதிநவீன மேடை வைத்தியசாலையில் உள்நோயாளி பிரிவையும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதும்.





பேர்ச்மவுண்ட் மருத்துவமனையில் 450 படுக்கைகள் அமைக்கப்பட்டு இருக்கும், இது தற்போதைய திறனை இரட்டிப்பாக்கும். மருத்துவமனையில் சுகாதார சேவைகள் மறுவளர்ச்சியின் ஒரு பகுதியாக விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது, இதில் முக்கியமான மற்றும் அவசர சிகிச்சை, மனநலம் மற்றும் அடிமையாதல் பராமரிப்பு, பக்கவாதம் மற்றும் மறுவாழ்வு பராமரிப்பு ஆகியவை அடங்கும். இந்த மேம்படுத்தப்பட்ட சேவைகள் மூலம், Scarborough Health Network ஆனது வரும் தலைமுறைகளுக்கு நோயாளிகளுக்கு உயர்தர சிகிச்சையை வழங்க முடியும். என்றும் முதல்வர் தெரிவித்தார்.



மேற்படி நிகழ்வில் முதல்வர் அவர்கள் MPP Babikian இன் உறுதியை பாராட்டி,”... Scarborough-Agincourt மக்களுக்காக நீங்கள் போராடி வருகிறீர்கள், இன்று நாங்கள் இங்கு இருப்பதற்கு நீங்கள் ஒரு பெரிய காரணம்.” என்றார்.

மேலும் முதல்வர் தனது உரையில்; “ஸ்கார்பரோ ஹெல்த் நெட்வொர்க்கில் பல குறிப்பிடத்தக்க திட்டங்களில் $1 பில்லியன் டாலர்களுக்கு மேல் முதலீடு செய்வோம். இந்த முதலீடு பிர்ச்மவுண்டில் ஒரு புதிய மருத்துவமனையைக் கட்டுவதற்கு ஆதரவளிக்கும்,” என்று அவர் மேலும் கூறினார்.

“... நீண்ட காலமாக, Scarborough நகரத்தின் இன் வளர்ச்சிக்கு ஏற்ப முதலீடுகளை செய்ய முந்தைய அரசாங்கங்கள் மறுத்துவிட்டன. அவர்கள் தொடர்ச்சியாகப் பேசினார்கள்... ஆய்வுகள் செய்தார்கள்... அறிக்கைக்குப் பிறகு அறிக்கை கேட்டார்கள். ஸ்கார்பரோ மக்கள் காத்திருந்ததால், தாமதத்திற்குப் பின் முடிவு தாமதமானது. அதை எங்கள் அரசு தற்போது செய்து வருகிறது” என்றார்.

MPP Babikian அங்கு உரையாற்றுகையில் ”இந்த வரலாற்று அறிவிப்பில் பங்கேற்க முடிந்ததில் நான் பெருமைப்படுகிறேன், பணிவாக இருக்கிறேன். மிக நீண்ட காலமாக, Scarborough-Agincourt புறக்கணிக்கப்பட்டது. இனி இல்லை. 15 ஆண்டுகால அலட்சியம், உடைக்கப்பட்ட வாக்குறுதிகள் மற்றும் பாழடைந்த உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்குப் பிறகு, நாங்கள் தகுதியான கவனத்தைப் பெறுகிறோம். எமது மாகாணத்தின் முதல்வர் டக் போர்டு மற்றும் அமைச்சர் எலியட் ஆகியோரின் தலைமையின் கீழ், ஸ்காபரோ நார்த் மற்றும் ஸ்காபரோ மக்களுக்கு சிறந்த சேவை செய்வதற்காக ஒன்ராறியோவை உருவாக்குகிறோம். இன்று எங்கள் குடியிருப்பாளர்களுக்கு ஒரு முக்கிய நாள். வருங்கால சந்ததியினர் இந்த நாளை அன்புடன் நினைவு கூர்வார்கள். காத்திருப்பு முடிந்தது. எங்கள் குடியிருப்பாளர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய விடியல் பிரகாசிக்கிறது. Scarborough-Agincourt இன் பெரும் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில் நான் பெருமைப்படுகிறேன். ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்டில் வசிப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அதை வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் சிறந்த இடமாக மாற்றுவதற்கு நான் எனது தொடர்ச்சியான முயற்சிகளை விட்டுவிட மாட்டேன். என்றார்.

***செய்தியும் படங்களும்: சத்தியன்***


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "போராட்டத்தைக் கைவிடுங்கள்"

## இலங்கை பிரதமர் மகிந்த ராஜபட்ச வேண்டுகோள்



இலங்கை மக்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபட்ச வேண்டுகோள் விடுத்துள்ளார். முன்னெப்போதும் இல்லாத வகையிலான கடுமையான பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிப்பதால், இலங்கையில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அந்த நாட்டு அரசுக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிபர் கோத்தபய ராஜபட்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபட்ச ஆகியோர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்தன. இந்த நிலையில், பிரதமர் மகிந்த ராஜபட்ச நாட்டு மக்களுக்கு திங்கள்கிழமை (11) உரையாற்றினார்.

மகிந்த ராஜபட்ச பேசியதாவது: "பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 24 மணி நேரமும் அரசு செயல்பட்டு வருகிறது. மக்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும். சாலையில் செலவழிக்கும் ஒவ்வொரு நிமிடமும், இங்கு வரக்கூடிய டாலரை நாடு இழக்கிறது" என்றார் அவர்.

# இலங்கையின் புதிய அமைச்சரவையில் திருடர்களுடன் சேர்ந்து நாம் பணியாற்ற மாட்டோம் என்கிறார் முன்னாள் அமைச்சர் ஒருவர்



இலங்கையின் புதிய அமைச்சரவையில் திருடர்களுடன் சேர்ந்து நாம் பணியாற்ற மாட்டோம். அமையப்போகின்ற புதிய அமைச்சரவையில் ராஜபக்ஷ குடும்பத்தில் எவருக்கும் இடம் வழங்கக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்று இலங்கை அமைச்சரவையின் முன்னாள் ராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர எனத் தெரிவித்துள்ளார்.

சில நாட்களில் அமைக்கவுள்ள அமைச்சரவையில் திருடர்களுக்கு இடமில்லை, திருடர்களுடன் நாம் உட்கார மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சி என்ற வகையில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு சபையினூடாக பிரதமரை தெரிவு செய்ய முற்பட்டோம்.

வீதி அமைப்பதில் கொள்ளையடித்த பணத்தை கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நடவடிக்கையில் ராஜபக்ஷர்கள் ஈடுபடுகின்றனர். இந்த பழைய விளையாட்டுக்களை மீண்டும் இங்கே வைத்துக்கொள்ள வேண்டாம்.

விலை கொடுத்து வாங்கி நாளை அமைக்க போகும் 113 எம்பிகளை கொண்ட அரசால் மக்களிடம் முகம் கொடுக்க முடியாது. நாளை முதல் நாமும் வீதிக்கு இறங்குவோம் என தயாசிறி ஜயசேகர எச்சரித்துள்ளார்.

இதேவேளை எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்கும் முயற்சியில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தீவிரமாக ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விற்பனை பொருள் அல்ல. ராஜபக்ஷர்களின் இந்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார்.

# நாடு உள்ள மோசமான நிலையில் எப்படி என்னால் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க முடியும் என்கிறார் ஜனாதிபதி சந்திரிக்கா



நாடு முன்னொரு போதும் இல்லாத பெரும் அராஜக நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் என்னால் எப்படி புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது முகநூலில் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த சில நாட்களாக பல்வேறு அரசியல் தலைவர்களைச் சந்தித்து தொடர்ச்சியாக உரையாடி வருகின்ற அவர் புத்தாண்டு தொடர்பாக ஊடகவியலாளர்கள் உரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். ஊடகவியலாளர்களோடு அவர் தொடர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது பின்வருமாறு தெரிவித்தார்.

"சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டின் அனைத்து குடிமக்களும் அனைத்து வேறுபாடுகளையும் புறக்கணித்து மழையையும் பொருட்படுத்தாமல் நாட்டின் முன்னேற்றத்திற்காக அமைதியான போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்-என அவர் தெரிவித்துள்ளார். இந்த போர் முழுவதும் வன்முறைக்கு பதில" அமைதியையும் வெறுப்புக்கு பதில் அன்பையும் காண்போம் இந்தபோக்கின் மூலம் நாடு வெற்றியை பெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்திற்காகத் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த குடிமக்கள் அனைவருக்கும், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும், வளமும், ஆரோக்கியமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, உங்கள் அனைவருக்கும் வளமும், வளமும் மிக்க புத்தாண்டாக அமையட்டும். இந்த நெருக்கடியை சமாளித்து அமைதி, சகவாழ்வு மற்றும் ஜனநாயகம் கொண்ட நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 250 புத்திஜீவிகள் கல்விமான்கள் சட்டத்துறையினர் பத்திரிகையாளர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கையெழுத்திட்ட கூட்டறிக்கை

இலங்கையில் தற்போதைய நெருக்கடியான கால கட்டத்தில் இன்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்திலே எம்மத்தியில் தோழமையுணர்வு மேலோங்கவேண்டும் என மக்களிற்கு அழைப்பு விடுப்பதாக இலங்கையின் கல்விமான்களும் புத்திஜீவிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் தெரிவித்துள்ளனர். அத்துடன் அவர்களில் 250 புத்திஜீவிகள் கையெழுத்திட்ட கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி கையெழுத்திட்ட 250 பேரில் கனடாவின் மெக் மாஸ்டர் பல்கலைக்கழகம். இலண்டன் பல்கலைக் கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த பேராசிரியர்களும் கூட்டாகக் கையெழுத்திட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து பேராசிரியர் அறிவழகன் என்பவரும் கனடாவின் மெக் மாஸ்ட்டர் பல்கலைக் கழகத்திலிருந்து ருசினி அபயகோன் என்பவரும் கனடாவின் புரொக் பல்கலைக் கழகத்திலிருந்து சச்சின் அபேயசேகர என்னும் பேராசிரியரும் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டறிக்கையில் கையொப்பமிட்டுள்ள மேற்படி 250 புத்திகளும் பின்வரும் விபரங்களை உள்ளடக்கி தங்கள் சம்மதத்துடன் கையொப்பமிட்டுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எங்கள் எல்லோருக்கும் நியாயபூர்வமான எங்கள் எல்லோருக்கும் நியாயமான ஜனநாயகமான ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் பெண்கள் குழுக்கள், ஒதுக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட அதிருப்திக்குள்ளான சமூகங்கள் என அனைவரையும் உள்ளடக்கிய ஒரு இயக்கத்தின் உருவாக்கத்திற்காக நாம் அழைப்பு விடுகின்றோம் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையை சேர்ந்த 250 கல்விமான்களும் புத்திஜவீகளும் சமூக செயற்பாட்டாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பத்திரிகையாளர்களும் கையெழுத்திட்டு கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காலனித்துவத்திற்குப் பிற்பட்ட எமது வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராதவாறான சம்பவங்களை இன்று நாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கின்றோம். ஜனநாயக உணர்வு மேலீட்டின் வியப்பூட்டும் வெளிப்பாடாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் தாமாகவே வீதிகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மாற்றத்துக்கான அவர்களது கோஷங்கள் உரப்புடனும், சக்தியுடனும், பிரமிக்க வைக்கும் வகையிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. பொது மக்களின் கோபமெல்லாம் ஒரு பரம்பரைசார் அரசியல் பேரரசு ஒன்றினை உருவாக்கியிருக்கும் ராஜபக்சர்கள் என அழைக்கப்படும் சிறிய உயர் குழாத்தினர் மீதும், பாராளுமன்றத்தினுள்ளும், வெளியிலும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் அவர்களின் நெருங்கிய சகாக்கள் மற்றும் கூட்டாளிகள் மீதும், அவர்களுக்கு ஒத்தாசையாகச் செயற்பட்ட வியாபாரத் தரப்பினர் மீதும் திரும்பியுள்ளது. கடந்த சில தசாப்தங்களில், எமது நாடு கண்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடிகளிலே ஒன்று மக்களை வீதிகளுக்குத் தள்ளிவிட்டிருக்கிறது. அந்த மக்கள் இப்போது ஜனாதிபதியினை நோக்கி, பதவியினைத் துறந்து விட்டு வீடு செல்லுமாறு கோருகின்ற மாற்றத்துக்கான இக் கோரிக்கைகள் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினை மாத்திரமல்லாது, அரசாட்சியின் பல வடிவங்களையும் அப்புறப்படுத்துவதுடன் தொடர்புபட்டுள்ளன. ஆர்ப்பாட்டம் செய்வோர் கடினமான பல கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

எமது பொருளாதாரக் கொள்கைகள், நீதித் துறையின் செயற்பாடுகள், சமூகங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் இந்த விடயங்களுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் போன்றன இந்தக் கேள்விகளின் கருவாக அமைந்துள்ளன. பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்பதிலே மக்கள் உறுதியாக உள்ளனர். உணவு, மருந்து, பால் மா, மின்சாரம், எரிவாயு (காஸ்), எழுதுபொருட்கள் போன்ற அத்தியாவசிய பண்டங்கள் போதுமான அளவிலே தமது குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டும் என அவர்கள் கோருகின்றனர். சூறையாடப்பட்ட மக்களின் பணம், மீளப்பெறப்பட்டு மக்களிடையே பகிரப்பட வேண்டும் எனப் பல சமூகங்கள் கோரி வருகின்றனர். இன மத ரீதியிலான பிரிவினையைத் தூண்டும் அரசியல் ஒழிக்கப்பட்டு, கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும், வன்முறைகளுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண்டும் எனப் பலர் கோருகின்றனர்.

சர்வாதிகாரத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நாடு தமக்கு வேண்டும் என மக்கள் ஐக்கியத்துடன் குரல் எழுப்புகின்றனர். அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் பாலினம் சார் நியாயங்களையும், நீதியினையும் கோரும் மக்களின் இந்த பல்குரற் கோஷங்கள் கேட்கப்பட வேண்டியவை் அவற்றுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

பாரியளவில் கடன்பட்டிருக்கும் எமது அரசாங்கம், அத்தியாவசிய இறக்குமதிகளைப் பெற்றுத் தரத் திராணியற்றுப் போனமை நாட்டிலே ஏற்கனவே உருவாகி இருந்த பொருளாதார நெருக்கடியினை மேலும் சிக்கலாகியது. இந்தச் சூழலிலேயே போராட்டங்கள் வெளிக்கிளம்பின. இரசாயன உரங்களின் இறக்குமதியினைத் தடை செய்தல் போன்ற அரசாங்கத்தின் தான் தோன்றித்தனமான முடிவுகள் விவசாய உற்பத்தியினை மோசமாகப் பாதித்தன. உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றின் பற்றாக்குறைகளும், அபரிமிதமான விலை அதிகரிப்புகளும் மக்களினை சுமைக்குள்ளாக்கின. இந்த நிலைமைகள் உழைக்கும் வர்க்கத்தினர், கீழ்மட்ட வர்க்கத்தினர், பலவகைகளிலும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் மீது பாரதூரமான தாக்கங்களை உருவாக்கின. இவர்களின் நிலைமை கோவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக மேலும் அபாயத்துக்கு உள்ளாகியது.

இந்த நெருக்கடியின் தோற்றுவாய்கள் அரசியலுடன் தொடர்புபட்டவை. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சர்வாதிகார அரசாங்கங்களின் கொள்கைகளே இன்றைய நெருக்கடிக்குக் காரணங்களாக அமைகின்றன. இவ்வாறான ஆட்சி முறையானது, சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாத ரீதியிலான அணிதிரட்டல்களின் ஊடாகப் பலப்படுத்தப்பட்டு வந்தது. இந்தப் போக்கின் மிக அண்மைய வடிவங்களில் ஒன்றே கோவிட்டினால் இறந்த முஸ்லிம்களின் உடலங்கள் மீது கட்டாயத் தகனம் திணிக்கப்பட்டமை. சமூகத்தின் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்காது, அதிகாரம் மிக்க, தொழில்முறைசார், இராணுவப் பாங்கான குணாதிசாயங்களைக் கொண்ட செல்வந்த ஆண்களினால் நாடு முன்னடத்தப்பட வேண்டும் என்ற கருத்தியலின் மீது இந்த ஆட்சி முறையானது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்தியல்கள் விளிம்புநிலை மக்கள் மீது பாகுபாடு காண்பிக்கும் அதேவேளை, பன்மைத்துவத்துக்கான சந்தர்ப்பங்களையும் மட்டுப்படுத்தியுள்ளன.



இந்தக் கருத்தியல்கள் கூடியளவிலான இராணுவமயமாக்கலினையும், சமத்துவமின்மையினையும், அநீதியினையும் உருவாக்கியுள்ளன. அவை ஜனநாயகபூர்வமான கூட்டு நடவடிக்கைகளுக்கான வெளியினை மட்டுப்படுத்தி, அதற்குப் பதிலாக, மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தையும், மக்கள், அரசியல்வாதிகளின் தயவில் தங்கியிருக்க வேண்டியிருக்கின்ற அரசியற் கலாசாரத்தினையும் உருவாக்கியுள்ளன.

இன்றைய நெருக்கடியினைத் தீர்க்கும் வகையிலே முன்வைக்கப்படும் தீர்வுகள் நிலைமையினை மேலும் மோசமாக்காது இருப்பது மிகவும் அவசியம். பிரச்சினைக்குத் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு ஒன்று இடம்பெறும் என இன்று பேசப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தினை மிகவும் உன்னதமான தீர்வாக நோக்குகின்ற நவதாரளவாத பொருளாதாரச் சிந்தனை எல்லா அரசியல் நிலைப்பாடுகளினை வைத்திருப்போர் மத்தியிலும் வேரூன்றி உள்ளது. எனினும் இந்த நெருக்கடிக்கு எம்மை இட்டுச் சென்றதே பல தசாப்தங்களாக நாம் பின்பற்றி வரும் நவ தாராளவாதக் கொள்கைகள் தான் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். நவதாராளவாதக் கொள்கைகள், சமூகம் மீதான அக்கறைகளை விடுத்து, தனிநபர் சொத்துடைமைகளையும், உரிமைகளையும், சுதந்திர சந்தைகளையுமே ஊக்குவிக்கின்றன. உலகளாவிய ரீதியில் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகள் மோசடிகளுக்கும், தனிப்பட்ட இலாபமீட்டல்களுக்குமான களங்களாகக மாறிவருவதோடு, அரசாங்கங்கள் இவ்வாறான நவதாராளவாதப் போக்குகளை ஆதரிக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறான சேவைகளினை அரசு மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லாது செய்யப்பட்டுள்ளது, அதேபோல, இந்த சேவைகள் பொதுமக்களுக்கு உரியவை அல்ல என்ற நிலைப்பாடும் வளர்த்தெடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக அரசின் வகிபங்கானது நலிவடைந்துள்ளதுடன், சந்தைகளின் மாறுபாடுகளின் தாக்கத்தின் காரணமாக மக்கள் பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சமூக நலனுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவதை நாம் கண்ணுற்றுள்ளோம். கட்டுப்பாடுகளின் நீக்கமும், தனியார்மயமாக்கலும் இன்று சாதாரணமாகிவிட்டன. தன்னிறைவுக்கு இட்டுச் செல்லும் உற்பத்தியினை வளர்த்தெடுப்பதனை விடுத்து, வெளி நாட்டு வேலையாட்களின் சுரண்டப்பட்ட ஊதியத்திலும், சர்வதேசக் கடனிலும் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு இடம்பெறும் பட்சத்தில், மேற்கூறியவற்றை நாம் மனதில் கொள்ளுதல் அவசியம்.

பொருளாதார நெருக்கடிக்கான குறுகியகாலத் தீர்வாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். மீள்பகிர்ந்தளிப்பு மற்றும் கூடிய சமத்துவத்தினை நோக்கிச் செல்லும் வகையில், சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் மீதான செல்வ வரிகள் உள்ளங்கடலான அதிகரித்துச் செல்லும் நேரடி வரியினை நாம் கோர வேண்டும். இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவிலே குறைக்கப்பட வேண்டும் என்பதனையும், சுகாதாரம், கல்வி, மின்சாரம், நீர் விநியோகம், போக்குவரத்து போன்ற முக்கியமான பொதுச் சேவைகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அவற்றினை வலிமைப்படுத்த வேண்டும் என நாம் வலியுறுத்த வேண்டும். காணியற்றோர் வீடுகளை அமைப்பதற்கும், விவசாயத்தினை மேற்கொள்ளுவதற்கும், வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு உதவும் வகையில் காணி நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.

இன்றைய இந்த ஜனநாயகமான தருணத்தினை நாம் விரிவுபடுத்தி, திட உருவாமாக்கி, நிலைத்திருக்கக் கூடிய ஓர் அரசியல் செயற்பாடாக மாற்றியமைக்க வேண்டும். நீண்ட காலத்திலே கட்டமைப்பு மாற்றங்கள் உருவாகும் வகையில் நாம் எமது கோரிக்கைகளை முன்னிறுத்த வேண்டும். பொதுப் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். இராணுவத்திற்கான நிதியைக் குறைத்து, இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவித்து, இராணுத்தினரைப் படைமுகாம்களுக்குள் மட்டுப்படுத்தி, இராணுவமய நீக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும். மையங்களிலிருந்து விளிம்புகளை நோக்கி அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை, அதிகாரத்தை ஒரு மையத்தில் குவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட 20ஆம் சீர்திருத்தம் போன்றவை ஒழிக்கப்பட வேண்டும். மாறாக, தீர்ப்பாயங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள், சுயாதீன நீதித்துறை போன்ற வழிமுறைகள் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பன்மைத்துவம் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

இன்றைய வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத்திலே, எம்மத்தியிலே தோழமையுணர்வு மேலோங்க வேண்டும் என மக்களாக நாம் அழைப்பு விடுக்கின்றோம்! எங்கள் எல்லோருக்கும் நியாயமான, ஜனநாயகமான ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக, தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், பெண்கள் குழுக்கள், ஒதுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட, அதிருப்திக்குள்ளான சமூகங்கள் என அனைவரையும் உள்ளடக்கிய ஒரு இயக்கத்தின் உருவாக்கத்திற்காக நாம் அழைப்பு விடுகின்றோம்.“ என்று தெரிவித்து அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர்.

# ஒரு மணி நேரத்தில் மதுரையிலிருந்து சென்னை வந்த கல்லீரல்..

## அறுவை சிகிச்சை மேற்கொண்டு சாதித்த அரசு மருத்துவர்கள்

இந்தியா செய்திகள் India News



சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 52 வயது நோயாளிக்கு கல்லீரல் பிரச்சனை இருந்து வந்தது. இதனால் அவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஆனால், அவருக்கு பொருந்தும் வகையிலான கல்லீரல் கிடைக்கவில்லை. இந்நிலையில், மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 39 வயது நபர், கடந்த 10ஆம் தேதி மூளைச்சாவு அடைந்தார். அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்தனர். இந்த தகவலை சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு மதுரை மருத்துவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து நேற்று முன்தினம் ஸ்டான்லி மருத்துவக் குழுவுடன் இணைந்து மதுரையிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் ஒரு மணி நேரத்தில் அவரது கல்லீரல் கொண்டுவரப்பட்டது. பின்னர் சென்னை விமான நிலையத்தில் தயார் நிலையில் இருந்த 108 ஆம்புலன்ஸ் மூலம், ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக கொண்டு வரப்பட்டது.

கல்லீரல் அறுவை சிகிச்சை துறை பேராசிரியர் ஜஸ்வந்த் தலைமையில், மயக்க மருந்து துறை பேராசிரியர் மாலா, கல்லீரல் மருத்துவ சிகிச்சைப் பிரிவு தலைவர் ரேவதி உள்ளிட்டோர் கொண்ட மருத்துவ குழுவினர் 12 மணி நேரம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். இதில் வெற்றியும் கண்டனர். இதுகுறித்து ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் பாலாஜி கூறுகையில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைத் துறையில், 2009ஆம் ஆண்டு முதல் இதுவரை 81 பேருக்கு உடல் உறுப்பு தானம் பெற்று, மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்த நபர், தீவிர சிகிச்சை பிரிவிலிருந்து மாற்றப்பட்டுள்ளார். இது அனைவரின் கூட்டு முயற்சியால் கிடைத்த வெற்றி என்றார்.

அரசு மருத்துவர்களுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.


# ஏ.ஆர்.ரகுமானுக்கு அரசியல்ரீதியாக, மதரீதியாக தனிநபர் தாக்குதல் தொடுக்க முற்பட்டால் கடும் எதிர்விளைவு! சீமான் எச்சரிக்கை

இந்தித்திணிப்புக்கெதிரானக் கருத்தைக் கூறியதால் சகோதரர் ஏ.ஆர். ரகுமானுக்கு அரசியல்ரீதியாக நெருக்கடி கொடுக்கவோ, மதரீதியாகத் தனிநபர் தாக்குதல் தொடுக்கவோ முற்பட்டால் கடும் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும்! - சீமான் எச்சரிக்கை

இந்தித்திணிப்புக்கெதிரான நிலைப்பாட்டை முன்வைத்து, கருத்துத் தெரிவித்ததற்காக அன்புச்சகோதரர் ஏ.ஆர்.ரகுமான் அவர்களைக் குறிவைத்து, இந்துத்துவக்கூட்டமும், வலதுசாரியினரும் தனிநபர் தாக்குதல் தொடுப்பதும், அவரை அச்சுறுத்த முனைவதுமான போக்குகள் கடும் கண்டனத்திற்குரியது. நாட்டின் ஆட்சியும், அதிகாரமும் தங்கள் வசமிருக்கும் துணிவிலும், திமிரிலும் வெளிப்படும் காழ்ப்புணர்ச்சி கொண்ட செயல்பாடுகளையும், வன்மப்பரப்புரைகளையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என உறுதிபடத்தெரிவிக்கிறேன்.

ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் ஒற்றையாட்சி முறையின் நீட்சியாக இந்தியை எல்லாத்தளங்களிலும் மெல்ல மெல்லத் திணிக்க முற்படுவதும், மாநில மொழிகளை மூன்றாந்தரமாய் நடத்தி, சமவாய்ப்பையும், சமவுரிமையையும் அளிக்க மறுப்பதுமான செயல்பாடுகளுக்கு நாடெங்கிலும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில், சகோதரர் ஏ.ஆர்.ரகுமான் அவர்கள் ஒட்டுமொத்த தமிழர்களின் எண்ணவோட்டத்தையே தனது கருத்துகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். ஆங்கிலத்துக்கு மாற்றாக, இந்தியாவின் இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டுமெனக் கூறிய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கருத்துப் பதிலுரைக்கும் விதமாக, தமிழை இணைப்பு மொழியாக்கக் கோரியதை முழுமையாக வரவேற்று, வழிமொழிகிறேன். இந்தியாவின் மிக மூத்த மொழி தமிழ்தான்! எல்லாவித இலக்கண, இலக்கியங்களையும் கொண்டு, செழுமையோடு, எவ்விதச்சார்புமற்று தனித்து இயங்கவல்ல உயர்தனிச்செம்மொழியாக விளங்கும் தமிழை, இந்திய நாட்டின் ஆட்சி மொழியாக்க வேண்டுமென எங்கள் மூதாதை "கண்ணியமிகு" காயிதே மில்லத் தொடங்கி, பலர் இந்தியப் பாராளுமன்றத்திலேயே உரைத்துள்ள நிலையில், இந்தியை புகுத்தத் துடிக்கும் ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் கொடுஞ்செயலை வன்மையாக எதிர்க்கிறேன்.

உலகில் எந்த இனத்துக்கும் இல்லாதவகையில் மிகப்பெரும் உயிரீகங்களை நிகழ்த்தியப் பாரிய மொழிப்போருக்குச் சொந்தமான தமிழ்நாடும், தமிழர்களும் இந்தித்திணிப்பை ஒருநாளும் ஏற்க மாட்டார்கள். கொடுங்கோல் பாஜக அரசு, அதனையும் மீறி வலுக்கட்டாயமாக இந்தியைத் திணிக்க முற்பட்டால் தமிழர் மண் மீண்டுமொரு மொழிப்போரை சமகாலத்தில் நிகழ்த்திக்காட்டுமென்பது திண்ணம். ஆன்மீகப்பற்று கொண்ட பாம்பன் அடிகள்கூட, "இந்தி முதலிய வேறு பாடைகளை யிந்நாட்டகத்தும் விருத்தி செய்ய விழையும் வடநாடரது சுயநலத்தினை யாதரித்தல் தமிழர் கடன்மை யன்றென்பதூஉம்" என 1899 லேயே பாடி, இந்தித் திணிப்புக்கெதிரான தனது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளார். இந்தித்திணிப்புக்கெதிராக, மொழிப்போர் களத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த எங்கள் முன்னோர்களான நடராசனும், தாளமுத்துவும், கீழப்பழுவூர் சின்னசாமியும், சிவகங்கை இராசேந்திரனும் வாழ்ந்த நிலமிது.



இம்மண்ணும், மக்களும் ஒருநாளும் இந்தியை ஏற்கவோ, அனுமதிக்கவோ மாட்டார்கள். ஆதிக்கம் எந்தவகையில் திணிக்கப்பட்டாலும் அதனை எதிர்த்து, தனித்துவத்தோடு சமர்செய்வது என்பது தமிழர்கள் எங்களது மரபியல் குணம். அந்தவகையில், தமிழின் மீது மாறாப் பற்றுகொண்டு திகழும் சகோதரர் ஏ.ஆர். ரகுமான் அவர்களின் கருத்தென்பது தனிப்பட்ட அவருடையக்கருத்தல்ல் அது தாய்த்தமிழகத்தின் ஒட்டுமொத்த உணர்வின் பிரதிபலிப்பு! அவரும் தனிப்பட்ட ஒரு நபரல்ல் உலகெங்கும் வேர்பரப்பி வாழும் தமிழ்ப்பேரினத்தின் பெருமைமிகு கலை அடையாளம் சகோதரர் ஏ.ஆர்.ரகுமான்.

ஆகவே, தமிழ்ப்பேரினத்தின் கலை அடையாளங்களுள் ஒருவராகவும், உலகம் முழுவதும் அறியப்பட்டப் பெரும் படைப்பாளியாகவும் விளங்கும் சகோதரர் ஏ.ஆர்.ரகுமான் அவர்கள், மொழிப்பற்றின் விளைவினால் உதிர்த்தக் கருத்துகளுக்காக, அவருக்கெதிராகத் தனிநபர் தாக்குதலும், அச்சுறுத்தலும் விடுக்கப்படுமானால், அது தமிழர்களின் இனமானத்தைச் சீண்டிப்பார்ப்பதாகும். அவருக்கு அரசியல்ரீதியாக நெருக்கடி கொடுக்கவோ, அவர் மீது மதரீதியாகத் தனிநபர் தாக்குதல் தொடுக்கவோ முனைந்தால் கடும் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




# முதல் பயணத்தை தொடங்கிய இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் வணிக விமானம்

அலையன்ஸ் ஏர் நிறுவனத்தின் மேட் - இன் - இந்தியா விமானமான டோர்னியர் 228 (Dornier 228) ஏப்ரல் 12, செவ்வாய் கிழமையன்று திப்ருகர் - பாசிகாட் வழித்தடத்தில் தனது முதல் வணிகப் பயணத்தை மேற்கொண்டது. இந்த பயணத்தில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஆன ஜோதிராதித்ய சிந்தியாவும் ஒரு பயணியாக தன்னை இணைத்து கொண்டார்.

அரசாங்கத்தின் ஆர்சிஎஸ்- யுடிஏஎன் (RCS-UDAN) திட்டத்தின் கீழ் விமானங்களை இயக்கும் ஏர் இந்தியாவின் பிராந்தியப் பிரிவு தான் அலையன்ஸ் ஏர் (Alliance Air) என்பதும், உரிம ஒப்பந்தத்தின் கீழ் ஹெச்ஏஎல் (HAL) மூலம் தயாரிக்கப்பட்ட ஒரு விமானம் தான் டோர்னியர் 228 என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசால் நடத்தப்படும் அலையன்ஸ் ஏர் நிறுவனம், 17 இருக்கைகள் கொண்ட இரண்டு டோர்னியர் 228 விமானங்களை குத்தகைக்கு எடுப்பதற்கு, அரசாங்கத்துக்கு சொந்தமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் கடந்த பிப்ரவரி மாதம் ஒப்பந்தம் செய்தது. டோர்னியர் 228 ஆனது இந்திய விமானப்படையால் இயக்கப்படும் டிஓ-228-ஐ அடிப்படையாகக் கொண்டது என்பதும், இதுவரையிலாக டோர்னியர் 228 விமானங்கள் ஆயுதப்படைகளால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தன் முதல் பயணத்திலேயே, அசாமின் திப்ருகர் மற்றும் அருணாச்சல பிரதேசத்தின் பாசிகாட்டை இணைத்துள்ள இந்த விமானம், வரும் காலங்களில் மேலதிக வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் என்று அலையன்ஸ் ஏர் நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் சிவில் நடவடிக்கைகளுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானங்களை இயக்கும் இந்தியாவின் முதல் வணிக விமான நிறுவனமாக இது இருக்கும் என்பதையும் அலையன்ஸ் ஏர் நிறுவனம் குறிப்பிட்டு உள்ளது.

டோர்னியர் 228-இன் இந்த முதல் பயணம் மற்றும் ஃப்ளையிங் ட்ரெயினிங் ஆர்கனைசேஷனின் திறப்பு விழாவில் விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, அருணாச்சல பிரதேச முதல்வர் பெமா காண்டு மற்றும் அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். திப்ருகர் - பாசிகாட் - லிலாபரி - திப்ருகர் வழித்தடத்தில் வருகிற ஏப்ரல் 18-ஆம் தேதி முதல் வழக்கமான விமானச் செயல்பாடுகள் தொடங்கப்பட உள்ளன. மேலும் திப்ருகார் விமான நிலையத்தை மையமாக கொண்டு அருணாச்சல பிரதேசத்தில் உள்ள தேசு, மெச்சுகா, ஜிரோ மற்றும் டுடிங்கிற்கு இந்த விமான சேவைகள் விரிவுபடுத்தப்படும். ஹெச்ஏஎல் கூற்றுப்படி, இந்த "வெர்சடைல்" விமானமானது குறுகிய டேக்-ஆஃப் மற்றும் லேண்டிங் திறன்களைக் கொண்டுள்ளது மற்றும் செமி-ப்ரிபேர்டு ஓடுபாதைகளில் இருந்து புறப்படும் மற்றும் தரையிறங்கும் திறன் கொண்டது.

உண்மையில் டோர்னியர் ஒரு ஜெர்மன் விமானம் ஆகும், இது 1990 களின் முற்பகுதி வரை இந்தியா முழுவதும் 100க்கும் மேற்பட்ட விமான நிலையங்களுக்கு சேவை செய்ய - நீண்ட காலமாக செயல்படாத பிராந்திய விமான நிறுவனமான வாயுடுட் (Vayudoot) மூலம் - முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டில், ஹெச்ஏஎல் இந்த விமானங்களுக்கான உற்பத்தி உரிமத்தை பெற்று, அவற்றில் 125 விமானங்களை சிவிலியன் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக அசெம்பிள் செய்தது. தற்போது பயன்படுத்தப்படும் விமானங்கள் அதன் முன்னோடிகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் மேம்பட்ட பதிப்பாகும்.

# மாங்கனித் தீவின் மறுபாதி வடக்கில் ஈழத் தமிழ்ச் சினிமா எழுந்து நடக்கத் தொடங்கியுள்ளது...






தமிழகத்து தமிழ்ச் சினிமாவில் கோடிக் கணக்கில் சம்பளத்தை கதாநாயர்கள் ஈட்டிக் கொள்ளும் நிலை பல ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

ஆனாலும் அந்த திரைப்படங்களைப் பார்த்தும் ரசித்தும் கொண்டாடும் இலட்சக் கணக்கான ஈழத்தமிழ் ரசிகர்கள். தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இருந்தாலும். எமது ஈழத் தமிழ்ச் சினிமாவை தட்டி எழுப்பும் எண்ணம் அவர்களிடத்தில் தாழ்ந்துதான் காணபபடுகின்றது.

ஈழத் தமிழ்ச் சினிமாவை மீண்டும் உயர்த்தி விடவும் அதற்காக ஒரு திரைப்படத்துறையை உருவாக்க வேண்டும் என்று சிந்திப்பவர்களும் அவ்வப்போது முன்வந்து குரல் எழுப்பி நின்றாலும். அந்தக் குரல்கள் சில நாட்களிலேயே அடங்கிவிடுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்து திரைப்படங்களுக்கு இணையாக ஈழத்து தமிழ்த் திரைப்படங்கள் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும். திரையிடப்படுகின்ற "தமிழ்த்திரைப்பட விழாக்கள்" பல நாடுகளில் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அவற்றில் பல விருதுகளைத் தட்டிக் கொண்ட ஈழத்தவர்களின் திரைப்படங்களுக்காக நாம் கைகளை தட்டிப் பாராட்டுக்களை மட்டும் வழங்கியிருந்தோம்.

ஆனால். தற்போது எம்மிடத்தில் ஒரு பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிவர்களாக நாங்கள் உள்ளோம் என்பதை நாம் அறிய வேண்டும்.

இலங்கை என்னும் மாங்கனித் தீவின் மறுபாதி வடக்கில். ஈழத் தமிழ்ச் சினிமா எழுந்து நடக்கத் தொடங்கியுள்ளதுதை உணர்த்தும் வண்ணம் அங்கு தயாரிக்கப்பெற்ற ராஜ் சிவராஜ் அவர்களின் இயக்கத்தில் வெளியான "புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" என்னும் திரைப்படம் கனடாவின் ஸ்காபுறோ நகரில் திரையிடப்பட்ட பின்னர் எழுந்துள்ள ஆரோக்கியமான விமர்சனங்களே. தற்போது எம்மிடத்தில் ஒரு பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்திய வண்ணம் உள்ளன.

திரைப்படத் தயாரிப்பு மற்றும் இயக்கம் போன்ற துறைகளில் திரைப்படக் கல்லூரிகளில் கற்றுத் தேர்ந்துள்ள ராஜ் சிவராஜ் மற்றும் யாழ்ப்பாணத்து தோழர்களின் கடின-மான உழைப்பில் வெளிவந்துள்ள புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படம் பலரை யோசிக்கச் செய்துள்ளது என்றால் அது மிகையான வார்த்தைகள் அல்ல..

யாழ் மண்ணின் இயக்குனர் ராஜ் சிவராஜ் அவர்கள் கனடாவின் ரிவிஜ தொலைக் காட்சிக்கு அளித்த நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளவாறு ஈழத்திலும் புலம் பெயர் நாடுகளிலும். ஈழத் தமிழ்ச் சினிமா தயாரிப்பில் ஆர்வம் கொண்டவர்கள் இணைந்து கரம் கோர்த்து "அனைத்துலக தமிழ்த் திரைப்படத்துறை" ஒன்றை உருவாக்குவதன் மூலம் இருபகுதியினரும் பல பயன் தரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தை தந்துள்ளது இந்த புத்தி கெட்ட மனிதர் எல்லாம்" திரைப்படம்...

இந்த மாற்றத்தை சம்பந்தப்பட்ட துறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள் மனதிற் கொண்டு மேலும் பல மாற்றங்களைக் காண காத்திருக்க வேண்டும்.

- ***மலையன்பன்*** - *Canada*





A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

## கனடா வெஸ்ற்கோஸ்ற் சுற்றுலா

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின்
இரண்டாவது கிழமையில் றொறன்ரோவில் இருந்து புறப்பட்டு
மூன்றாவது கிழமையில் திரும்பி வருதல்.



British Colombia, Alberta ஆகிய 2 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களைப் பார்வையிடலாம். Vancouver-Rockies-Banff-Lake Louise-Icefield-Vicoria-Chemainus-Whistler and More...

| 7 Days | 8 Days | 9 Days | 10 Days | 11 Days | 12 Days | 13 Days | 14 Days | 15 Days |
|---|---|---|---|---|---|---|---|---|
| Reg. Price C$ 2500.00 | Reg. Price C$ 3000.00 | Reg. Price C$ 3500.00 | Reg. Price C$ 4000.00 | Reg. Price C$ 4500.00 | Reg. Price C$ 5000.00 | Reg. Price C$ 5500.00 | Reg. Price C$ 6000.00 | Reg. Price C$ 6500.00 |
| Sale Price C$ 2250.00 | Sale Price C$ 2500.00 | Sale Price C$ 2750.00 | Sale Price C$ 3000.00 | Sale Price C$ 3250.00 | Sale Price C$ 3500.00 | Sale Price C$ 3750.00 | Sale Price C$ 4000.00 | Sale Price C$ 4250.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு இந்த விலை *3 to 4 Star Hotel or Motel *Including All Admission

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.
விமான சீட்டு தங்குமிட வசதி பேருந்து சேவை காலை உணவு மதிய உணவு இரவு உணவு

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# இறம்பொடை நீர்வீழ்ச்சியில் யுவதியின் சடலம் மீட்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News





நுவரெலியா - கொத்மலை, இறம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மூன்று பேரில், ஒருவரினது சடலம் புதன்கிழமை (13) காலை மீட்கப்பட்டுள்ளது.

மற்றைய யுவதி ஒருவரையும், இளைஞரையும் கண்டுபிடிக்க தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் ஊழியர்கள் 48 பேர் பேருந்து ஒன்றில், நுவரெலியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர். நுவரெலியா சென்று மீண்டும் செவ்வாய்க்கிழமை (12) வவுனியாவுக்கு திரும்பிய வழியில் இறம்பொடை நீர்வீழ்ச்சியை பார்வையிட்டுள்ளனர்.

அதன்போது, அவர்களில் 7 பேர் கொண்ட குழுவினர் நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து அங்கிருந்த சிலர் அவர்களில் நால்வரை காப்பாற்றி கரைசேர்த்துள்ளனர்.

இந்நிலையில், காணாமல்போயிருந்த மூவரில் யுவதியொருவரின் சடலம், கற்பாறையொன்றில் சிக்கியிருந்த நிலையில் புதன்கிழமை (13) காலை மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா, கல்மடு - ஈஸ்வரிபுரம் பகுதியைச் சேர்ந்த பொன்னுத்துரை மதுசாலினி (21) என்பவரென அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

# கல்முனையில் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை திருடி மூடையாக கட்டிச் சென்ற சம்பவத்தில் — மூவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் உதிரிப்பாகங்களை திருடிய 3 சந்தேக நபர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

புதன்கிழமை (13) அதிகாலை வேளை அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை பிரதான வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையத்தை உடைத்து திருடப்பட்டுள்ளதாக பெரியநீலாவணை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடையில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான உதிரிப்பாகங்களை நுதனமாக திருடி வந்த சந்தேக நபர்கள் நால்வர் அடையாளம் காணப்பட்டதுடன் அதில் மூவரை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்து கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை தொடர்ந்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அத்துடன் இச்சம்பவத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடையில் 13 வருட காலமாக வேலை செய்து வந்தார் எனக் கூறப்படும் நபர் ஒருவரும் தனது சக நண்பர்களுடன் இணைந்தே அதிகாலை குறித்த கடையை உடைத்து உதிரிப்பாகங்களை உர மூடைகளில் கட்டிக்கொண்டு செல்ல தயாரான நிலையில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் ஏனைய சந்தேக நபர்கள் பொதுமக்களினால் பிடிக்கப்பட்ட சந்தேக நபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் பொலிஸாரினால் பெரியநீலாவணை மயானத்துக்கு அருகில் மறைந்து இருந்த வேளை கைதாகினர். மற்றுமொருவர் தலைமறைவாகி உள்ளதாகவும் அச்சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும் திருடப்பட்ட உதிரிப்பாகங்களை சந்தேக நபர்கள் மூட்டை மூட்டையாக அதிகாலை வேளை எடுத்துச் சென்ற நிலையில் வீதியில் நின்றவர்கள் சந்தேகத்துக்கிடமான விசாரித்தபோது இந்த விடயம் தெரிய வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



குறித்த சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஜீ.துசார திலங்க ஜெயலால் வழிநடத்தலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டி.டினேஸ் தலைமையிலான குற்றத் தடுப்பு பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை தேடி கைது செய்ததுடன் திருட்டு சம்பவத்துக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் கைப்பற்றினர்.

அத்துடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மீட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் சுமார் 19 மற்றும் 24 வயதுடையவர்கள் எனவும் பெரியநீலாவணை சேர்ந்தவர்கள் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் கைதான 3 சந்தேக நபர்களை புதன்கிழமை (13) மாலை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளை 14 நாட்கள் சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற்ற சித்திரை புத்தாண்டு விசேட பூஜை

இலங்கை செய்திகள் Sri Lanka News

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வியாழக்கிழமை ஆலயங்களில் விசேட பூஜைகள் இடம் பெற்றுள்ளது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் வியாழக்கிழமை (14) காலை விசேட பூஜைகள் நடைபெற்றன.

ஆலயத்தின் பிரதமகுரு சிவ ஸ்ரீ கருணானந்த குருக்கள் தலைமையில் இன்று காலை 8.41 மணிக்கு விசேட ஆராதனைகள் நடை பெற்றதை தொடர்ந்து விசேட சித்திரைப் புத்தாண்டு பூஜை இடம்பெற்றன.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நீங்கி நாட்டின் அரசும் மக்களும் சிறக்க விசேட பிரார்த்தனைகளும் முன் னெடுக்கப்பட்டதோடு பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் கைவிசேடங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

**- மன்னார் நிருபர்**

# றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மேலும் இருவரின் சடலங்கள் மீட்பு



வவுனியாவிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற வேளை, நுவரெலியா - கொத்மலை, றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மேலும், இருவரின் சடலங்கள் 14.04.2022 மதியம் மீட்கப்பட்டது என கொத்மலை காவல்துறையினர் தெரிவித்தனர்.

றம்பொடை நீர்வீழ்ச்சியில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மூவரில் புதின்கிழமை அன்று யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இருவரின் சடலம் மீட்கப்படாத நிலையில் நேற்றைய தினம் பெய்த மழை மற்றும் நீர்வீழ்ச்சியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தேடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டது.

14.04.2022 அன்று மூன்றாவது நாளாகவும் காலை ஆரம்பிக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது மதியம் யுவதி மற்றும் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் வவுனியா நெடுங்கேனியைச் சேர்ந்த புவனேஸ்வரன் வினோதனி (வயது - 18), வவுனியாவை சேர்ந்த விதுசான் (வயது - 21) என தெரியவந்துள்ளது.

கடற்படையினர், இராணுவத்தினர், காவல்துறையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து முன்னெடுத்த தேடுதலின் போதே இவர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் சடலங்கள் கொத்மலை நீர்தேக்கத்தின் மின் உற்பத்திக்காக நீரை வழங்கும் நீர் தாங்கியிலிருந்தே மீட்கப்பட்டதாக கொத்மலை காவல்துறையினர் தெரிவித்தனர்.

சடலங்கள் மீதான மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைக்காக கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனைகளின் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என காவல்துறையினர் மேலும் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணிபுரியும் இளைஞர், யுவதிகள் 48 பேர் பேருந்து ஒன்றில், புத்தாண்டை முன்னிட்டு, நுவரெலியாவுக்கு 12.04.2022 அன்று சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு சுற்றுலா செல்லும் வழியில், நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பகுதியான இறம்பொடையில் உள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் பஸ்ஸை நிறுத்திவிட்டு, நீர்வீழ்ச்சியையும், அதனை சூழவுள்ள இயற்கை பகுதிகளையும் பார்வையிடுவதற்கு இளைஞர், யுவதிகள் குழுக்களாக பிரிந்து சென்றுள்ளனர்.

இதில் ஆறு யுவதிகளும், ஒரு இளைஞனுமாக 7 பேர் கொண்ட குழுவினர் றம்பொடை நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஆற்றுப் பகுதியில் நீராடச்சென்றுள்ளனர். திடீரென நீர்வீழ்ச்சி - ஆற்றுப் பகுதியில் நீர்மட்டம் அதிகரித்ததால் அவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் கூக்குரல் எழுப்ப, அப்பகுதியில் இருந்து சிலர் வந்துள்ளனர்.

அதற்குள் 4 யுவதிகளை அவர்களுடன் சென்ற இளைஞர் காப்பாற்றி கரைசேர்த்துள்ளார். ஏனைய இரு யுவதிகளையும் காப்பாற்ற முற்பட்டவேளையிலேயே மூவரும் நீரில் அடித்துச்செல்லப்பட்டனர். இந்த நிலையில் இவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நெடுங்கேனியைச் சேர்ந்த புவனேஸ்வரன் வினோதனி (வயது - 18), வவுனியா, கல்மடு - ஈஸ்வரிபுரம் பகுதியைச் சேர்ந்த பொன்னுதுரை மதுசாலினி (வயது- 21) ஆகிய இரு யுவதிகளும், வவுனியாவை சேர்ந்த விதுசான் (வயது - 21) ஆகிய இளைஞனுமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

இந்தியா செய்திகள் India News

# வீடுவீடாக மிதிவண்டியில் சென்று உணவு விநியோகித்த ஆசிரியருக்கு சமூகதள பதிவால் ரூ.75,00பெறுமதியான மோட்டார் சைக்கிள் கிடைத்தது





ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஆதித்யா சர்மா என்ற 18 வயது இளைஞர், zomato மூலம் உணவு ஆர்டர் செய்துள்ளார். அவரது உணவைக் கொண்டு வந்த zomato உணவு விநியோகிப்பவர்,

கடும் வெயிலில் சைக்கிளில் வந்தது வாடிக்கையாளரான ஆதித்யா சர்மாவை அதிர்ச்சியாக்கியது. அவர் பெயர் "துர்கா சங்கர் மீனா". இவர் 12 வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றி பின்பு கோவிட் பெருந்தொற்றின் பரவலால் தன் வேலையை இழந்து பின்னர் zomato-வில் வேலைக்குச் சேர்ந்துள்ளார். அதன்பின் வாடிக்கையாளர் ஆதித்யா சர்மா, தனது சமூகவலைதள பக்கத்தில் zomato டெலிவரி ஏஜென்ட் "துர்கா சங்கர் மீனா" பற்றி பதிவு ஒன்றைப் பகிர்ந்தார். இதைக் கண்ட சமூகவலைதள பயனர்கள் கடும் வெயிலில் சைக்கிள் பயணம் செய்ய வேண்டாம் இருசக்கர வாகனம் வாங்கிக்கொள்ளுமாறு கூறியுள்ளனர். ஆனால் இருசக்கர வாகனம் வாங்க தன்னிடம் பணம் இல்லை என்று துர்கா சங்கர் கூறியதையடுத்து ஆதித்யா சர்மா சமூக வலைதளத்தில் இவருக்காக நன்கொடை திரட்டியுள்ளார். ஆச்சர்யம் என்னவென்றால் துர்கா சங்கரின் கடும் உழைப்பைப் பாராட்டி முகம் தெரியாத சமூக வலைதளப் பயனர்கள் பலர் மொத்தம் ரூ.75,000 நன்கொடையாக வழங்கியுள்ளனர். இந்தப் பணத்தை திரட்டிய ஆதித்யா சர்மா துர்கா சங்கருக்கு இருசக்கர வாகனத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார். மேலும் அனைவருக்கும் நன்றி தெரிவித்து துர்கா சங்கர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டதாகவும் பதிவிட்டிருக்கிறார். மனித நேயம் இருக்கும் வரை இங்கு ஏழை என்று யாரும் இல்லை என்று 18 வயதேயாகும் ஆதித்யா சர்மாவின் இந்த மனிதநேயச் செயலுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

# மதுரை மீனாட்சி — சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது




மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சித்திரை திருவிழாவையொட்டி, மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. மதுரை மீனாட்சியம்மன் கோவில் சித்திரை திருவிழாவானது கடந்த 5ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் அம்மனும் சுவாமியும் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி நான்கு மாசி வீதிகளிலும் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்துவந்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளான மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் கடந்த 12 ஆம் தேதியும் நடைபெற்றது. நேற்றைய தினம் திக்கு விஜயம் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் இன்று நடைபெற்றது. முன்னதாக சுவாமிக்கும் அம்பாளுக்கும் பட்டு சாத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதை தொடர்ந்து, சுந்தரேசுவரர் சார்பிலும் மீனாட்சியம்மன் சார்பிலும் பிரதிநிதிகளாக இருந்த சிவாச்சாரியார்கள் மாலை மாற்றும் வைபவமும் நடைபெற்றது. பின்னர் மங்கல வாத்தியங்கள் முழங்க மீனாட்சியம்மனுக்கு வைர கற்கள் பதித்த திருமங்கலநாண் அணிவிக்கப்பட்டு மேளதாளத்துடன் பக்திகோசம் முழங்க மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

திருக்கல்யாணம் நடைபெற்றதையடுத்து சுமங்கலி பெண்கள் தங்களுடையை மங்கலநாண்களை புதுப்பித்து அணிந்துகொண்டனர். திருக்கல்யாண நிகழ்வின் போது கோவில் முழுவதிலும் வேத மந்திரங்கள் ஒலிக்க பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்..திருக்கல்யாணத்தை தொடர்ந்து சிம்மக்கல் சேதுபதி பள்ளியில் 1 லட்சம் பக்தர்களுக்கு கல்யாண விருந்து நடைபெற்றது.

# 40 சதவீத கமிஷன் விவகாரத்தில் காண்டிராக்டர் தற்கொலை: பதவி விலகுகிறார், கர்நாடக மந்திரி



லஞ்சப் புகார் எதிரொலியால் கர்நாடக பாஜக அமைச்சர் ஈஸ்வரப்பா ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

கர்நாடகத்தின் பெலகாவி மாவட்டம் இண்டல்கா பகுதியைச் சேர்ந்தவர் சந்தோஷ் கே.பாட்டீல். காண்டிராக்டரான இவர் மாநில கிராம வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மந்திரியான ஈசுவரப்பா வளர்ச்சி பணிகளை செய்த ஒப்பந்த தொகையில் 40 சதவீதம் கமிஷனை கேட்பதாக பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், உடுப்பியில் உள்ள ஒரு ஓட்டலில் சந்தோஷ் ஒரு போத்தலில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். மேலும் அவர் தான் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு தனது சாவுக்கு மந்திரி ஈசுவரப்பாதான் காரணம் என்று உருக்கமாக ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார்.

இதையடுத்து, மந்திரி ஈசுவரப்பாவை உடனே பதவி நீக்கம் செய்ய வேண்டும், அவரை கைது செய்து போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் குதித்தன.

இதைத்தொடர்ந்து ஈஸ்வரப்பா மீது தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவும் செய்யப்பட்டது. மந்திரி ஈஸ்வரப்பா பதவியில் இருந்து நீக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கடும் அழுத்தம் கொடுத்தன. எனினும், நான் பதவியில் இருந்து விலகமாட்டேன் என்று ஈஸ்வரப்பா கூறிவந்தார்.

இந்த நிலையில், தனது மந்திரி பதவியை ராஜினாமா செய்வதாக ஈஸ்வரப்பா அறிவித்துள்ளார். முதல்வர் பசவராஜ் பொம்மையை சந்தித்து ராஜினாமா கடிதத்தை அளிக்க இருப்பதாகவும் தனக்கு ஒத்துழைப்பு அளித்த அனைவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஈஸ்வரப்பா தெரிவித்திருக்கிறார்.

# தமிழ் வளர்த்த பெரியோர்கள் பற்றிய உரைகளைக் கேட்டு மகிழ நாம் தயாராவோம்!

தமிழ் வளர்த்த பெரியோர்கள் பற்றி. கருத்துச் செறிவும் உயர்வான உள்ளடக்கமும் கொண்ட உரைகளைக் கேட்டு மகிழ நாம் தயாராவோம்!

உலகத் தமிழர்கள் நன்கு அறிந்த டாக்டர் சங்கரநாராயணன் அவர்கள் உரையாற்றுகின்றார். இணையவழி ஊடாக... மெய்நிகர் இணைப்பு தொடர்பான விபரங்களுக்கு இங்கு கீழே காணப்படும் அறிவித்தலைப் படிக்கவும்.

**வாழ்த்துக்கள் - கனடா உதயன் ஆசிரிய பீடம்**





# கோட்டா கோ கம: காலிமுகத் திடலில் ஓர் ஆர்ப்பாட்டக் கிராமம்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

**கோ**ட்டாவும் வீட்டுக்குப் போகவில்லை. கோட்டாவை வீட்டுக்குப் போ என்று கேட்டு ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களும் ஒரு தொகையினர் வீட்டுக்கு போகவில்லை. ஆனால் நாட்டின் மக்களில் பெரும்பாலானவர்கள் இப்பொழுதும் எரிவாயு, எண்ணெய், அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நிற்கிறார்கள். கோட்டாவின் உத்தியோகபூர்வ வீட்டை முற்றுகையிட்டு நிற்கும் மக்கள் அவர் வீட்டுக்குப் போகும் வரையிலும் நாங்களும் வீட்டுக்குப் போக மாட்டோம் என்று கூறிக்கொண்டு காலிமுகத்திடலில் ஒரு தற்காலிகக் கிராமத்தை அமைத்து அங்கேயே தங்கியுருக்கிறார்கள். அக்கிரமத்துக்கு "கோட்டா கோ கம" என்றுபெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து நின்று போராடக் கூடிய விதத்தில் தற்காலிக தங்குமிட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தற்காலிகக் கழிப்பறைகள் கட்டப் பட்டிருக்கின்றன. ஒரு நூலகமும் முதலுதவி மையமும் அங்குண்டு. இரவுகளில் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. இது நோன்பு காலம் என்பதனால் ஒருபகுதி முஸ்லிம் வர்த்தகர்கள் அக்குடியிருப்புக்கு உதவுகிறார்கள். தவிர கரு ஜயசூரியவால் நிர்வகிக்கப்படும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றும் உதவிகளைச் செய்வதாக தகவல். மேலும் ஜேவிபியின் மாணவர் அமைப்பும் அங்கே நிற்பதாக ஒரு தகவல். எனவே காலிமுகத்திடலில் தங்கியிருக்கும் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தங்குமிட வசதிகளும் ஏனைய வசதிகளும் ஏதோ ஒரு விதத்தில் கிடைப்பதாக தெரிகிறது.

கொழும்பில் உள்ள மேற்கத்திய நாட்டுத் தூதுவர்கள் தமது ருவிட்டர் பக்கங்களில் வெளியிடும் செய்திகள் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக காணப்படுகின்றன. மேற்கத்தைய ஊடகங்களும் இந்திய ஊடகங்களும் விவகாரத்தை பெருப்பித்து எழுதுகின்றன. குறிப்பாக சில தமிழக யூடியூப்பர்களின் கற்பனையை தாங்கமுடியவில்லை .யூடியூப்பர்களின் பொய்களை மில்லியன் கணக்கான மக்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். ஆனால் சரியான தகவல்களைத் தரும் யூடியூப்கள் அந்தளவு தூ ரம் பார்க்கப்படுவதில்லை. மொத்தத்தில் இந்திய ஊடகங்களும் மேற்கத்திய ஊடகங்களும் இலங்கை தொடர்பாக ஒரு எதிர்மறையான ஒரு பிம்பத்தை கட்டி எழுப்பி வருகின்றன.

நாட்டில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் பொதுவாக இரண்டு வகைப்பட்டவை. ஒருபகுதி ஆர்ப்பாட்டங்கள் கட்சிகளால் ஒழுங்கமைக்கப்படுகின்றன. மற்றொரு பகுதி தன்னியல்பானது. கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் மக்கள் தன்னியல்பாக தெருவுக்கு வருகிறார்கள். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டமும் அத்தகையதே.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் எந்தக் கட்சியின் கொடிகளும் காணப்படவில்லை. ஏந்தக் கட்சியின் கோ'மும் காணப்படவில்லை. ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான கோஷங்களும் சிங்கக்கொடியும் மட்டும்தான் காணப்படுகின்றன. அவர்களை இரண்டு விவகாரங்கள் இணைக்கின்றன ஒன்று ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான கூட்டுணர்வு. இரண்டாவது, இலங்கையர்கள் என்ற கூட்டுணர்வு. சிங்கக்கொடி அதைத்தான் பிரதிபலிக்கிறது. மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் கட்சி பிரமுகர்களைக் காணமுடியவில்லை. கட்சி முக்கியஸ்தர்களும் இதுபோன்ற ஆர்ப்பாட்டங்களில் சற்று விலகி நிற்பதாக தெரிகிறது. அரசியல் கட்சிகளை நீக்கிவிட்டு மக்கள் தன்னியல்பாக ஆர்ப்பாட்டங்களை, போராட்டங்களை முன்னெடுப்பது என்பது இலங்கைத் தீவில் மட்டும்தான் நடக்கும் ஒரு விவகாரம் அல்ல. ஆர்ப்பாட்டகாரர்கள் ஆர்ப்பாட்டக் களத்தில் தாற்காலிகமாகத் தங்கியிருந்து போராடுவதும் இதுதான் முதற்தடவையல்ல. அதற்கு உலக அளவிலும் பிராந்திய அளவிலும் உள்நாட்டிலும் முன்னுதாரணங்கள் உண்டு.

அமெரிக்காவின் வோல்ஸ்ட்ரீட் முற்றுகை போராட்டத்தில் அவ்வாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்காலிகமாக தங்கியிருப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. அரபு வசந்தத்திலும் அவ்வாறான ஏற்பாடுகள் காணப்பட்டன. இந்தியாவில் அண்மையில் வெற்றி பெற்ற விவசாயிகளின் போராட்டத்தின்போது டெல்லியில் விவசாயிகள் தற்காலிகமாக தங்கி இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு வேண்டிய பெரும்பாலான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அமைப்புக்களும் கட்சிகளும் உதவி புரிந்தன. இவை தவிர சில ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போராட்டத்தை நடாத்திய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் மெரினா கடற்கரையில் அவ்வாறு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இவையாவும் நாட்டுக்கு வெளியே உள்ள உதாரணங்கள். நாட்டுக்குள் தமிழ்ப் பகுதிகளில் கடந்த 12 ஆண்டுகளில் துலக்கமான மூன்று உதாரணங்களை இங்கே காட்டலாம். முதலாவது உதாரணம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடையது. பல ஆண்டுகளாக தொடர்ந்து வீதியோரங்களில் போராடும் அன்னையர்கள் மிகச்சிலர்தான். அவர்களும் வீதியோரத்தில் குடில்களை அமைத்து தங்கி இருக்கிறார்கள். அப்போராட்டங்கள் மக்கள் பயப்படவில்லை எனினும், தொடர்ச்சியாக நடப்பவை. அடுத்த போராட்டம் கேப்பாபிலவில் காணிகளை மீட்பதற்காக நடந்த போராட்டம். அதில் போராடிய பெண்கள் படையினரின் பெரும்படைத் தளங்களின் முட்கம்பி வேலிகளின் ஓரமாக அமர்ந்திருந்தது மழைக்கும் வெயிலுக்கும் தற்காலிக குடியிருப்புகளை அமைத்து தொடர்ச்சியாகப் போராடினார்கள். அப்படித்தான் இரணைதீவில் தமது வீடுகளை மீட்கச் சென்ற பெண்களும் போராடினார்கள். இந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதாரணங்களின் பின்னணியில்தான் காலிமுகத்திடலில் கோட்டா வீட்டுக்குப் போ என்ற கிராமம் உருவாக்கப்பட்டிருக்கிறது.


இப் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மத்தியில் துலக்கமான தலைமைகள் எதுவும் கிடையாது. அரசியல் அர்த்தத்தில் நிறுவனமயப்படாத போராட்டங்கள் அவை. அவற்றை நிறுவனமயப்படுத்தி அவற்றின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டுபோகத் தேவையான அரசியல் அடித்தளம் இதுவரையிலும் கட்டி எழுப்பப்படவில்லை. இது அப்போராட்டத்தின் அடிப்படை பலவீனங்களில் ஒன்று. இவ்வாறு வழிநடத்தப்படாத போராட்டங்கள் ஒன்றில் தாமாக சோர்ந்து போய்விடும். அல்லது பலப் பிரயோகத்தின் மூலம் ஒடுக்கப்படலாம். அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பலத்தை பிரயோகிக்கும் முடிவை இதுவரை எடுக்கவில்லை.

அதேசமயம் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தோடு இணக்கத்துக்கு வரத் தயாரில்லை. அவை அரசாங்கத்தை எப்படித் தோற்கடிக்கலாம் என்றே சிந்திக்கின்றன. ஆனால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அல்லது ஜனாதிபதியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகளிடம் போதிய பலம் இல்லை என்றே தெரிகிறது. அரசாங்கத்திடமிருந்து விலகி நிற்கும் அரசாங்கத்தின் முன்னாள் கூட்டாளிகளை நம்ப முடியாது. அரசாங்கம் அவர்களை ஏதோ ஒரு விதத்தில் சமாளித்து ஒரு புதிய அமைச்சரவையை உருவாக்கலாமா என்று தொடர்ந்து எத்தனிக்கிறது. இதனால் விவகாரம் இப்பொழுது ஒரு யாப்பு நெருக்கடியாக மாறிவருகிறது. யாப்பின்படி அரசாங்கத்தை கவிழ்ப்பது கடினம் என்று தெரிகிறது. அரசாங்கத்தை கவிழ்க்கத் தேவையான பலம் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை. யாப்புக்கு வெளியே போய் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் தயாரில்லை. இதனால் ஏறக்குறைய அரசற்ற ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இந்த அரசற்ற நிலையினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட மக்கள்தான் மேலும் பாதிக்கப்படுவார்கள். வர்த்தகர்கள் பொருட்களை விரும்பிய விலையில் விற்கிறார்கள். எரிபொருள் விநியோகம், எரிவாயு விநியோகம் எல்லாவற்றிலும் முறைகேடுகள் காணப்படுகின்றன.

ஒருவித அரசற்ற நிலை தொடர்ந்து நீடித்தால் பொதுமக்களின் தன்னியல்பான எழுச்சிகள் மேலும் அதிகரிக்கும். அதேசமயம் ஐஎம்எப் போன்ற உலகப் பொது நிறுவனங்களும் அரசாங்கத்துக்கு உதவத் தயங்கும். ஏனென்றால் பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கு பிரதான முன்நிபந்தனை அரசியல் ஸ்திரத்தன்மை ஆகும். பொருளாதார நெருக்கடிகள் இப்பொழுது யாப்பு நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமின்மை என்ற வளர்ச்சியை அடைந்துவிட்டன. எனவே இப்பொழுது உடனடியாகத் தேவைப்படுவது அரசியல் ஸ்திரத்தன்மைதான். ஆனால் அவ்வாறான ஓர் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசாங்கத்தால் முடியவில்லை. அதே சமயம் அப்படி ஒரு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தோடு ஒத்துழைக்க எதிர்க்கட்சிகளும் தயாரில்லை. எனவே அரசியல் ஸ்திரமின்மை அல்லது ஒருவித அரசற்ற நிலை தொடர்ந்தும் இருக்கப்போகிறது?

அதாவது கோட்டா வீட்டுக்குப் போக மாட்டார். அவரை வீட்டுக்கு அனுப்புவதற்காக காலிமுகத்திடலில் திரண்டிருக்கும் மக்களும் இப்போதைக்கு வீட்டுக்குப் போக முடியாது என்று தெரிகிறது.

இதே காலிமுகத்திடலில் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்பு தமிழ் சத்தியாக்கிரகிகள் வெண்ணிற ஆடைகளோடு தமது அறவழிப் போராட்டத்தை தொடங்கினார்கள். அவர்கள் தனிநாடு கேட்கவில்லை. சிங்கள மக்களுடைய சாப்பாட்டை தட்டிப் பறிக்கவில்லை. நாட்டைப் பிரிக்க சொல்லியும் கேட்கவில்லை.சிங்களம் மட்டும் உத்தியோகபூர்வ மொழியாக்கப்படுவதை எதிர்த்தார்கள். சத்தியாகிரகிகள் மத்தியில் மக்கள் பிரதிநிதிகளும் இருந்தார்கள். ஆனால் அப்போது இருந்த அரசாங்கம் என்ன செய்தது? அறவழிப் போராட்டத்தின் மீது குண்டர்களை ஏவிவிட்டது. குண்டர்கள் சத்தியாக்கிரகிகளை அடித்து மிதித்தார்கள். சிலருடைய காதுகளைக் கடித்தார்கள். போலீசார் எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டு நின்றார்கள். இவ்வாறான வன்முறைகளின் தொடர் விளைவாக நாடு மீளமுடியாத வன்முறைச் சுழலுக்குள் சிக்கியது. யுத்தத்தின் சங்கிலித்தொடர் விளைவே இப்பொழுதுள்ள பொருளாதார நெருக்கடி. சுமார் அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்களின் அறவழிப் போராட்டத்தை வன்முறை கொண்டு நசுக்கினார்கள். அதன் விளைவாக வந்த ஆயுதப் போராட்டத்தையும் 2009 ஆம் ஆண்டு நசுக்கினார்கள். அந்த வெற்றியை இதே காலிமுகத்திடலில் விமரிசையாகக் கொண்டாடினார்கள். இப்பொழுது எல்லா வெற்றிகளும் தோல்விகளாக மாறிவிட்டன. அரை நூற்றாண்டுக்கு மேலாக இறந்த காலத்திலிருந்து பாடம் எதையும் கற்காத ஒரு முட்டாள் தீவு மீண்டும் ஒருதடவை காலிமுகத்திடலில் போராடிக் கொண்டிருக்கிறது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வவுனியாவில் இடர் கால நிவாரண உதவி திட்டம் ஆரம்பித்து வைப்பு — வடக்கில் 1200 குடும்பங்களுக்கு வழங்க மெசிடோ நிறுவனம் நடவடிக்கை



வவுனியா மாவட்டத்தில் இடர் கால நிவாரண உதவி திட்டம் செவ்வாய்க்கிழமை (12) மதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜே.யாட்சன் பிகிறாடோ வவுனியாவில் உள்ள அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

முதல் கட்டமாக வவுனியாவில் உள்ள அலுவலகத்தில் வைத்து வைபவ ரீதியாக நூறு குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு இடர் கால நிவாரணம் கடந்த சனிக்கிழமை (09) காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்கில் பல நூற்றுக்கணக்கான பின்தங்கிய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களிலும் முதல் கட்டமாக 1200 குடும்பங்கள் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இடர் கால நிவாரண உதவியாக சுமார் 3500 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதற்கமைவாக மன்னாரில் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்டத்தில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**




# வவுனியாவில் அரசுக்கு எதிராக போராட்டம்

## நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்பு




அரசாங்கத்திற்கு எதிராகவும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் செவ்வாய்க்கிழமை (12ம் திகதி) காலை வவுனியாவில் கண்டன போராட்டம் இடம்பெற்றது.

குறித்த கண்டன போராட்டம் காலை 10 மணியளவில் வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன் இடம் பெற்றது. சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மற்றும் வவுனியா மாவட்ட மக்கள் இணைந்து குறித்த கண்டன போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அரசின் தூர நோக்கற்ற நிதி நிர்வாக முகாமைத்துவத்தால் நாடு பெரும் பொருளாதார பின்னடைவுடன் பட்டினிச்சாவை நோக்கியுள்ளது.

இதனை கண்டித்து தன்னிச்சையாக ஒன்று கூடிய பொதுமக்கள் இளைஞர் யுவதிகள் பாடசாலை மாணவர்கள் கோட்டபாய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம், பொருட்களுக்கு தட்டுப்பாடு, எரிபொருட்கள் எரிவாயு தட்டுப்பாடு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாமல் செய்தல், பொது மக்களுக்குச் சொந்தமான காணியை இராணுவம் அபகரிப்பு தொடர்பாக பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த போராட்டத்தில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, இளைஞர் யுவதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**




# "மருந்து தட்டுப்பாட்டால் மக்கள் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது"



நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து பொருட்கள் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வுகாணப்படாவிட்டால் பேரழிவு மரணங்களுக்கு வழிவகுக்கும் என இலங்கை வைத்திய சபை ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர உதவிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு ஐந்து யோசனைகளை சுகாதார செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

மருந்துகளுக்கு பணம் செலவழிக்க முன்னுரிமை கொடுப்பது கடினம் என மத்திய வங்கியின் புதிய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

புதிய நாணயக் கொள்கையை அறிவிக்கும் முகமாக ஏப்ரல் 8ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கலாநிதி நந்தலால் வீரசிங்க, பெரும்பான்மையான மக்களுக்கு அவசியமான, அத்தியாவசிய உணவு மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்கு வழங்கும் முன்னுரிமையை மருந்துகளுக்கும் வழங்க முடியுமா என்பதை ஆராய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மருந்துப் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யாவிட்டால், கொவிட், சுனாமி மற்றும் உள்நாட்டுப் போரினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையை விட, பேரழிவுகரமான இறப்பு எண்ணிக்கை ஏற்படக்கூடும் என இலங்கை வைத்திய சபை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின், மோசமான பொருளாதார மற்றும் நிதி நிர்வாகத்தினால், மக்களின் அடிப்படை உரிமையான வாழும் உரிமை மற்றும் ஆரோக்கியத்திற்கான உரிமையை நிலைநாட்ட தற்போதைய அரசாங்கம், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார அதிகாரிகள் தவறியுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளது.

"இலங்கையில் தற்போது நிலவும் மருந்துப் பற்றாக்குறை மற்றும் சுகாதார சேவையைப் பேணுவதற்குத் தேவையான ஏனைய உபகரணங்களின் பற்றாக்குறை எதிர்காலத்தில் இன்னும் மோசமாகும்" என இராஜாங்க அமைச்சின் செயலாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.



இந்த பாரதூரமான சுகாதார நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு விரைவில் மேற்கொள்ள வேண்டிய பின்வரும் ஐந்து நடவடிக்கைகள் குறித்து சுகாதார செயலாளருக்கு அறிவிக்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் செனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

1. நாட்டில் சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தல்,
2. தொடர்புடைய அனைத்து தரப்பினராலும் அழைக்கப்படும் மருந்துகள் மற்றும் உபகரணங்களின் நிலைமை மதிப்பாய்வு செய்தலல்,
3. தற்போது எங்களிடம் உள்ள மருந்துகளின் சரியான நிர்வாகத்திற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க சுகாதார அமைச்சு ஒரு தொழில்நுட்பக் குழுவை அமைத்தல்,
4. மருந்து தட்டுப்பாட்டைச் சமாளிக்க வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் ஆதரவையும் சர்வதேச உதவியையும் பெறுதல்,
5. வெளிநாட்டு உதவியுடன் பெறப்படும் மருந்துகளின் தரத்தை உறுதி செய்வதற்கான அமைப்பை உருவாக்குதல்.

GMOA
Government Medical Officers' Association

சுகாதார அமைச்சுக்கு போதிய நிதியுதவி வழங்குவதன் மூலம் நாட்டு மக்களுக்கு சுகாதாரத்திற்கான அடிப்படை மனித உரிமைகள் இருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும், போரின் இறுதி கட்டத்தில், கோட்டாபய ராஜபக்ச, பாதுகாப்பு செயலாளராக இருந்த மஹிந்த ராஜபக்ச நிர்வாகத்தால் வன்னிக்கு மருந்துகளை அனுப்பாமல் பாரியளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட போது அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தின் போருக்கு ஆதரவளித்தது.

வைத்தியர்கள் உட்பட வைத்திய ஊழியர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வைத்தியசாலைகள் மீது இடைவிடாத குண்டுவீச்சைத் தடுக்க தொழிற்சங்கம் எதுவும் செய்யவில்லை.

இந்த அழிவை அங்கீகரித்த அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மருந்துப் பற்றாக்குறையினால் சுகாதாரத் துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க உதவுமாறு இலங்கை வைத்தியர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் குடிமக்களிடம் மேலும் அழைப்பு விடுத்துள்ளது.

நிதி நெருக்கடியால் மருந்து மற்றும் வைத்திய உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என சுகாதார சங்கங்கள் நீண்ட காலமாக எச்சரித்து வருகின்றன.

குறைந்த பட்சம் சுகாதார அமைச்சு தற்போதுள்ள யதார்த்தத்தை மறைத்து அரசியல் பாதுகாப்பை தேடுவதை விடுத்து, உண்மையான நிலைமையை வெளிப்படுத்தி சிறந்த நிர்வாக அணுகுமுறையைப் பின்பற்றுவதை விடுத்து, நீண்ட கால நெருக்கடியை தெரிந்தே தவிர்த்து வந்தமை, தற்போதைய நெருக்கடி இரட்டிப்பானதோடு, மூன்று மடங்கு அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் முன்னதாக தெரிவித்திருந்தார்.



# இலங்கை பொருளாதாரம்– நிபந்தனைகளும் நெருக்கடிகளும்

**- சிவா பரமேஸ்வரன் & கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**




இலங்கை பொருளாதாரம் எவ்வழி போகும், அந்த வழி எப்படியான வழி, அது வெளிச்சப் பாதைக்கு இட்டுச் செல்லுமா அல்லது இருட்டான குகையில் மூச்சு முட்டி இறக்க வழி செய்யுமா என்பதெல்லாம் அந்த புத்த பகவானுக்கே வெளிச்சம்.

இன்றிருக்கும் நிதியமைச்சர் நாளை இருப்பாரா என்கிற கேள்விகளுக்கு மத்தியில் முதல் நாள் பதவி விலகிய புதிய நிதியமைச்சர் அலி சப்ரி அடுத்த நாள் மீண்டும் பதவி ஏற்றார்... "காலையில் சாமியார், மாலையில் மாமியார்". நாட்டின் மத்திய வங்கிக்கும் புதிய ஆளுநர்.

இதுவரை காலம் தமிழர்கள் என்றால் யார் அவர்கள் என்பது போய் இப்போது தேவை என்கிற போது நிதி நிர்வாகத்திற்கான புதிய குழுவில் தமிழர்களுக்கு முக்கியத்துவம். இதைத்தான் "வேண்டுமென்றால் வேரிலும் காய்க்கும்" என்பார்கள்.

நாட்டின் பொருளாதார நிலையை சிறிதேனும் தூக்கி நிறுத்தும் நோக்கில் நிதித்துறை குழாம் சர்வதேச நாணய நிதியத்திடம் மீண்டும் கையேந்தியது. கடன் கொடுப்பவர்கள் சும்மா கொடுப்பார்களா? சில நிபந்தனைகளை விதித்துள்ளனர். ஆனால் இதற்கான பேச்சுவார்த்தைகள் இரு மாதங்களுக்கு முன்னரே தொடங்கியது. முதலில் நிகாரிப்பைச் செய்த இலங்கை அரசு பின்னர் பிச்சைப் பாத்திரத்துடன் கையேந்தியது.

சர்வதேச நாணய நிதியம் (IMF) இலங்கைக்கான தனது உறுப்புரை 4 அலோசனை நடவடிக்கைகளை பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி பூர்த்தி செய்து தனது அறிக்கையை மார்ச் மாதம் 02ஆந் திகதி வெளியிட்டது. அதில் இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திருந்ததுடன் அதிலிருந்த மீள்வதற்கான பரிந்துரைகளையும் செய்திருந்தது. இலங்கையின் மத்தியவங்கியும் நிதியமைச்சும் அரசாங்கத்தின் பேரில் கருத்துச் சொல்ல முற்பட்ட அரசியல்வாதிகளும் நாட்டில் ஏற்பட்டு வந்த நிதி நெருக்கடிகளை கையாள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதைத் தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ளனர். இந்நிலையிலேயே மேற்படி அறிக்கை வெளிவந்தது.

அரச நிதிமுகாமைத்துவத்தில் ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் காரணமாக அரசிறைவருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சி கோவிட்-19 நோய்த்தாக்கத்தின் விளைவாக எற்பட்ட பின்னடைவுகள் மற்றும் சர்வதேச சந்தையின் விலைப்போக்குகள் என்பன இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மீளச்செலுத்தலில் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இத்தகைய சிக்கலில் மாட்டிக்கொண்ட ஒரு நாட்டிற்கு IMF பரிந்துரை செய்யும் வழமையான பரிந்துரைகளை இந்த அறிக்கையிலும் காண முடிகிறது. இதன்படி ஐந்து பரிந்துரைகளை IMF மேற்கொண்டுள்ளது.

முதலாவது பரிந்துரை இலங்கையின் அரசிறை நடவடிக்கைகளை பலப்படுத்த வருவாய்களை அடிப்படையாகக் கொண்ட கணிசமான கொள்கைமாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதாகும். அதாவது அரசாங்கம் தனது அரசிறைவருவாயை அதிகரிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். வற்வரி மற்றும் வருமான வரி என்பவற்றின் வரிவீதங்களை அதிகரிப்பதுடன் வரி அறவிடப்படும் அடிப்படைகளை விரிவுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச வருவாயை அதிகரித்தல். அரசிறை சீர்திருத்தத்துடன் சக்திவலு விலைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் இறைக்கொள்கை சீர்திருத்தங்களை நம்பகரமானதாக மாற்றலாம் என்று இந்த பரிந்துரை கூறுகிறது. பெற்றோலியத்தையும் மின்சாரத்தையும் சந்தை விலைகளில் வழங்குங்கள் என்பதே இதன் கருத்தாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சார சபையும் எதிர்நோக்கும் பாரிய நட்டங்கள் அரசாங்கத்தின் செலவுகளில் பாரிய அழுத்தங்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகின்றமை நமக்குத் தெரிந்தது தான். சுருங்கச் சொன்னால் வரிகளை அதிகரிப்பதுடன் நட்டத்தில் இயங்கும் அரசமுறை முயற்சிகளின் நட்டத்தை குறைக்க வேண்டும் அல்லது இலாபமீட்டும் வகையில் அவற்றின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என்பது இப்பரிந்தரையின் சாராம்சமாகும்.



இரண்டாவது பரிந்துரை இலங்கையின் பொதுப்படுகடனை நிலைபேறுடையதாக மாற்ற விரிவான கொள்கை உபாயங்கள் வகுக்கப்படவேண்டும். என்பதாகும். அதாவது கடன்பெறல் மீளச் செலுத்தல் என்பன முறையான வகையில் முன்கூட்டிய பாதுகாப்புகளுடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதாகும். அரசாங்கங்கள் கடன் பெறுவது ஒன்றும் தவறான விடயமல்ல. ஆனால் அக்கடன்கள் மூலம் உருவாக்கப்படும் சொத்துகள் பெற்ற கடனை மீளச் செலுத்தத் தேவையான நிலைபெறுடைய வருவாய்ப்பாய்ச்சல்களை உருவாக்க வேண்டும். உதாரணமாக இலங்கையில் கடன்கள் மூலம் உருவாக்கப்பட்ட மாகம்புர துறைமுகம் மத்தளை விமான நிலையம் தாமரைத் தொலைத்தொடர்புக் கோபரம் என்பன மிகுந்த பொருட் செலவில் உருவாக்கப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து டொலர் வருவாய்ப்பாய்ச்சல்களை உருவாக்க இலங்கை தவறிவிட்டது. ஆனால் பெற்ற கடன்களைவ வட்டியும் முதலுமாக மீளச் செலுத்தவேண்டியது கட்டாயமாகும். அதுதவிர அரச பாதீட்டுக் குறைநிலையை நிரப்ப பெறப்பட்ட கடன்கள் இலங்கையை "வரவு எட்டணா செலவ பத்தணா அதிகம் ரெண்டணா கடைசியில் துந்தனா துந்தனா" என்று துந்தனா அடிக்கும் நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது. அண்மையில் ஓய்வு பெற்ற கணக்காளர் நாயகம் ஒருவர் குறிப்பிட்டிருந்தபடி பெற்ற கடன்களுக்கும் செலவிடப்பட்ட தொகைகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி நிலவுவதாகவும் அந்த காணாமல் போன தொகைகளுக்கு என்ன நடந்ததென்பது யாருக்கும் தெரியாது. எனவே பொதுக்டன் முகாமைத்தவம் முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை இப்பரிந்துரையின் பொருளாகக் கொள்ளலாம்.



மூன்றாவது பரிந்துரை குறுகிய காலத்தில் பணவீக்கம் எகிறிச் செல்வதைத் தடுக்க பணக்கொள்கையை இறுக்கமாக்க வேண்டும் எனக் கூறுகிறது. 2019இல் பதவிக்கு வந்த அரசாங்கம் மலிவான பணக்கொள்கையை கடைப்பிடித்தமை நமக்குத் தெரியும் வட்டிவீதங்களை மிகவும் கீழ் மட்டத்தில் வைத்திருப்பதள் மூலம் நாட்டின் பண நிரம்பலை விரிவாக்கி அதன் மூலம் பொருள்கள் சேவைகள் மிதான மக்களின் கேள்வியை அதிகரித்து முதலீட்டாளர்களை ஊக்குவித்து நாட்டில் அதிக முதலீடுகளை உருவாக்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியையும் தொழில் வாய்ப்புகளையும் பெருக்குவதே இதன் குறிக்கோளாகும். ஆனால் இலங்கை போன்ற முதலீட்டிற்கு உகந்த புறச்சூழல் இல்லாததொரு நாட்டில் அத்தகைய முதலீட்டு விரிவாக்கத்தை எதிர்பார்க்க முடியாது. அத்துடன் மக்கள் குறைவான வட்டிவீதங்கள் நிலவிய போது அதிக கடன்களை வாங்கி விடுவாசல் நிலபுலன்கள் போன்ற அசையாச் சொத்தக்களிலும் தங்கம் மற்றும் வாகனாதிகள் போன்ற அசையும் சொத்துகளிலும் செலவீடுகளை மேற்கொண்டனர். இதனால் அரசாங்கம் எதிர்பார்த்தது போன்ற பொருளாதார விரிவாக்கம் இடம்பெறவில்லை. மறுபுறம் உள்நாட்டு வட்டிவீதங்கள் வீழ்ச்சியடைந்த படியினால் வட்டிவருவாய் ஈட்டித்தரும் உள்நாட்டுப்பணச் சந்தையில் குறுங்கால முதலீடுகளை மேற்கொண்டிருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் தமது முதலீடுகளை மீளப் பெற்றுக் கொண்டனர். இது இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியில் கணிசமான அழுத்தங்களை ஏற்படுத்தியது. மறுபு-றம் அரச செலவீட்டுத் தேவைப்பாடுகளை ஈடுசெய்ய மத்தியவங்கி டிரில்லியன் கணக்கில் ரூபாவை அச்சிட்டது. புதிய பணக்கோட்பாடு என்ற ஒரு மாயையை நம்பி செயற்பட்டதால் நாட்டின் பணவீக்க இலக்குகளை மீறி பணவீக்கம் எகிறியது. அண்மையில் நிதிஉயர் பதவிகளில் ஏற்பட்ட இருக்கை மாற்றங்களைத் தொடர்ந்து இப்போது கொள்கை வட்டிவீதங்கள் 14.5 சதவீதம் வரையிலும் இருமடங்கிற்கும் மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இது குதிரை இலாயத்தை விட்டு ஓடியபின்னர் கதவை மூடுவதை ஒத்ததாகும். ஓடிய குதிரை களைத்துத்தான் வீடு திரும்ப வேண்டும். IMF இன் பரிந்துரை பணவீக்கத்தைக்கட்டுப்படுத்த இறுக்கமான பணக்கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது. அடுத்துவரும் மாதங்களில் இலங்கை அரச ஊழியர்களுக்கான சம்பளங்களை எவ்வாறு வழங்கப்போகிறது என்பதே இப்போதுள்ள வினாவாகும்.




நான்காவது பரிந்துரை அரசாங்கம் கடிவாளம் போட்டு கட்டிவைத்திருந்த நாணயமாற்றுவீதத்தை படிப்படியாக சந்தையால் நிர்ணயிக்கப்படும் நெகிழ்தன்மை வாய்ந்த மாற்றுவீதமாக மாற அனுமதிக்க வேண்டும் என்பதாகும். பலமாதங்களாக செயற்கையான விதத்தில் 203 ரூபா மட்டத்தில் கட்டிவைத்திருந்த ரூபாவை ஓரிரவில் 230 ரூபா உச்ச எல்லையின் கீழ் மிதக்க விடுவதாக மத்தியவங்கி அறிவித்தது. மறுநாளே டொலர் 260ரூபாவை எட்டியது. அதன் பின்னர் அதன் பாய்ச்சல் நிறுத்த முடியாத குதிரைப்பாய்ச்சலாக இருக்கிறது. இப்போது ஒரு டொலர் 330 ருபா என்ற மிகப்பெரிய தேய்வினை எதிர்கொண்டு உலகிலேயே மிகவும் பலவீனமான நாணயம் என்ற அவப்பெயரையும் சந்தித்துள்ளது.

நாணயத்தின் வெளிநாட்டுப்பெறுமதியை கட்டுப்படுத்துவதில் நாணய அதிகாரிகள் தோல்வியடைந்துள்ளனர். நாட்டின் டொலர் உட்பாய்ச்சல்கள் குறைவடைந்துள்ளதோடு வங்கித்துறைக்குள் வரும் டொலர்களில் 50 சதவீதத்தை மத்தியவங்கிக்கு வழங்க வேண்டும் என்ற ஒழுங்குறுத்தலின் படி வங்கித்துறையில் நாளாந்தம் டொலருக்கு எழுப்பப்படும் கேள்வியை ஈடுசெய்யப் போதுமான டொலர் கையிருப்புகள் இல்லாத நிலையில் டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்கிறது. நாட்டின் நிச்சயமற்ற சூழல் மற்றும் நாட்டின் ஆட்சியாளர்களை வெளியேறுமாறு உருவாகியுள்ள எதிர்பலைகள் காரணமாக வெளிநாடுகளில் வாழம் இலங்கையர்கள் உழைத்தனுப்பும் பணஉட்பாய்ச்சல்கள் குறைவடைந்துள்ளன. முதலீட்டாளர்களின் வருகையும் குறைந்துள்ள நிலையில் இலங்கைக்கு செல்ல விரும்பும் உல்லாசப் பயணிகளுக்கு பல மேற்குலக நாடுகள் பணய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன. இது இலங்கை அரசாங்கத்தின் கன்னத்தில் வைக்கப்பட்ட பலமான அறையாகப் பார்க்கப்பட முடியும். சுருங்கச் சொன்னால் நாணயத்தை மிதக்கவிடவேண்டும் என்ற பரிந்துரை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அது நடைபெற்றவிதம் சாட்டின் பொருளாதாரத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள நெடுங்காலம் எடுக்கும்.




இறுதியாக IMF குறிப்பிடும் இக்கொள்கைச் சிர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது அது சமூகத்திற்கு குறுங்காலத்தில் வலிமிகுந்ததாகவே இருக்கும். நாட்டில் இப்போதிருக்கும் பொருளாதார நிலையுடன் ஒப்பிடும் போது இன்னும் இடுப்புப்பட்டியை இறுகக் கட்ட வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். குறிப்பாக சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளவர்கள் இலகுவில் பாதிப்பக்கு ஆளாகக் கூடிய பெண்கள் சிறுவர்கள் முதியோரின் நிலை கவலைக்கிடமானதாக மாறும். இதனைத்தடுப்பதற்கு முறையான ஒரு சமூக பாதுகாப்பு வலைப்பின்னலை அரசு உருவாக்கி நடைமுறைக்கிடவேண்டும் என்றும் அதன்பொருட்டு அதிக செலவீடுகளை இலக்குப்படுத்திய விதத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அது கூறுகிறது.

ஆக இப்போது ஐஆகு உடன் முறையாக நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கான ஆயத்தப்பணிகளில் இலங்கை அரசு ஈடுபட்டிருக்கிறது ஆயினும் காலங் கடந்த நிலையில் இது நடைபெறுவதால் பொருளாதார மீட்சி என்பது விரைவில் ஏற்பட்டுவிடாது. இலங்கை அரசு 2022 ஜனவரி மாதத்தில் IMF இடம் சென்றிருக்குமாயின் இலங்கைக்கு இப்படிஒரு அவல நிலை ஏற்பட்டிருக்காது என்பதே இது பற்றி கூர்ந்து கவனித்தவரும் அவதானிகளின் கருத்தாகும். இவ்வாறு நாட்டை வேண்டுமென்றே அவலநிலைக்கு தள்ளியவர்களுக்கு மக்கள் என்ன தண்டனை வழங்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சர்வதேச நாணய நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் வாங்கும் இலங்கை நெருக்கடியிலிருந்து மீளுமா அல்லது கசப்பான மருந்துகளை உட்கொள்ளாமல் நெருக்கடியில் மூழ்குமா என்பது மிகப்பெரும் கேள்விக்குறி.

**கட்டுரையாளர்கள் பற்றி:**
**சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்.**
**கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி: பேராசிரியர், பொருளாதார பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.**

# 'வெளியேறுங்கள் கோட்டா': வடக்கிலும் தொடங்கும் போராட்டம்

**- நடராசா லோகதயாளன்: யாழ்ப்பாணம்**




இலங்கையின் தெற்கில் தாம் தேர்ந்தெடுக்க ஜனாதிபதி வீட்டிற்கு செல்ல வேண்டும் என்கிற கோசம் வலுத்துவரும் நிலையில், நாளை முதல். வடக்கிலும் தலையெடுக்கவுள்ளதாக தமிழ் தேசியக் கட்சிகள் கட்டியம் கூறுகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக காலிமுகத் திடலில் வயது வித்தியாசம், பாலின பேதம், சமூக ஏற்றத்தாழ்வுகள், படித்தவர்கள் படிக்காதவர்கள் என் பல்தரப்பினர் அரசிற்கு எதிராக முன்னெடுத்துள்ள போராட்டம் ஓய்வதாகத் தெரியவில்லை.

நாட்டில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று இவ்வளவு பெரிய போராட்டம் நடைபெற்றுவரும் வேளையில், தமிழர்கள் இந்த விடயத்தில் பாராமுகமாவுள்ளனர், அவர்களுக்கு பொருளாதர நெருக்கடி இல்லையா? போன்ற கேள்விகள் சமூக ஊடகங்களில் உலா வருகின்றன. இதற்கு அதே ஊடகங்களில் தமிழர் தரப்பால் பதிலும் கூறப்படுகிறது.

இலங்கையில் நிலவும் கொடிய பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலை ஏற்றம், அத்தியாவசியப் பொருட்களிற்கான தட்டுப்பாடு மற்றும் மின்சாரத் தடை காரணமாக தெற்கிலே இந்த அரசை கொண்டுவந்தவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றபோதும் ராஜபக்சவினரின் குடும்ப ஆட்சிக்கு எதிராக 2010முதலே போராடி வந்த தமிழ் மக்கள் மௌனிகளாக அல்லது பார்வையாளர்களாக மட்டும் இருப்பது ஏன் என ஒரு தரப்பால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இது தொடர்பில் இரண்டுபட்ட கருத்து இருந்தாலும் கோட்டபாயவின் ஆட்சி தூக்கி எறியப்பட வேண்டும் என்பதில் எந்த தமிழ் தேசியக் கட்சிக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஏனெனில் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் எனத் தெரிவிக்க எதற்கெடுத்தாலும் மாற்றுக் கருத்தை மட்டுமே கூறும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ மகிந்த அரசிற்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் ஒப்பமிட்டுவிட்டது.

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், மக்கள் எழுச்சி வெற்றியிலே முடிய வேண்டும் என்றே தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலும் குறிப்பிட்டதோடு தெற்கில் மட்டுமல்ல வடக்கில் என்ன இடம்பெற வேண்டும் அவை எப்படி இடம்பெற வேண்டும. என வெள்ளிக் கிழமை இளைஞர்கள் கூடி ஆராய்கின்றனர். அதிலே நாமும் அழைக்கப்பட்டுள்ளோம் நிச்சயமாக பங்குகொள்வோம் அதே நேரம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஓர் போராட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அதற்கும் எமது முழு ஆதரவு உண்டு என்றார்.




இன்று வெள்ளிக்கிழமை பகல் வீரசிங்கம் மண்டபத்தில் இளைஞர்களுடன் கலந்துரையாடல் நாளை போராட்ட ஆரம்பம் என வடக்கும் போர்கோலத்திற்கு பிள்ளையார் சுழி இடப்படுகின்றது.

இதேநேரம் அரசியல் தலைவர்களும் இளைஞர்களும் போராட தயாராகிவிட்டலும் மூத்தவர்களின் மனநிலையை அறியும் நோக்கில் 45 ஆண்டுகளிற்கும் மேலாக சாரதியாகத் தொழில் புரியும் யாழ்ப்பாணம் நாவந்துறையைச் சேர்ந்த 67 வயதையுடைய ஜோசப் பத்மநாதன் விபரம் தெரிவிக்கையில், வாகனங்களை வாடகைக்கு ஓடுவதற்கு ஒரு நாள்தொழிலிற்கு சென்றால் மறுநாள் வரிசையில் டீசலிற்காக காத்திருக்க வேண்டும் அதுவும் உட்சபட்சமாக 2 ஆயிரம் ரூபாவிற்கே டீசல் கிடைக்கும் 2 ஆயிரம் ரூபா என்றால் 11 லீற்றர் டீசல்தான் கிடைக்கும் இந்த 11 லீற்றருக்கு மட்டுமே மறெநாள் தொழில் புரியலாம்.

இதேநேரம் தெற்கில் போராட்டாம. அதிகரித்து வடக்கில் போராட்டம் இல்லை என்ற நிலமை தொடர்பில் கருத்துரைப்பதானால் இந்த ஜனாதிபதியையும் அரசையும் கொண்டு வந்தவர்கள்தான் விரட்ட வேண்டும். இந்த அரசு தொடர்பாகவும. அதனால. பட்ட அவலங்கள் தொடர்பிலும் நாமும் போராடினோம் அப்போது இவர்கள் எம்மைகண்டுகொள்ளவில்லையே என்றார்.

இதேநேரம் இது தொடர்பாக கொடிகாமத்தில் நீண்டகாலம் வர்த்தகத்தில் ஈடுபடும் இரத்தினேஸ்வரன் நகுலன் வயது 41 கருத்து தெரிவிக்கையில் நாம் பட்ட அவலங்கள், துன்பங்கள் எமக்கு படிப்பினையாக இருந்தாலும் அந்த அவலத்தை தந்தவனிற்கு எதிராக போராடும்போது நாமும் தோள் கொடுப்பதில் தவறு கிடையாது ஏனெனில் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது நாம் வாக்களிக்காமல் விட்டமையினால்தான் மகுந்த 2 லட்சத்திற்கும் குறைவான வாக்குகளால் வென்ற நன்றிக் கடனாக எம்மில் 2 லட்சம்பேர் மரணமடைந்தோ காணாமல்போகவோ காரணமாக இருந்தார் என்ற கருத்தும் உள்ளது அதனால் நாமும் போராடியே ஆக வேண்டும் என்றார்.




இதேநேரம் குறித்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டம் திருவையாறு பகெதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரான க.இரேசேந்திரம் தகவல் தருகையில், 1978 ஆம் ஆண்டு சிறிமாவின் இறக்குமதி தடையின்போது விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்த நான் இன்றுவரை அதனை கைவிடவில்லை. அதன் பின்பு 1983ஆம் ஆண்டு இனக் கலவரம், 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவ போர், 1990ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப் போராட்டம் ஆகிய காலத்தில் இவற்றைவிட உச்ச தடையை எதிர்கொண்டு பொருளாதார மீட்பிலும் பங்குகொண்டோம் அதனால் இவை எமக்கு புதிது கிடையாது.

இருப்பினும் தெற்கு மக்கள் எமக்கு இதே அரசு முன்னர் செய்த கொடுமை தொடர்பில் தமது போராட்டத்தில் குரல் கொடுப்பதும் தமிழர்கள் கூறும்போது அந்த வலி தெரியவில்லை தற்போது புரிகின்றது என்பதனை கூறும்போது வாழ்க்கையின் வட்ட தத்துவம் உணரப்படுகின்றது என்றார்.

இதேநேரம் நெடுங்கேணி கமக்கார அமைப்பின் தலைவரான பூபாலசிங்கம் தகவல் தெரிவிக்கையில், 1990ஆம் ஆண்டு எமது பகுதியில் விதிக்கப்பட்ட இறுக்கமான பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, விவசாய உள்ளீட்டுத் தடைகளின் காலத்தில் 1997ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நெடுங்கேணியை அண்டிய பகுதியில் விவசாயம் மேற்கொண்ட 6 விவசாயிகளின் தலையை வெட்டிச் சென்றனர். இதேபோன்று 2006ஆம் ஆண்டு போர் மூண்டபோது நில மீட்பு போர் ஒரு பக்கம் என்றால் உணவுப்போரில் ஈடுபட்டிருந்த எமக்கு வழிகாட்டிய அரச உத்தியோகத்தரான விவசாய போதனா ஆசிரியர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.




இதேபோல் முள்ளிவாய்க்காலில் பால்மாவிற்கும், கஞ்சிக்கும் நின்ற எம்மீது கொத்துக் குண்டுகளை வீசி அழித்த செயலின் கர்ம வினைகளே இவை என்றார்.

தமிழ் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் எந்தளவுக்கு இந்த போராட்டத்தை தீவிரமாக இதயசுத்தியுடன் முன்னெடுப்பார்கள், அதற்கு பரந்துபட்டளவில் மக்கள் தாமாக முன்வந்து ஆதரவளிப்பார்களா அல்லது இது சிங்களத்தின் பிரச்சனை என்று மௌனிகளாக இருப்பார்களா என்பது அடுத்த சில தினங்களில் தெரியவரும்.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் பொருளாதர நெருக்கடி என்பது மூவின மக்களையும் பாதித்துள்ளது என்பது உண்மை. மேலும் ஆட்சி மாற்றத்தை அனைத்து தரப்பினரும் விரும்புகின்றனர் என்பதும் உண்மை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்ப வேண்டுமென்றால் இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு இதில் அனைத்து தரப்பினரும் போராட வேண்டும் என்பதே மக்களின் எதிர்ப்பார்ப்பாகவுள்ளது. பலகளம் கண்ட தமிழ் மக்களுக்கு போராட்டக்களம் என்பது புதிதல்ல.

**அனைத்து வன்னிச்சங்க பொதுச்சபை உறுப்பினர்களுக்கும். அன்புடையீர்!**

## வன்னிச் சங்கம் - கனடா. (V United Care for Kids Inc).
## பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்.

மேற்படி சங்கத்தினது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 21 வைகாசி 2022ம் திகதி நடாத்துவதற்கு நடைமுறை நிர்வாகசபையானது தீர்மானித்துள்ளது.
எனவே ஆயுட்கால உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய வருடாந்தச் சந்தாப்பணம் செலுத்தவேண்டிய உறுப்பினர்கள் 2022ம் சித்திரை மாதம் 25ம் திகதிக்கு முன்னராக பொருளாளரிடம் நேரடியாகவோ அல்லது e transfer மூலமாகவோ அல்லது பொருளாளருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு வங்கி இலக்கத்தினைப் பெற்று வைப்புச் செய்யவேண்டும். சந்தாப்பணத்தினை வங்கியில் வைப்புச் செய்பவர்கள் வைப்புப் பற்றுச்சீட்டினைப் பொருளாளருக்கு Text or WhatsApp or Viber or email மூலமாக அனுப்பிவைப்பதோடு அதனைப் பொருளாளருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும். e transfer மூலமாக அங்கத்துவ பணம் செலுத்துபவர்கள் தங்களது பெயரினை உறுதிப்படுத்துவதோடு அதற்குரிய கடவுச் சொல்லையும் (Password) அனுப்பி வைத்தல் வேண்டும்.

புதிதாக ஆயுட்காலச் சந்தாப்பணம் செலுத்தவிரும்புபவர்கள் 200 டொலர்களையும், வருடாந்த சந்தாப்பணம் செலுத்துபவர்கள் ஆண்டொன்றுக்கு 20 டொலர்களையும் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறித்த தவணைக்குள் அங்கத்துவப் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்கள் மாத்திரமே இப் பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**பொதுக் கூட்டம்: காலம்: 21 வைகாசி 2022. பிற்பகல் 1.00 மணிதொடக்கம் 6 மணிவரை.** *கோவிட் 19 கட்டுப்பாடுகள் தேவையேற்படின் கடைப்பிடிக்கப்படும்.*

**இடம்: 635 Middlefield Road, Scarborough (ONT) ஐயப்பன் ஆலய மண்டபம்.**

**குறிப்ப: கோவிட் - 19 தொற்று காரணமாக கூட்டம் மண்டபத்தில் நடாத்தமுடியா நிலை ஏற்படுமாயின் Zoom மூலமாக நடாத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

**பொ.சிவசுதன்.**
**செயலாளர்.**
V United Care for Kids Inc.
Secretary@vcarekids.org

குறிப்பு:- வன்னிச் சங்கத்தில் புதிய உறுப்பினராகச் சேர விரும்புபவர்கள் செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை 13 வைகாசி 2022க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:** 416-644-1113, Ex 201
**செயலாளர்:** 416-558-1917,
**பொருளாளர்:** 647-202-8286. Email: vunitedcare4kids@gmail.com


Butterflies Events
Let Your Dreams Fly
Proudly Presents
KIDS DANCE COMPETITION
Powered by
ASIYANS Quality Forever
குட்டீஸ் ஆடலாமா
KUTTIES AADALAMA
SEASON 4
Co sponsors
NEW OCEAN SUPER MARKET
CAMSONICS
GRAND FINALE
Saturday April 16th, 2022
6.30pm to 10.30pm (Doors open at 6pm)
FLATO Markham Theatre
171 Town Centre Blvd, Markham , ON, L3R 8G5
Kalyane GOLD HOUSE
Dj.S.Arjune
Who will be the next Tittle Winner?
Saikavin
Naveena
Shayani
Archana
Thepin
Praviena
Aathana
SPECIAL PERFORMANCES
Vip $50
Regular $25
Kids $15
STARZ DANCE
PRIMA DANCE SCHOOL EST. 2011
Contact : Toronto (647) 640 8254
Montreal (514) 867 7258
info@butterfliesevents.com
SPONSORS
HB GROOVES
ASIYANS Quality Forever
FASHION SHOW
K.C.DENTAL
NEW PATIENTS WELCOME
CALL US AT 416 291 0710
416 700 0101
Karu Kandiah
HomeLife Galaxy
AMR Financial Services
CTS BUILDING SUPPLIES LTD
733 Progress Avenue, Scarborough, ON
www.ctsbuildingsupplies.com
Thinking of Buying or Selling?
ANUSHAN
416 843 1111
GOBIRAJ
416 219 3333
THE FRESH PERSPECTIVE YOU WANT. THE EXPERIENCE YOU NEED.
RE/MAX
REALTOR KAVI
MARCHE THARSINI
5670 Avenue Victoria
Montréal, QC
H3W 2P8
514-737-1261
RAGU YOGARAJAH
ANU ILANGESWARAN
VAISNAVI SIVANANTHAN
CROWN WOODS
Contact: 416 291 4800
DataWiz Academy of Data Science
www.datawiz.ca | 416-292-3444
Coding & Robotics
Onsite + Online
VIBRANT HOSPITALITY GROUP
Dr. Francia Jayarajah
Tel: 647-350-5544
Dr. Vidya Varathan
Dental Clinic
Shinol inc.
OPTIMART
Contact No: 416 286 3389
416 297 9903
All in one limo Services
GLORIOUS PRINTER & VIDEO INC.
FX
PrintMe
ICT
Senthamarai
FM 88.9
TAMILS' GUIDE
www.tamilsguide.com
MEDIA SPONSORS
ICT HD
செந்தாமரை
YUGAM TV
MONதமிழ்
TAMIL
timeFM
உதயன்
Tamilsguide
GTA தமிழ்
Thedipaar
TAMIL TV
CTR
Tamilcnn
தாய்வீடு
DIGITAL
Tamil Mirror
விளம்பரம்
Easy 24 News
CREATIVE PRODUCTION

# இராசபக்கச குடும்ப ஆட்சி கவிழுமா இல்லையா என்பது பெரிய கேள்விக் குறியாகவே இருக்கிறது?

கெடு குடி சொற்கேளாது என்பது பழமொழி. இராசபக்ச குடும்பம் மக்களது குரலுக்குச் செவி சாய்ப்பதாக இல்லை. கடந்த திங்கட் கிழமை (ஏப்ரில் 11) நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் மகிந்த இராசபக்ச இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் - அதற்கான தீர்வை முன்வைக்காமல் - முன்னைய அரசு உட்பட மற்றவர்கள் தலையில் பழி சுமத்தியுள்ளார். இந்த அரசு பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. அப்படியிருக்க பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த இராணுவத்தைப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார். இந்தப் பல்லவி பழைய பல்லவி. போர் முடிந்து 13 ஆண்டுகள் நிறையப் போகிறது. இருந்தும் இந்தப் பல்லவியை மகிந்த இராசபக்ச பாடுகிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு கோவிட் - 19 தொற்று நோயையும் மகிந்த இராசபக்ச காரணம் காட்டுகிறார். ஆனால் அண்டை நாடுகளான வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் கோவிட் தொற்று நோய்க்கு முகம் கொடுத்தன. இருந்தும் அந்த நாடுகள் இலங்கை போல் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தாகத் தெரியவில்லை.

எதிர்பாராத திருப்பமாக போர் வெற்றி மற்றும் இராணுவ வீரர்களை முன்னிலைப்படுத்தி, பழைய புராணத்தைப் பாடி வரும் சனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட இராசபக்சாக்களை வீட்டுக்குச் செல்லுமாறு இளைஞர் இளைஞிகள் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு தவறான விளக்கத்தை கொடுக்க முயற்சிப்பது இராசபக்சாக்களின் அரசியல் ஒண்டாட்டித்தனத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.
கோட்டாபய வீட்டுக்குச் செல்ல வேண்டும் என வீதிக்கு இறங்கிய இளைய தலை-முறையினரை 1988, 89 ஆம் ஆண்டுகளில் கிளர்ச்சிகளை ஏற்படுத்திய இளைஞர் இயக்கத்துடன் ஒப்பிட்டு பிரதமர் மகிந்த இராசபக்ச பேசியிருப்பதை எதிர்க்கட்சியினர் வன்மையாக கண்டித்துள்ளார்கள்.




இப்போது மக்கள் முகம் கொடுத்துள்ள சிக்கல்களுக்கோ, மக்கள் எழுப்பும் குரலுக்கோ பிரதமரின் பேச்சு பதிலளிக்கவில்லை. களத்தின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாது தான் தெரிவிக்கும் கருத்துக்கள் அனைத்தும் உண்மையென மக்கள் நினைப்பார்கள் என நினைத்து மகிந்த இராசபக்ச தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறார். பிரதமர் இராசபக்ச நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு எவ்வித தீர்வையும் வைத்திருக்கவில்லை என்பது அவரது உரையிலிருந்து தெளிவாகப் புரிகிறது என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மகிந்தா இராசபக்சவின் எதிர்வினை, குற்றத்தை ஏற்றுக்கொள்ளும் தார்மீக பலமின்மையை வெளிப்படுத்துகிறது. நடந்தவற்றுக்கு பொறுப்புக்கூறி இருந்தால், திறமையின்மையை ஒப்புக் கொண்டிருந்தால் அத்தகைய துணிச்சலை வெளிப்படுத்தியிருந்தால், பிர-தமரின் பண்பு நலத்தை மக்கள் பாராட்டியிருப்பார்கள்.
மோசமான பொருளாதார நிர்வாகம், நெருங்கிய நண்பர்களுக்கு சலுகைகள், ஊழல், அதிக வட்டிக்கு கடன் செலுத்தியதன் ஊடாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்துக்கு முன்னைய அரசாங்கம் பொறுப்பு எனக் கூறமுற்படுவது வேடிக்கையானது. வங்காள தேசத்தில் கோவிட் தொற்று நோயால் 13 ஏப்ரில், 2022 வரை பாதிக்கப்பட்டவர்கள் 1,952,131 பேர். இறந்தவர்கள் 29,124 பேர். இலங்கையில் இந்த நே-ாயினால் பாதிக்கப்பட்டவர்கள் 6,63,000, இறந்தவர்கள் 16,484 பேர். வங்காள தேசத்தின் குடிமக்கள் தொகை 164.7 மில்லியன். இலங்கை குடிமக்களின் தொகை 21.92 மில்லியன். அதாவது இலங்கையை விட 7.5 மடங்கு அதிகமானது. இது போலவே வங்காள தேசத்தின் 2021 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர் 350 பில்லியன்) 4.6 விழுக்காடு. அதே ஆண்டில் இலங்கையின் வளர்ச்சி 3.7 விழுக்காடு (அடொலர் 81 பில்லியன்).

ஹென்றி கிஸ்ஸிங்கர் ஒருமுறை வங்களாதேசத்தை "சர்வதேச கூடை நாடு" என வருணித்திருந்தார். அதாவது அந்த நாட்டின் பொருளா-தாரம் அல்லது நிதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று சொன்னார். இன்று அந்த நாட்டிடம் இலங்கை கையேந்தி பிச்சை எடுக்கிறது! எனவே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு கோவிட் தொற்று நோய் முக்கிய காரணியாக அமையவில்லை. பொருளாதாரம் சரியாக கையாளப்படாமை, சர்வதேச நாணய நிதியத்தை நேரகாலத்தோடு அணுகா-மை, கடன் கொடுப்பனவுகளைத் தள்ளிப்போடாமை, செல்வந்தர்களுக்கு வரிச் சலுகை, சம்பளத்தில் அறவி-டும் வரியை நீக்கியது, விவசாயிகளுக்கு இரசாயின உரத்தை அடியோடு நிறுத்தியது, நிதி அமைச்சுக்கு பசில் இராசபக்சவை அமைச்சராக நியமித்தது, பணத்தை அதிகமாக அச்சிட்டது, பொது நிருவாகத்தை இராணுவ மயப்படுத்தியது, கடன்களை அடைக்க வெளிநாட்டு நாணய இருப்புக்களை காலி செய்தது பொருளாதார, அரசியல் நெருக்கடிக்கு காரணிகளாக அமைந்தன. முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பணத்தை அதிகமாக அச்சிடுவது பணவீக்கத்தை ஏற்படுத்தாது என்று அறிவித்தார்!



இன்றைய நிதி அமைச்சர் அலி சப்ரி அவர்கள் சர்வதேச நிதி நிறுவனத்திடம் போவதற்கு நிவாட் கப்ரால், முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் எ.ஆர். அத்திக்கல மற்றும் முன்னாள் சனாதிபதியின் செயலாளர் பி.யூ. ஜெயசுந்தரா ஆகிய மூவருமே முட்டுக்கட்டை போட்டார்கள் எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

**- கனடா நக்கீரன்**

நூற்றுக்கணக்கான கல்வியாளர்கள் குழு வெளியிட்ட அறிக்கையில், தற்போதைய நெருக்கடியின் தோற்றம் அரசியல் என்றும், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களின் எதேச்சதிகார ஆட்சி பல தசாப்தங்களாக சிங்கள பவுத்த பெரும்பான்மையைத் திருத்திப்படுத்துவதில் ஈடுபட்டு வருகிறது, இராணுவத்தையும் பவுத்த குருமார்களையும் செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகிறார்கள். இது இராணுவமயமாக்கல், சமத்துவமின்மை மற்றும் அநீதியை ஏற்படுத்தியுள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

வயது போன நாய்க்கு புதிய வித்தைகளைக் கற்றுக் கொடுக்க முடியாது எனச் சொல்வார்கள். அது போல இராசபக்சாக்கள் பணத்தையும் பதவிகளையும் கொடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் குதிரை வாணிகத்தில் ஈடுபட்டுள்ளார்கள். குருநாக்கலை தேர்தல் மாவட்டத்தில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிசார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சாந்தா பண்டார துணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் நா.உறுப்பினர்களை பணம் மற்றும் பதவிகளைக் கொடுத்து வளைப்பது இராசபச்ச குடும்பத்துக்கு, குறிப்பாக பசில் இராசபக்சவுக்கு கைவந்த கலை.

யார் எதைச் சொன்னாலும் இலங்கை அரசின் அரசியல் முன்பு இருந்தது போல (மார்ச் 31, 2022) இனி இருக்க முடியாது. இப்போது தென்னிலங்கை இளைஞர்கள், இளைஞிகள் இனம், மொழி, மதம் கடந்து போராடி வருகிறார்கள். போராட்டத்தில் மூவின மக்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக அரசியல் அரங்கில் காத்திரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)



நீதி மற்றும் அதற்கான பரிகாரம் ஆகியவற்றைப் பெற போராடும் தமிழ் சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் போராட்டத்தில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஸ்காபுறோவில் தமிழ் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் இனப்படுகொலைக் கல்விச் சட்டத்தை ஆதரிப்பதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் மாகாண அரசாங்கம் சார்ந்த எந்த உதவிக்கும் எனது அலுவலகமும் உங்களுக்காக திறந்தே உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்..

இங்ஙனம்,

அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

-----------------

My best wishes to the Tamil Community in its struggle to attain justice and redress. I am honoured to be part of your struggle. I am also thrilled to work with you to build the Tamil Community Centre and support the Tamil Genocide Education Act.

My office is also available for any help.

Aris Babikian, MPP
Scarborough-Agincourt



ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**





உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# சித்திரை முதல் நாள் சித்திரைப் புத்தாண்டு, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு!

- கனடா நக்கீரன்

தமிழர்கள் எண்ணற்ற விழாக்களை ஆண்டு முழுதும் கொண்டாடினாலும் மூன்று விழாக்கள் மட்டுமே முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று தை முதல் நாளில் (ஏப்ரில்14) கொண்டாடப்படும் பொங்கல் விழா. அடுத்து சித்திரை முதல் நாளில் (ஏப்ரில் 14) கொண்டாடப்படும் புத்தாண்டுப் பிறப்பு விழா. இன்னொரு விழா ஒக்தோபர் மாதத்தில் கொண்டாடப்படும் தீபாவளி. அண்மைக்காலமாக கிறித்தவ தமிழர்கள் மட்டுமல்ல இந்துத் தமிழர்களும் கிரிகோரியன் ஆண்டின் முதல் நாளான சனவரி முதல் நாளையும் கொண்டாடுகிறார்கள்.


பெரும்பாலான ஆண்டுகளில் தீபாவளி ஐப்பசி மாத அமாவாசை நாளன்று கொண்டாடப்படுகிறது.கிரிகொரியின் நாள்காட்டியின் படி ஒக்தோபர் மாத 17 - நொவெம்பர் மாத 15 ஆம் தேதி வரையான நாட்களில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. இந்த நாள் இந்துக்களால் மட்டுமின்றி சமணம், பவுத்தம், சீக்கிய சமயங்களால் கொண்டாடப் படுகின்றன. இந்துக்கள் தீபாவளி நரகாசுரன் என்னும் அரசனை திருமால் கொன்ற நாள் எனக் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் தீபாவளி கொண்டாடும் வழக்கம் விஜயநகர ஆட்சிக் காலத்தில் (கி.பி.1336 - கி.பி.1646) தொடங்கியதாகக் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

சனவரி 1 (துயரெயசல 1) கிரிகோரியன் ஆண்டின் முதல் நாளாகும். ஓர் ஆண்டில் 364 நாட்கள் (நெட்டாண்டுகளில் 365) உள்ளன. ஐரோப்பாவில் கத்தோலிக்கத் திருச்சபை செல்வாக்குச் செலுத்திய இடைக்காலப் பகுதியில், மேற்கு ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகள் ஆண்டின் தொடக்க நாளாக டிசெம்பர் 25 (இயேசுவின் பிறப்பு), மார்ச் 1, மார்ச் 25 (இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு), அல்லது உயிர்த்த ஞாயிறு போன்ற முக்கிய கிறித்தவத் திருவிழா நாட்களைத் தேர்ந்தெடுத்தன. மரபுவழித் திருச்சபையைப் பின்பற்றிய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் செப்தெம்பர் முதல் நாளை ஆண்டின் தொடக்க நாளாகத் தேர்ந்தெடுத்தன.

இங்கிலாந்தில், சனவரி 1 புத்தாண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டது, ஆனால் 12 ஆம் நூற்றாண்டு முதல் 1752 வரை இங்கிலாந்தில் மார்ச் 25 ஆண்டுத் தொடக்கமாக இருந்தது. இன்று கிறித்தவர்கள் மட்டுமல்ல முழு உலகத்தினரும் சாதி சமய வேறுபாடின்றி சனவரி 01 புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள்.

பல இனத்தவர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுப் பிறப்பைக் கொண்டாடுகிறார்கள். யப்பானியர்கள் தங்கள் புத்தாண்டை சனவரி 14 இல்தான் கொண்டாடி வந்தார்கள். இப்பவும் கொண்டாடுகிறார்கள் ஆனால் இன்று சனவரி 01 முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

தமிழர்கள் 3 புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். சனவரி 01, சனவரி 14 (தை 01) மற்றது ஏப்ரில் 14 (சித்திரை 01) புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள்.




மேலே கூறியவாறு இந்துமத தமிழர்கள் சனவரி முதல்நாள் கிறித்தவர்களின் புத்தாண்டாக இருந்தாலும் அதனையும் கொண்டாடுகின்றனர். வருமானம் வருவதால் இந்துக் கோயில்கள் சனவரி முதல் நாள் நள்ளிரவில் நடை திறக்கிறார்கள்.

தீபாவளி போலல்லாது தைப் பொங்கள் திருநாள், சித்திரை புத்தாண்டுப் பிறப்பு இரண்டுக்கும் வானியல் அடிப்படையில் காரணங்கள் இருக்கின்றன.

சித்திரை முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுவதற்குக் காரணம் அன்றுதான் தலை இராசியான மேட இராசி, பூரம் நட்சத்திரம் நாலாம் பாகத்தில் உதிக்கிறது.

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரெண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாகக் கருதப்படுகிறது. தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன. காரணம் இம் மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன. புவி ஞாயிறை ஒரு முறை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் எடுக்கிறது.

இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் இளவேனில் காலத்தின் தொடக்கமும் ஆகும்.




சூரியனைச் சுற்றிவரும் பூமி, சூரியன் மற்றும் சந்திரன் இரண்டின் ஈர்ப்புவிசை காரணமாக தளம்பல் ஏற்பட்டு அதன் சுற்றுப் பாதையில் ஓர் ஆண்டில் 50.51 ஆர்க் நொடிகள் பின்னோக்கி நகர்கிறது. மொத்தம் 71.6 ஆண்டுகளில் 1 பாகை (ஒரு நாள்) பின்னால் சென்று விடுகிறது. இதனால் இன்று இளவேனில் காலம் மார்ச் 21 இல் தொடங்கிவிடுகிறது. இதைப் போலவே சூரியனின் வடதிசைப் பயணம் சனவரி 14க்குப் பதில் டிசொம்பர் 21 அன்று தொடங்கிவிடுகிறது. புவியின் அச்சு பின்னோக்கி நகர்வதால் ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்குக் காரணமாகும். வானியலாளர்களின் கணிப்பின்படி சூரியன் ஏப்ரில் 19 அன்றுதான் மேட இராசிக்குள் நுழைகிறது.

வாக்கிய பஞ்சாங்கத்தின் கணிப்பின்படி சுபகிருது புத்தாண்டு 14.04.2022 அன்று காலை 7மணி 50 நிமி சுபகிருத புத்தாண்டு பிறக்கிறது.

சித்திரை முதல்நாளை சிங்கள மக்களும் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். காரணம் அவர்களது முன்னோர்களான நாகர்கள் வைதீக (இந்து) மதத்தினராக இருந்தவர்கள். மூத்த சிவனின் மகனான தேவநம்பியதீசன் (கிமு. 307 - கிமு 267) பவுத்த மதத்தைத் தழுவிக் கொண்ட முதல் அரசனாவான். ஆனால் இந்துக்களின் காலக் கணிப்பே தொடர்ந்து இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.




இந்து சமயத் தமிழர்களைப் போலவே பவுத்த சமய சிங்களவர்களும் சித்திரைப் புத்தாண்டன்று அதிகாலையில் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து பவுத்த விகாரைக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் வழக்கத்தில் இருக்கிறது.

சித்திரை தமிழரின் மரபார்ந்த புத்தாண்டு அல்ல என்ற மாற்றுக் கருத்து தமிழ்நாட்டில் 1970, 80 களில் தோன்றியது. இக்கருத்து வலுப்பெற முக்கிய காரணம், இன்றுள்ள 60 ஆண்டு சுற்று வட்டத்தில் வரலாற்றை சரியாகக் கணிக்க முடியவில்லை. அறுபது ஆண்டுகள் முடிந்தவுடன் மறுபடியும் முதல் ஆண்டில் இருந்து தொடங்க வேண்டும். தொடர்ச்சி இல்லை. இந்த ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்பவனால் அல்லது கனிஷ்ஷனால் கிபி 78 இல் ஏற்பட்டவை. இவை வடநாட்டு அரசனால் ஏற்பட்டதனால் அவற்றின் பெயர்கள் வட மொழிப் பெயர்களாக இருக்கின்றன. பிறந்த நாள், திருமண நாள் கொண்டாடுபவர்கள் 60 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

எனவே காலத்தைக் கணிக்க ஒரு தொடர் ஆண்டு தேவைப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் மறைமலை அடிகளாரின் தலைமையில் கூடிய அறிஞர் குழு ஆய்வு செய்து,

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டைப் பின்பற்றுவது.
2. தை முதல்நாளே திருவள்ளுவர் ஆண்டின் தொடக்கம். அதையே திருவள்ளுவர் தொடர் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கிமு 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31 யைக் கூட்டினால்) திருவள்ளுவர் ஆண்டு.

எனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழக அரசு அதற்கான அரசாணையை 2008 இல் பிறப்பித்தது. இப்போது நடக்கும் ஆண்டு திருவள்ளுவர் ஆண்டு 2053 ஆகும்.

ஆனால் 2011 இல் பதவிக்கு வந்த ஜெயலலிதா தலைமையிலன அதிமுக அரசு முன்னைய அரசாணையை அகற்றி சித்திரை முதல்நாளே புத்தாண்டின் தொடக்கம் எனச் சட்டம் இயற்றியது. இதனால் தமிழர்கள் இரண்டு புத்தாண்டுகளை - சித்திரைப் புத்தாண்டு, தைத் தமிழ்ப் புத்தாண்டு - கொண்டாடிவருகிறார்கள்.

தமிழ்நாட்டில் 2021 இல் சட்டசபைக்கு நடந்து முடிந்த தேர்தலில் திமுக வெற்றி பெற்றால் தை முதல் நாளைத் தமிழ்த் தேசியத் திருநாள் என அறிவிப்போம் எனச் சொல்லியது. ஆனால் அப்படி அறிவிக்கவில்லை. சித்திரை முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டு என ஜெயலலிதா கொண்டுவந்த சட்டம் திருத்தப்படவில்லை. அது தொடர்கிறது.

சித்திரைப் புத்தாண்டுக்கு வானியல் அடிப்படை இருப்பது போல திருவள்ளுவர் ஆண்டுக்கும் வானியல் அடிப்படை இருக்கிறது. சித்திரை 01 சூரியன் மேட இராசிக்குள் நுழைவது போல தை முதல் நாள் (சனவரி 14) சூரியன் தனது தென்திசைப் பயணத்தை முடித்துக் கொண்டு வடதிசைப் பயணத்தை மகர இராசியில் தொடங்குகிறது. வட மொழியில் அதனை மகர சங்கராந்தி என அழைப்பர்.

புவியில் உள்ள ஒரு இடத்தை சுட்டிக் காட்டுவதற்கு மூன்று கோடுகளை வானியலாளர்கள் உருவாக்கியுள்ளார்கள். முதல் கோடு புவியை வடக்குத் தெற்கென இரண்டாகப் பிரிக்கும் நடுக்கோடு (equator) ஆகும். இரண்டாவது கோடு நெட்டாங்கு அல்லது நெடுக்கோடு (meridian or line of longitude). இது புவியின் பரப்பில் கற்பனையான பெருவட்டத்தில் பாதியாகும். இவற்றின் ஒருமுனை வட துருவத்திலும் மற்றொரு முனை தென் துருவத்திலும் முடிகின்றன. இவை ஒரே அளவில் ஆனவை. மூன்றாவது கோடு அகலாங்கு அல்லதுஅகலக்கோடு (latitude) ஆகும். இது நடுக்கோட்டுக்கு வடக்கு-தெற்காக வரையப்பட்டுள்ளன. இந்த மூவகைக் கோடுகளை வைத்து உலகில் உள்ள ஓர் புள்ளியின் அமைவிடத்தைப் பெறலாம். ஒவ்வொரு நெடுங்கோடும் செங்குத்தானது. எடுத்துக்காட்டாக இலங்கையின் அமைவிடம் நெடுக்கோடு 79.50 பாகை கிழக்கு, குறுக்குக்கோடு 6.54 பாகை வடக்கு ஆகும்.

சூரியனின் இயக்கத்தை அடைப்படையாகக் கொண்டு கணக்கிடும் முறையில் இரண்டு முக்கிய பிரிவுகள் உண்டு.

1. வெப்பமண்டல ஆண்டு

சூரியன் மேட இராசியில் நுழைந்து திரும்ப மேட இராசியில் வந்தடையும் காலம் வெப்பமண்டல (சாயன) ஆண்டு என்று அழைக்கப்படுகிறது (Tropical revolution of Earth around the sun). வெப்ப மண்டல ஆண்டு என்பது சராவரி 365 நாள், 5 மணி, 48 நாடி, 45 வினாடிகளைக் கொண்டதாகும். இது ஆண்டுக்கு ஆண்டு சிறிது வேறுபடலாம்.

2. நட்சத்திர மண்டல ஆண்டு

ஞாயிறு இயக்கம் தொடங்குவது மேட இராசியின் முதல் நட்சத்திரத்திரமான அஸ்வினியில் நுழையும் காலம். முடிவது மீனராசியின் கடைசி நட்சத்திரமான ரேவதி ஆகும். தொடக்கம் மற்றும் முடிவு ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் ஓர் ஆண்டாகும் (Sidereal revolution of Earth around the Sun). இதில் நட்சத்திர ஆண்டு என்பது சராசரியாக 365 நாள், 6 மணி, 9 நாடி, 9.5 வினாடிகளைக் கொண்டதாகும். இந்த நட்சத்திர ஆண்டையே இந்திய சோதிடர்கள் பின்பற்றுகிறார்கள்.

இந்தியாவில் வெளியாகும் திருக்கணித பஞ்சாங்கங்கள் எல்லாம் நாசா விண்வெளி நிறுவனம் வெளியிடும் Ephemeris கோப்புகளை வைத்துத்தான் காலத்தைக் கணிக்கின்றன. கிரகணங்கள் பற்றிய தரவுகள் இந்தக் கோப்புகளில்தான் காணப்படுகின்றன. எத்தனை கோப்புகள் வைத்திருக்கிறார்கள்? கடந்த 9,000 ஆண்டுகளில் இராசிகள், நட்சந்திரங்கள் பற்றிய இருப்பு, ஓட்டம் பற்றிய தகவல்களை கணித்து வைத்திருக்கிறார்கள். அதாவது கிமு 5000 தொடக்கம் கிபி 3999 ஆண்டுவரை கணித்து வைத்திருக்கிறார்கள்!

வரலாற்றில் எகிப்தியர்கள்தான் ஞாயிற்றின் ஓட்டத்தை வைத்து முதன் முதலில் ஓர் ஆண்டில் 365 நாட்களைக் கொண்ட நாட்காட்டியை கிமு 4236 இல் கண்டு பிடித்தார்கள். அதனைப் பின்பற்றியே கிமு 44 இல் யூலியன் நாட்காட்டி ஒரு ஆண்டில் 365 1/4 நாட்கள் இருப்பதாகக் கணக்கிட்டது. கணக்கைச் சரிசெய்ய நாலாண்டுக்கு ஒருமுறை (Leap Year) ஒரு நாள் பெப்ரபரி மாதத்துக்குரிய நாட்களோடு கூட்டப்பட்டது.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 993



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்
## திருகோணமலை

*"மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்து பின்னே."*

அந்நியர் ஆட்சிக்குட்பட்ட இலங்கை போத்துக்கேயர், ஒல்லாந்தர் எனப் பல அந்நியர்களாலும் ஆளப்பட்டு, சுதந்திரம் அடையும் வரை பிரித்தானியர்களால் ஆளப்பட்டது. பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் திருகோணமலையில் கடற்படைத்தளம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஆங்கிலேயர் ஈடுபட்டனர். இத்தளத்திலே பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து சீக்கியமக்களையும், பஞ்சாபி மக்களையும் அழைத்து வந்தனர். இவ்வாறு வந்த மக்கள் தமது நாடுகளிலே கடைப்பிடித்து வந்த மதவழிபாடுகளையும், அவற்றோடு தொர்டர்புடைய விழாக்களையும் திருகோணமலையிலும் பின்பற்றத் தொடங்கினார்கள். இவற்றுள் பஞ்சா எடுத்தல் என்ற விழாவும் முக்கியமானதாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு விழாவாகும்.

பஞ்சாக்கள் காகம்போல முக்கோணவடிவிலே கட்டப்படும். இதனைத் தேர்போல அலங்கரித்து அதில் பஞ்சா என்ற சின்னத்தை வைத்து வீதிதோறும் கொண்டு சென்று பெருவிழாவாக இம்மக்கள் கொண்டாடுவது அக்கால வழக்கமாகக இருந்துள்ளது. இவ்விழாவிற்கு திருகோணமலையின் பல இடங்களிலிருந்தும் இஸ்லாமியர்களும் ஏனையோரும் வந்து கலந்து சிறப்பிப்பர். பஞ்சா என்னும் விழா திருகோணமலையிலுள்ள பல பள்ளிவாசல்களிலும் நடைபெற்றது. அழகாக அலங்கரிக்கப்பட்ட பஞ்சாக்களை அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் வைத்து வீதிதோறும் கொண்டுசெல்வர். விழா முடிவில் அந்தப் பஞ்சாக்களை, வில்வபத்திரிக் கோணேசர் கோயிலுக்கு அருகிலிருந்த குளத்திலே போட்டுவிடுவார்கள். இக்காரணத்திலால் இக்குளத்திற்குத் தக்கியாக்குளம் என்ற பெயர் ஏற்பட்டது.

பஞ்சாபி மக்கள் கடற்படைத்தளம் அமைக்கும் ஒப்பந்தம் முடிந்து, தமது நாட்டுக்குத் திரும்பிய பின்னர் இவ்விழா சிறிது சிறிதாக அருகிப் பின்னர் மறைந்து விட்டது. ஆனாலும் இங்குள்ள இந்துக்கள் பஞ்சாவிழாவைக் கும்பவிழாவாக நடத்த ஆரம்பித்தார்கள். விஜயதசமியன்று இக்கும்பவிழா பரவலாக நடைபெறும். கும்பவிழாநாளில் கும்பங்கள், கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்திபூர்வமாக கலைச்சிறப்புடன் வீதிகளில் வருவதைக் காணலாம். எல்லா ஆலயங்களிலிருந்தும் கும்பங்கள் புறப்பட்டு வீதிவழியாக ஒரு ஆலயத்தின் கும்பம், இன்னொரு ஆலயத்தின் கும்பத்தோடு எதிர்ப்படாதவகையில் ஒழுங்கு முறையுடன் அனைத்துக் கும்பங்களும் வீதிவழியே வலம்வரும். இவ்வேளையில் கும்பம், கரகங்களைத் தாங்கி வருவோர், ராஜமேளம் அடிக்கப்படும் தாளத்திற்கமைய ஆடிக்கொண்டு வருவார்கள். இவ்வேளையில் உடுக்கடித்துக் காவியங்கள், காவடிச்சிந்து ஆகியவற்றைப் பாடுவது வழக்கம். மங்களவாத்தியங்களும் வாசிக்கும் வழக்குண்டு.. கும்பம், கரகங்களைத் தாங்கி வருவோர் உருவேறி ஆடியபடி வருவர். இவ்வேளையில் அருள்வாக்குக் கூறுவதுமுண்டு. விஜயதசமி இரவுபூராவும் இவ்விழா நடைபெறும். இவ்வாறு வீதியுலா வரும் கும்பம், கரகம் ஆகியவற்றை வரவேற்க, மக்கள் தமது வீட்டுவாசல்களில் நிறைகுடம்வைத்துக் காத்திருப்பர். ஒவ்வொரு ஆலயங்களிலிருந்தும் கும்பம், கரகம் ஆகியவை புறப்பட்டு ஏனைய ஆலயங்களுக்குச் சென்று தரிசித்துக்கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்தைப் போய்ச் சேர்வதோடு கும்பவிழா நிறைவுபெறும்.

கும்பம் எனப்படுவது பெரிய செப்புக் குடத்தில் வேப்பம் பத்திரத்தினால் நிலையான அடித்தளம் அமைத்து, சுமார் பத்தடி உயரத்திற்குத் தேர்போல மலர்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்து, கட்டப்பட்டிருக்கும். எல்லா ஆலயங்களிலுமிருந்து புறப்படும் கும்பங்களும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு வந்து தரிசித்தே செல்லும். இக்காரணத்தினால் கும்பவிழாவன்று பெருந்திரளான மக்கள் இவ்வாலயத்தில் கூடுவர். இவ்விழாவின் மூலம் தமிழர்களின் பாரம்பரியக் கலைகளான உடுக்கு, மேளம், மங்களவாத்தியங்கள், காவடிச்சிந்து, காவியப்பாடல்கள், கரகாட்டம் போன்றவற்றிற்குப் புத்துயிர் கொடுக்கப்படுகின்றது. அத்தோடு இவ்விழாவைக் காணும் வாய்ப்புப்பெற்ற இளந்தலைமுறையினரும் இம் மரபுக்கலைகளைப்பற்றி அறிய கும்பவிழா ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்விழாவின்போது தமிழ் மக்கள் ஒன்று கூடி வழிபாடு செய்யக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பமாக இவ்விழாவைக் கருதுவர்.

இதே நாளன்று இவ்வாலயத்தில் மானம்பு திருவிழாவும் நடைபெறும். அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மானம்பு திருவிழாவிற்காக எழுந்தருளுவார். இவ்விடத்தில் கோணேசர் ஆலயத்திலிருந்து மாதுமை அம்பாளும், சிவன் கோவிலிலிருந்து விசாலாட்சி அம்பாளும் எழுந்தருளி வந்து மானம்பு விழா நடத்திச் செல்வர். மானம்பு விழாவில் வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தோடு தொடர்புடைய பல கதைகள் காணப்படுகின்றன. ஒரு சமயம் உமாதேவியார் வன்னிமரத்தின் கீழ் இளைப்பாறியதாகவும், இராமன் சீதையைத் தேடிப் புறப்பட்டுச் செல்லுமுன் வன்னிமரத்தை வலம் வந்து புறப்பட்டுச் சென்று வெற்றி பெற்றதாகவும் கூறுவர். இவ்வாறே பாண்டவர்கள் நாடிழந்து காடேகி வாழ வேண்டிய நிலை ஏற்பட்ட காலத்தில் பாதுகாப்புக் கருதி, வன்னிமரப் பொந்துகளில் தமது ஆயுதங்களை ஒளித்துப் பாதுகாத்தனர்.

அஞ்ஞாதவாசம் முடிந்து தங்களைப் பாதுகாத்த துர்க்கையைப் போற்றி ஒன்பது நாட்கள் வழிபாடு செய்தனர். பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று ஆயுதங்களைக் கையிலெடுத்துத் தேவியை வணங்கி, மீண்டும் தமது நாடேகினர்.

பஞ்ச பாண்டவர்கள் துர்க்கா நட்சத்திர மாலிகா துதி என்ற இருபத்தியேழு சுலோகங்களைக் கொண்ட துதியைப் பத்து நாட்களும் ஓதி, வழிபட்டுப் பல பேறுகளைப் பெற்றனர். இவ்வாறான பல கதைகளோடு வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தினை நினைவுகூர்ந்து அன்னையின் அருளைப் போற்றும்வகையில், வன்னிமரக்கிளையொன்றை வாழைமரத்திலே கட்டிவைத்து பூசை செய்து வன்னி வாழைவெட்டு நடைபெறும். இவ்வாறு நடைபெறுவதையே வழக்கில் மானம்பு என அழைப்பர். வெற்றிகளையும், வளங்களையும் அருளவல்ல நவராத்திரி விரதத்தினை மாநோன்பு என்றே ஆதியில் அழைத்துள்ளனர். இச் சொல் பிற்காலத்தில் மருவி வாழைவெட்டன்று நடைபெறும் விழாவை மானம்பு என அழைக்கும் வழக்கமாக மருவியுள.

*வளரும்...*

MURALI BUS LTD. 29 years
416.455.3514



56 SEATER COACH BUS WWW.MURALIBUS.CA
Canada & US Anywhere • Aiport Service On Time

T2
Cuba சுற்றுலா *All Inclusive*
குளிர் காலத்தை விட்டு வெப்பமான கால நிலையில் 7 நாட்கள் சுற்றுலா
May 13th (7 Days)
விமானச்சீட்டு Hotel
24மணி நேரமும் உணவு வகைகள் (Bar)
கிராமப்புற சுற்றுலா, புளியமரம்,
நாவல் மரம்
வாழை இலையில் சாப்பாடு,
உடன் ஆட்டிறைச்சி, உடன் மீன்,
குதிரை வண்டியில் பவனி, இளநீர்
(Home to Home) - உங்கள் வீட்டு
வாசலில் இருந்து
உங்கள் வீடு வரை (Not Free).
உங்கள் சொந்தச் செலவுகளுக்கு
நீங்களேபொறுப்பு)
ஒருவருக்கு $1400 மட்டுமே.
*2 people per room

T3
Rajarajeswary Temple
& Pitsburg S.V. Temple
May 21 & 22 (2 Days) $260
*Including Hotel - 4 people per room


T4
Montreal Tour and
Val Morin Temple
தேர் திருவிழா
July 16 and 17th $225
Saint Joseph Church - Lunch Buffet
Premium Outlet Shopping (4 people in a room)


T5
EAST COAST
* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach
July 1st - 7th
4 Province Tour
$990 (each person)

*Quebec *Nova Scotia
*New Brunswick
(4 மாகாணங்கள்) *Prince Edward Island (P.E.I)

T6
SOON!
New York, Washington DC, Pittsburgh
4 நாட்கள் சுற்றுலா


முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com
Vaccination is mandatory (at least 2 doses)

(21ம் பக்கத் தொடர்ச்சி)

## சித்திரை முதல் நாள் சித்திரைப் புத்தாண்டு, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு!

ஆனால் உண்மையில் ஒரு ஆண்டு 365 நாட்கள், 5 மணித்தியாலங்கள், 48 மணித்துளிகள், 45.51 வினாடிகள் (365.242189) கொண்டது ஆகும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் யூலியன் ஆண்டு 10.8 வினாடிகள் நீண்டுவிட்டது. இந்த நேர வேறுபாட்டால் கிபி 1582 அளவில் 10 நாட்கள் (1582 - 325)/120 =10) அதிகமாகிவிட்டது. இந்த வேறுபாட்டை போப்பாண்டவர் கிறிகோறி (புசநபழசல) 4 ஒக்தோபர் 1582 க்குப் பின்னர் 15 ஒக்தோபர் 1582 எனக் குறைத்துவிட்டார். அதன் பின்னர் 400 ஆல் பிரிக்கக்கூடிய நூற்றாண்டுகளில் (1700, 1800, 1900) ஒரு நாள் கூட்டப்பட்டது. ஆனால் 2000 இல் கூட்டப்படவில்லை.

தொல்காப்பியர் ஒரு ஆண்டுக்கான ஆறு பெரும்பொழுதுகளைச் சொல்லும்போது ஆவணி மாதமாகிய கார் காலத்தையே தொடக்கமாகக் குறிப்பிடுகிறார். அதன்பிறகே கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் காலங்களை வரிசைப்படுத்துகிறார். மேலும் வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை. யாமம் என்பதே ஒரு நாளில் அடங்கிய ஆறு சிறுபொழுதாகும். ஒரு நாள் 60 நாளிகை கொண்டது என்று கணக்கிட்டனர். ஒரு நாளிகை 24 மணித்துளி ஆகும். இது 2500 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் கார்காலத் தொடக்கமாகிய ஆவணி மாதத்தையே ஆண்டின் முதல் மாதமாகக் கொண்டனர் என்பதை உணர்த்துகிறது.

சித்திரை முதல் நாளை புத்தாண்டு என்று கொண்டாடும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்ததில்லை. இதனால் சித்திரையை ஆண்டின் முதல் மாதமாகக் கொள்ளும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டதாக இருக்க வேண்டும். எப்போது ஆண்டுத் தொடக்கம் சித்திரைக்கு மாறியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியாமல் இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழா சித்திரை மாதம் முழுநிலா அன்று கொண்டாடப்பட்டது.

காலத்தை இவ்வளவு நுணுக்கமாகக் கணக்கிட்ட புலவர்கள், இலக்கண ஆசிரியர்கள், அறிஞர்கள் தமிழர்களுக்கென ஒரு பொதுவான தொடர் ஆண்டை வரையாது போயினர். அதனால் அரசர்கள் புலவர்கள் சான்றோர்கள் பிறப்பு ஆண்டு, மறைவு ஆண்டு இவற்றை ஒரு தொடர் ஆண்டோடு தொடர்பு படுத்தி வரலாற்றைப் பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது.

அரசர்கள் முடிசூடிக் கொண்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த அரசர் 25 ஆண்டுகள், 50 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் எனக் குறிப்பிட்டார்கள். புலவர்களைப் பொறுத்தளவில், திருவள்ளுவர் உட்பட, பிறந்த - இறந்த ஆண்டுபற்றிய எந்தக் குறிப்பும் வரலாற்றில் இல்லை.

மேலே கூறியவாறு தமிழர் வரலாற்றில் காலக் குழப்பம் இருப்பதற்கு தொடர் ஆண்டு இல்லாதது முக்கிய காரணமாகும். இருக்கிற 60 ஆண்டுகளும் சுழற்சி முறையில் வருவது மேலும் குழப்பத்தை உருவாக்கவே உதவியது. இதனால் வரலாற்று நிகழ்ச்சிகளை 60 ஆண்டுகளுக்கு மேல் கணக்கிட முடியவில்லை.

ஒருவர் பிரபவ ஆண்டில் பிறந்தார் என்றால் எந்தப் பிரபவ ஆண்டு என்பது தெரியாமல் இருந்தது. ஆண்டுகள் வரலாற்றைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப் பயன்பட வேண்டும். அவை குழப்பத்திற்கு இடமின்றி இருத்தல் வேண்டும்.

எனவே சித்திரைப் புத்தாண்டை கொண்டாடும் அதே வேளை தை முதல்நாளை தமிழ்ப் புத்தாண்டின் - திருவள்ளுவர் ஆண்டின் - தொடக்கம் எனக் கொண்டாடுவோம்!

## இலங்கையில் பொருளாதார நெருக்கடி! தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள்

"இலங்கையில் பொருளாதார நெருக்கடி! தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள்" என்னும் தலைப்பிலான மெய்நிகர் ஊடான கருத்தரங்கு இந்த வாரம் நடைபெறுகின்றது. இலங்கையிலிருந்து சமூக ஆர்வலர்கள் மூவர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளனர். விபரங்களுக்கு இங்கு காணப்பெறும் அறிவித்தலைப் பார்க்கவும்.




(18ம் பக்கத் தொடர்ச்சி)

## இராசபக்கச குடும்ப ஆட்சி கவிழுமா இல்லையா என்பது பெரிய கேள்விக் குறியாகவே இருக்கிறது?

(1) தற்போதைய அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் அனைத்து அரசாங்கங்களுக்கும் ஒரு தெளிவான செய்தி - குடிமக்களின் பணம் மற்றும் உரிமைகளில் கைவைக்கக் கூடாது.
(2) அரசியல்வாதிகள் அனைவரும் விழிப்படைந்த மக்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். குடிமக்கள் விழித்துவிட்டார்கள். ஒரு சோற்றுப் பொட்டலம் மற்றும் மது போத்திலுக்கும் அவர்கள் விலை போக மாட்டார்கள்.
(3) அரசாங்க அதிகாரிகளுக்கும் தனியார் நிறுவன முகாமையாளர்களுக்கும் ஒரு தெளிவான செய்தி. குடிமக்கள் உங்களைப் பொறுப்பேற்கச் செய்வார்கள்.
(4) 20 ஆவது சட்ட திருத்தம், நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி பதவியை நீக்குவதற்கான அழுத்தம். இதன் மூலம் ஒரு தனிமனிதனுக்கு வழங்கப்பட்ட கட்டற்ற மற்றும் சர்வாதிகார அதிகாரங்களை குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல்.
(5) குடிமக்கள் அரசியலைப் பற்றி விமர்சன ரீதியாக சிந்திக்கவும் சீர்தூக்கிப் பார்க்கவும் கற்றுக்கொண்டுள்ளனர். பெரும்பான்மையான கருத்தை அல்லது அரசியல்வாதிகள் அவர்களை சமாதானப்படுத்த என்ன சொல்கிறார்கள் என்பதை இனிமேல் கருத்தில் கொள்ளமாட்டார்கள்.
(6) ஒரு குடிமகனின் இயக்கம் ஒரு பொதுவான நோக்கத்திற்காக இயல்பாகவும் அமைதியாகவும் முன்னெடுக்க முடியும் என்பதை அமைதிவழியான போராட்டம் காட்டுகிறது.

மேற்கூறிய அனைத்தும் அரசியல் சார்பற்ற அல்லது மையப்படுத்தப்பட்ட தலைமைத்துவம் இல்லாமல் அமைதியான போராட்டங்கள் மூலம் சாதிக்கப்பட்டுள்ளன.

2010 இன் முற்பகுதியில் அரபு வசந்தம் அரபு உலகின் பெரும்பகுதி முழுவதும் பரவிய அரசாங்க எதிர்ப்பு போராட்டங்கள், எழுச்சிகள் மற்றும் ஆயுதமேந்திய கிளர்ச்சிகளின் தொடக்கம் ஆகும். இது ஊழல் மற்றும் பொருளாதார தேக்கநிலைக்குப் பதிலளிக்கும் வகையில் தொடங்கிய மக்கள் போராட்டமாகும்.

அரபு வசந்தம் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் சனநாயக சார்பு எதிர்ப்புக்கள் மற்றும் எழுச்சிகளின் அலைகள் மற்றும் பிராந்தியத்தில் ஆயுதமேந்திய கிளர்ச்சிகளின் தொடக்கம் ஆகும். 2010 டிசெம்பரில் மத்திய துனிசியாவில் முதல் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இருபத்தாறு வயதான தெரு வியாபாரி மொஹமட் பௌசிசி, உள்ளூர் அதிகாரிகளால் அவர் நடத்தப்பட்ட விதம் குறித்துத் தனது எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

இதனால் ஊடகங்களில் "மல்லிகைப் புரட்சி" என்று அழைக்கப்படும் ஒரு எதிர்ப்பு இயக்கம் விரைவாக நாடு முழுவதும் பரவியது. துனிசிய அரசாங்கம் தெரு ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலமும் அரசியல் மற்றும் பொருளாதார சலுகைகளை வழங்குவதன் மூலமும் அமைதியின்மையை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தது. இருப்பினும், எதிர்ப்புக்கள் விரைவில் நாட்டின் பாதுகாப்புப் படைகளை முறியடித்தன. இதனால் நாட்டின் சனாதிபதி ஜைன் அல்-அபிடின் பென் அலி **(Zine al-Abidine Ben Ali )** தனது பதவியைத் துறந்து 14 சனவரி, 2011 அன்று நாட்டை விட்டு வெளியேறினார்.



துனிசியாவில் பென் அலி வெளியேற்றப்பட்டதன் காரணமாக ஈர்க்கப்பட்ட இளம் எகிப்தியர்களிடையே அதே போன்ற போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சனவரி 25 அன்று எகிப்து முழுவதும் மக்கள் இலட்சக் கணக்கில் திரண்டார்கள். எகிப்திய பாதுகாப்புப் படையினர் போராட்டங்களை கட்டுப்படுத்த போராட்டக்காரர்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கியது. ஆனால் அது தோல்வியடைந்தது. கெய்ரோ மற்றும் நாடு முழுவதும் எதிர்ப்பாளர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே பல நாட்கள் பாரிய ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மோதல்கள் இடம்பெற்றன. பிறகு, எகிப்திய பாதுகாப்புப் படையினர் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக ஆயுத பலத்தைப் பயன்படுத்தப் போவதில்லை என அறிவித்தது. இது மக்கள் போராட்டத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. இராணுவத்தின் ஆதரவை இழந்த ஹொஸ்னி முபாரக் **(Hosni Mubarak)** கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு பிப்ரவரி 11 அன்று பதவி துறந்தார்.


துனிசியா மற்றும் எகிப்தில் எதிர்ப்பாளர்களின் விரைவான வெற்றிகளால் ஊக்கமடைந்த யேமன், பஹ்ரைன், லிபியா, சிரியா மக்கள் சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் 2011 இன் பிற்பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டடங்களை நடத்தினார்கள். இருப்பினும், துனிசியா மற்றும் எகிப்தைப் போலல்லாமல், இந்த நாடுகளில் மக்களின் அதிருப்தி வெளிப்படவில்லை. ஆனால் எதிர்க்கட்சிக் குழுக்கள் மற்றும் ஆளும் ஆட்சிகளுக்கு இடையே இரத்தக்களரி மற்றும் நீடித்த - போராட்டங்களுக்கு வழிவகுத்தது.

லிபியாவில் 2011 பெப்ரவரி நடுப்பகுதியில் முயம்மர் அல்-கடாபியின் ஆட்சிக்கு எதிரான போராட்டங்கள் ஆயுதமேந்திய கிளர்ச்சியாக வேகமாக விரிவடைந்தது. மார்ச் மாதம் கிளர்ச்சிப் படைகள் தோல்வியின் விளிம்பில் இருப்பதாகத் தோன்றியபோது, நேட்டோ தலைமையிலான ஒரு சர்வதேச கூட்டணி கடாபியின் படைகளைக் குறிவைத்து வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. நேட்டோ தலையீடு இறுதியில் கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக இராணுவ சமநிலையை மாற்றியிருந்தாலும், கடாபி தலைநகரான திரிபோலியில் மேலும் பல மாதங்களுக்கு அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டார். ஓகஸ்ட் 2011 இல் கிளர்ச்சிப் படைகள் திரிபோலியை கைப்பற்றியபோது கடாபி கொல்லப்பட்டார்.

இலங்கையிலும் ஒரு அரபு வசந்தம் வீசுகிறது. ஒரு வேறுபாடு. அரசுக்கு எதிரான போராட்டம் அமைதியாகவே நடைபெறுகிறது. ஆயுதப் போராட்டமாக மாற வாய்ப்பு அறவேயில்லை.

இராசபக்சாக்கள் போராடும் இளைஞர்கள் ஒரு கட்டத்தில் ஓய்ந்து, ஒதுங்கி விடுவார்கள் என நினைக்கிறார்கள். அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சனாதிபதி கோட்டாபய இராசபக்சவுக்கு எதிரான குற்றவியல் தீர்மானம் நிறைவேறும் என்பதும் நிச்சயமில்லை. எனவே இராசபக்கச குடும்ப ஆட்சி கவிழுமா இல்லையா என்பது பெரிய கேள்விக்குறியாகவே இருக்கிறது.

# இந்தியாவில் இந்தி விவகாரம் 'வரலாறு தெரியாமல் எரியும் நெருப்பில் விரலை விடாதீர்' : கி.வீரமணி



''மீண்டும் இந்தித் திணிப்பா? வரலாறு தெரியாமல் எரியும் நெருப்பில் விரலை விட வேண்டாம்'' என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கூறியுள்ளார். இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஆங்கிலத்தை ஆட்சி மொழியிலிருந்து அறவே நீக்கிவிட்டு, அந்த இடத்தில் இந்தி மொழியையே பயன்படுத்தவேண்டும் என்று கூறியுள்ளது, நாட்டில் ஒரு பெரும் புயலையே கிளப்பி வருகிறது. ஆட்சியாளர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை, கற்காவிட்டாலும்கூட பாலபாடம் எந்த நாட்டிலும், மக்களிடையே மிகவும் உணர்ச்சியைக் கிளப்பக்கூடிய பிரச்சினை மொழிப் பிரச்சினையாகும் என்பதே! (Most Sensitive Problem). இதில் கை நுழைப்பது, கொழுந்துவிட்டு எரியும் தீக்குள் விரலை விட்ட விபரீதம் ஆகிவிடும் என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. வங்கதேசம் உருவானது எந்த அடிப்படையில்? இந்தியாவை விட்டு மத, கலாசார அடிப்படையில் பிரிந்த அண்டை நாடான பாகிஸ்தானிலிருந்து, வங்கதேசம் என்ற 'பங்களாதேஷ்' உருவானதற்கு எது அடிப்படை? வங்க மொழியை அந்நாடு புறக்கணித்துவிட்டு, பெரும்பான்மை என்ற பெயரில் உருது மொழியை கிழக்கு வங்க மாநிலத்திலும் திணித்ததுதானே!

இதை மறந்து ஒரே நாடு, ஒரே மொழி (சமஸ்கிருதம், இந்தி), ஒரே மதம், ஒரே கலாசாரம் என்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் இந்தி சமஸ்கிருதத் திணிப்பை நாட்டின்மீது திணிப்பது, நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பதாகாதா? 'புருட் மெஜாரிட்டி' என்று அதிகப் பெரும்பான்மை என்ற மணல்மேட்டில் கட்டடம் கட்டி மகிழலாமா? உள்துறை அமைச்சர், ஒன்றிய ஆட்சியை இயக்கும் ஆர்எஸ்எஸ் முதலிய பாஜக பிரதமர் மோடி தலைமையில் ஜனநாயகம் மூலம் ஆட்சியைப் பிடித்து, அதனை அதிவேகமாக எதேச்சதிகாரமாக ஆக்கி வருகின்றவர்கள் வரலாற்றின் சில பக்கங்களைப் புரட்டிப் படிக்கவேண்டும்.

'இந்தியை பெரும்பான்மை மக்கள் பேசுகிறார்கள்' என்ற வாதம் அறிவுப்பூர்வமானதா? பன்மொழிகளும், பல கலாசாரங்களும் உள்ள ஒரு கூட்டாட்சியில், 'வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity) காண இப்படிப்பட்ட மொழித் திணிப்புகள் எப்படிப்பட்ட விளைவுகளை உருவாக்கும் என்பதை ஆட்சி அதிகாரம் படைத்துள்ள மத்தியில் உள்ளவர்கள் உணராமல், கூரைமீது ஏறி கொள்ளிக்கட்டையைச் சுழற்றலாமா?

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் 'மொழிகள்' என்ற தலைப்பில் 22 மொழிகள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு மொழிக்கு மட்டும் ஏன் இப்படி சிம்மாசனம்? புழக்கத்தில் பேச்சு வழக்கு, எழுத்து, புராதன மொழி வாழும் மொழி எம்மொழி செம்மொழி தமிழுக்கு உரிய மரியாதை இவ்வாட்சியில் கிடைக்கிறதா?எனவே, நாட்டில் வேலை கிட்டாத நிலை, பண வீக்கம் ஏறும் விலைவாசிகள், பரவிவிட்ட வறுமை, இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், இந்தித் திணிப்பில் ஈடுபட்டால், அதற்கு ஆட்சியாளர்கள் கடும் விலையைத் தரவேண்டும் என்பதை உணர்ந்து, தமிழ்நாடு மட்டும் ஹிந்தியை எதிர்க்கவில்லை; பல மாநிலங்களிலும் அவர்கள் மொழி உணர்வை உரிமையெனக் கருதிடுகிறார்கள் என்ற உண்மையை ஏனோ உணர மறுக்கிறார்களோ, 'டெல்லியில் ஆளும் நவீன ராஜாக்கள்' என்பதே நம் கேள்வி. எனவே, மக்களின் உணர்ச்சி நெருப்போடு விளையாடவேண்டாம்''என்று கி. வீரமணி கூறியுள்ளார்.

# 'உத்தரப்பிரதேச மேல்சபை தேர்தல்: பாஜகவிற்கு வாரணாசியில் தோல்வி

உத்தரப்பிரதேச மேல்சபையின் 36 எம்எல்சிக்களுக்கான தேர்தல் முடிவுகளில் சமாஜ்வாதி கட்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதேபோல், வாரணாசியில் பாஜக தோல்வி அடைந்துள்ளது.உத்தரப்பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலை அடுத்து அதன் மேல்சபையின் 27 எம்எல்சி பதவிகளுக்கும் தேர்தல் ஏப்ரல் 9 இல் நடைபெற்றது. உ.பி.,யின் எம்.பி மற்றும் எம்எல்ஏக்கள் அளித்த வாக்குகளில் 98.11 சதவிகிதம் பதிவாகின. நேற்று வெளியான இதன் முடிவுகளில் பாஜக கூட்டணியின் 24 உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

36 எம்எல்சிக்களுக்கான தேர்தலில் பாஜகவின் 9 வேட்பாளர்கள் ஏற்கெனவே வென்றதாக அறிவிக்கப்பட்டனர். இதற்கு, அந்த 9 பேரை எதிர்த்து எவரும் மனுக்களை தாக்கல் செய்யாதது காரணமானது. மொத்தம் 100 உறுப்பினர்கள் கொண்ட உ.பி. மேல்சபையில், பாஜகவிற்கு தற்போது மூன்றில் இரண்டு பங்காக சுமார் 64 உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். இது உபி மேல்சபையில் சமீபகால வரலாற்றில் முதன்முறை எனக் கருதப்படுகிறது. இதன்மூலம், உ.பி. சட்டப்பேரவையின் 403 இல் 275 தொகுதிகள் பெற்று இரண்டு சபைகளிலும் பாஜக தனிமெஜாரிட்டி கொண்ட கட்சியாகி விட்டது.தற்போது உபி மேல்சபையில் ஆளும் பாஜகவிற்கு 34, அகிலேஷ்சிங்கின் சமாஜ்வாதி 17, மாயாவதியின் பகுஜன் சமாஜ்(பிஎஸ்பி) 4 மற்றும் காங்கிரஸ், அப்னா தளம்(சோனுலால்), நிஷாத் ஆகிய கட்சிகள் தலா ஒன்று என உறுப்பினர்களை கொண்டுள்ளனர்.

மேலும், தலா 2 எம் எல் சிக்களை கொண்ட இருஆசிரியர் குழுக்களில் 4 மற்றும் தலா ஒன்று பெற்ற சுயேச்சைகளின் இரண்டு குழுக்களுக்கு 2 எம்எல்சிக்களும் இடம் பெற்றுள்ளனர். மீதம் உள்ள 36 எம்எல்சிகளின் பதவிகள் காலாவதியாகி தற்போது தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் காங்கிரஸ் மற்றும் பகுஜன் சமாஜ் தோல்வி அச்சத்தினால், போட்டியிலிருந்து விலகின. இதன் காரணமாக, ஆளும் பாஜக மற்றும் எதிர்கட்சியான சமாஜ்வாதி கூட்டணிக்கு இடையே முக்கியப் போட்டி இருந்தது. இதில், புதிய எம்எல்சிக்களாக பாஜக 24, சுயேச்சைகள் 3 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.அகிலேஷிங் யாதவின் சமாஜ்வாதியும் அதன் கூட்டணியின் ஒரு வேட்பாளருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. இது உ.பி.யின் முக்கிய எதிர்க்கட்சியான சமாஜ்வாதிக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

இது குறித்து உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறும்போது, 'இந்த வெற்றியின் மூலம் உ.பி.வாசிகள் தமக்கு பிரதமர் நரேந்திரமோடி தலைமையின் மீதுள்ள நம்பிக்கையை மீண்டும் நிரூபித்துள்ளனர்.' எனத் தெரிவித்துள்ளார்.இந்த வெற்றியின் மூலம் பாஜக உ.பி.யின் இரு சபைகளிலும் தாம் விரும்பும் மசோதாக்களை தங்குதடையின்றி நிறைவேற்ற முடியும் சூழல் உருவாகி உள்ளது. வழக்கமாக உ.பி. சட்டப்பேரவை தேர்தலுக்கு பிறகு நடைபெறும் அதன் மேல்சபை தேர்தலில் ஆளும்கட்சியே வெற்றி பெறுவது வழக்கம். கடந்த 2004 இல் முதல்வராக முலாயம்சிங் அமர்ந்த பின் மேல்சபையின் 36 இல் சமாஜ்வாதிக்கு 24 இல் வெற்றி கிடைத்தன.

2010 இல் பிஎஸ்பியின் மாயாவதி முதல்வராக பின் மேல்சபையின் 36 இல் அவருக்கு 34 உறுப்பினர்கள் கிடைத்தனர்.சமாஜ்வாதியின் முதல்வராக அகிலேஷ்சிங் யாதவ் வகித்த போது 2016 தேர்தலில் மேல்சபையின் 36 இல் அவர் 31 உறுப்பினர்கள் பெற்றிருந்தார். எனினும், தற்போது பாஜக பெற்றிருப்பது போல், 3 இல் 2 பங்கு எந்த கட்சிக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

பாஜகவிற்கு வாரணசியில் தோல்வினனினும், பாஜகவிற்கு பிரதமர் நரேந்திரமோடியின் வாரணாசி மாவட்டத்திற்கான மேல்சபையில் தோல்வி கிடைத்துள்ளது.உ.பி. மேல்சபையில் 27 எம்எல்சிக்களுக்கான தேர்தலில் 24 பெற்ற பாஜகவிற்கு மூன்றில் தோல்வி கிடைத்தது. இதில் ஒன்றாக வாரணாசியில் போட்டியிட்ட சுதாமா பட்டேல் 170 வாக்குகளுடன் மூன்றாவது இடம் பெற்று தனது வைப்புத் தொகையை இழந்துள்ளார்.

இங்கு சமாஜ்வாதி வேட்பாளர் 345 வாக்குகளுடன் இரண்டாவது இடம் பெற்றிருக்கிறார். பாஜக தோல்வியுற்ற வாரணாசியில் வென்றது சுயேச்சையான அன்னபூர்ணா சிங். இவர் உ.பி.யின் குற்றப்பின்னணி அரசியல்வாதியான பிரிஜேஷ்சிங்கின் மனைவி. இவருக்கு 4,234 வாக்குகள் கிடைத்தன.இது, உ.பி. பாஜகவை கவலைகொள்ள வைத்துள்ளது. இந்தியாவில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, உ.பி., பிஹார் மற்றும் மகராஷ்டிரா ஆகிய ஆறு மாநிலங்களில் மட்டுமே மேல்சபை உள்ளது குறிப்பிடத்தக்கது

# குருப்பெயர்ச்சி: திட்டை வசிஷ்டேஸ்வர் கோயிலில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்

குருப்பெயர்ச்சியை முன்னிட்டு இன்று அதிகாலை, திட்டை வசிஷ்டேஸ்வர் கோயிலில் உள்ள குருபகவானுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரினசம் செய்தனர்தஞ் சாவூரை அடுத்த திட்டை பகுதியில் அமைந்துள்ள வசிஷ்டேஸ்வரர் கோயில் தமிழகத்தின் தொன்மையான கோயில்களில் ஒன்றாகும்.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற கோயில் இதுவாகும். வசிஷ்ட முனிவரால் பூஜிக்கப்பட்டதால் வசிஷ்டேஸ்வரர் சுயம்புவாக தோன்றியதால் தான் தோன்றீஸ்வரர் என்ற பெயர் கொண்டவர்.

மூலஸ்தான விமானத்தில் சந்திரகாந்தக்கால் வைத்து கட்டப்பட்டுள்ளது. அக்கல் சந்திரனில் இருந்து வரும் கதிர்களால் காற்றில் இருந்து ஈரப்பதத்தை தன்னுள் உறிஞ்சி 24 நிமிடத்திற்கு ஒருமுறை ஒரு சொட்டு நீர் மூலவர் வசிஷ்டேஸ்வரர்



மீது விழும். இத்தகைய சிறப்பு பெற்ற கோயிலில் நவக்கிரகங்களில் சுபகிரகமான குருபகவான் எங்கும் இல்லா சிறப்போடு சுவாமிக்கும், அம்மனுக்கும் இடையில் தனி சன்னதியில் ராஜகுருவாக எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார்.

ஆண்டுதோறும் குருபகவான் ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு பெயர்ச்சி ஆவது குருபெயர்ச்சியாகும்.அதன்படி இன்று(14ம் தேதி) அதிகாலை 4.16 மணிக்கு குருபகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு பெயர்ச்சியடைந்தார். இதையொட்டி குருபகவானுக்கு சிறப்பு அபிஷேகங்களும், ஆராதனைகளும் நடைபெற்றது. பின்னர் வெள்ளி கவசத்தில் பக்தர்களுக்கு குரு பகவான் அருள்பாலித்தார்.

குருப்பெயர்ச்சியையொட்டி வருகிற 24ம் தேதி லட்சார்ச்சனையும், அதைத்தொடர்ந்து 29ம் தேதி தொடங்கி 30ம் தேதி வரை 2 நாட்களுக்கு பரிகார ஹோமம் நடக்கிறது.

# Ontario's Senior Ministers, MPPs and Businessmen Gathered to Support PC Provincial Candidate Logan Kanapathy - Markham-Thornhill

எதிர்வரும் ஒன்ராரியோ மாகாணத் தேர்தலில். கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளராக - Markham-Thornhill. தொகுதியில் போட்டியிடும் லோகன் கணபதி அவர்களை ஆதரித்து உற்சாகமளிக்கும் வகையில் ரொரன்ரோ மாநகரில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் ஒன்ராரியோவின் அமைச்சர்களான Ontario's Minister of Higher Education and Colleges Mrs Jill Dunlop and Minster of Education Stephen Lecce மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல்லினங்களைச் சார்ந்த ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அவர்களோடு தமிழ் பேசும் வர்த்தகப் பிரமுகர்களாக சங்கர் நல்லதம்பி. ரஜீவ் செபராசா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

லோகன் கணபதி அவர்களின் அலுவலக உதவியாளர் சிவா அவர்கள் நிகழ்விற்கு அவசியமான பணிகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தார். லோகன் கணபதி அவர்களின் குடும்பத்தினரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

***செய்தியும் படங்களும் சத்தியன் - கனடா உதயன்***



# கடந்தவையும் கடப்பவையும் (27)

**- உமா மோகன் -**

*முத்தமிழ் வித்தகர் விபுலானந்தற்கும்*
*நற்றமிழ் பேராசான் கணபதிப்பிள்ளைக்கும் - நன்கு*

*வாய்த்த நல்ல மாணவன் - இவர்*
*யாழ் பல்கலையின் முதல் துணைவேந்தர்*

*மூன்று முறை இப்பதவியில் இருந்தவராம் - இவர்*
*நல்ல தமிழ்த்துறைத் தலைவருமாம் பேராவில்*

*இல்லை என்ற மாணவர்க்கு - தன்னிடம்*
*உள்ளதைக் கொடுத்துதவும் உத்தமராம்*

*சிரமப்படும் மாணவர்கள் உதவித்தொகை பெறுவதற்கு*
*பரிந்துரை செய்ததோடு பெறுவதற்கும் உதவினாராம் - அன்று*

*உயர்கலைகள் என்று சில கலைகள்*
*உலாவிவந்த வேளையிலே, எமது*

*நாட்டுப்புறக் கலைகளை மீட்டெடுத்து - பிற*
*நாட்டவரும் பேசும் வண்ணம் மேடையேற்றி - இன்று*

*பல்கலையில் நாடகமும் அரங்கியலும் பாடமாக - அன்று*
*பல்வகையில் பாடுபட்ட பெருமைக்கு உரியவராம்*

*கூத்து என்பதும் குலத்தொழில் போல்*
*பார்க்கப்பட்ட அந்த நாளையிலே - அது*

*தமிழரது சொத்து என்ற - தன்*
*கருத்தில் ஆழம் வைத்தவராம் - கூத்தில்*

*ஆட்டக்கலை வடிவங்கள் பல உள*
*நாட்டாருக்குத் தெரிந்த அதை - அனுபவப்*

*புலமையுள்ள அண்ணாவிமார்களை நாடி - அதில்*
*திறமையுள்ள மாணவரைத் தேடி*

*கூத்துக்கலைக்குப் புத்தாக்கம் கொடுத்து - நாட்டுக்*
*கூத்தை நவீனப்படுத்தி, அன்று அவை*

*புத்தக வடிவில் அச்சேறுதற்கும் - அவர்*
*அச்சாணியாக இருந்துள்ளாராம் - மேலும்*

*செந்நெறி இலக்கியத்திலும் ஈடுபாடுள்ளவர் ஆதலால்*
*தன் முனைவர் ஆய்வுக்கு எடுத்தது பயிற்றுப்பத்து - தமிழில்*

*வந்தது அது 'தமிழர் சால்பு' என்று*
*எந்த மாணவர் ஆயினும் தமிழை*

*ஆராய 'தமிழர் சால்பு' - அதை*
*தேடாமல் இருக்க முடியாது - அன்று*

*அப் புத்தகம் ஒன்றிற்காய் எத்தனை போராட்டம் - அதை*
*எடுப்பவர் திருப்பி வைப்பது அரிது - சிலர்*

*சுழற்சி முறையில் தமக்குள் வைத்தேயிருக்க*
*நூலகர் சுழன்று திரிவார் வேண்டுவார் வேண்டவே.*

*'பிறை அன்பன்' என்னும் பெயரில் - இஸ்லாமிய*
*கலையையும் பண்பையும் சொன்னவர் - அதனால்*

*சாகித்தியப் பரிசும் தான் பெற்றார் - தனது*
*'தமிழியல் சிந்னைகள்' என்பதற்கும் இன்னொன்றாய் - அவர்*

*உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளில்*
*ஊக்கத்தோடு கலந்து கொள்பவர்*

*யாழ்ப்பாணத்தில் நடந்தது நான்காவது மகாநாடு - அதையும்*
*முன்னின்று நல்லபடி நடத்தி முடித்தவராம்*

*பன்முகப் புலமைகொண்ட இப் பேராசான்*
*நற் தரமான மாணவர்களை உருவாக்கி*

*தமிழ்த்துறைகளையும் வளமாக்கி தமிழ் மொழியின்*
*சிறப்புக்கும் உரமாக்கிச் சென்றுள்ளார்*


*'பேராசிரியர் வித்தி' என்று மாணவரும்*
*உரிமையோடு உச்சரிக்கும்*

*பேராசிரியர் சு. வித்தியானந்தன் - அவர்*
*கல்வி கற்ற கல்லூரி வரை வந்தடைந்த மகிழ்வோடு...*

(தொடரும்)



# கனடாவிற்கு வருகை தந்துள்ள தமிழகத்தின் இலக்கியவாதியை வரவேற்று வாழ்த்திய மூன்று கனடிய அரசியல் தலைவர்கள்



தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள தமிழகத்தின் இலக்கியவாதிகளில் ஒருவரான திருமதி அண்ணாமலை தமிழரசியை நடைபெற்ற ஒரு அரச வைபவத்தில் வரவேற்று வாழ்த்திய மூன்று கனடிய அரசியல் தலைவர்கள் அவரிடம் சிறிது நேரம் உரையாடியும் மகிழ்ந்தனர்.

விட்பி (Whitby) நகருக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த கனடாவின் Minister Responsible for the Federal Economic Development Agency for Southern Ontario Minister Helena Jaczek மற்றும் விட்பி (Whitby) நகரத்தின் பாராளுமன்ற உறுப்பினர் MP Turnbull மற்றும் விட்பி (Whitby) நகரபிதா Mayor Mitchell ஆகியோர் கலந்து கொண்டு, விட்பி நகரத்தின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடினர்.

அவ்வேளை அங்கு சமூகமளித்திருந்த தமிழகத்தின் இலக்கியவாதிகளில் ஒருவரான திருமதி அண்ணாமலை தமிழரசியை மேற்படி மூன்று அரசியல் தலைவர்களும் வரவேற்று தமது வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டு தமிழரசியின் கனடிய வருகை பற்றியும் கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பை கனடா உதயன் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# YOUTH CONTEST 2022

## முடிவுகள்

தமிழ் வழித்தோன்றல் மாணவருக்கான மகாஜனன் இளையோர் போட்டி பரீட்சைகள் மாசி 27ஆம் திகதி 2022 அன்று "டொராண்டோ" மற்றும் "மொன்றியால்" நகரிலே சிறப்புற நடைபெற்றது. இப்போட்டிகள் SK முதல் தரம் 12 வரையிலான மாணவருக்கு ஆங்கிலத்திலும் , பிரெஞ்சு மொழியிலும் தமிழ், கணிதம் , பொதுஅறிவு ஆகிய பாடங்களில் நடை பெற்றது. இப்போட்டி பரீட்சை சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர் , மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இப்போட்டி பரீட்சையில் முதல் மூன்று இடங்களை வெற்றிபெற்ற மாணவர்களது விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. இதர பெறுபேறுகள் மற்றும் மேலதிக விபரங்களை எமது இணையத்தினுடாகவோ ( https://www.mahajanacollegeosa.org) அல்லது மின் அஞ்சல் முகவரி ஊடாகவோ தெரிந்து கொள்ளலாம்.

| Index no | Name | Rank |
|---|---|---|
| **JK & SK - Mathematics** | | |
| 22TSK-645 | Aarikaa Sivasankaran | 1 |
| 22MSK-220 | Jeremy Stanislaus | 2 |
| 22TSK-647 | Advik Yugan | 3 |
| **JK & SK - General Knowledge** | | |
| 20TSK-405 | Aarikaa Sivasankaran | 1 |
| 20TSK-422 | Aditi Parthasarathy | 1 |
| 20MSK-102 | Jeremy Stanislaus | 3 |
| **Grade 3 - Mathematics** | | |
| 22T03-456 | Jashwvin Thayalarupar | 1 |
| 22T03-455 | Harry Sujivan | 2 |
| 22T03-453 | Anish Umesh | 3 |
| **Grade 3 - Tamil** | | |
| 22T03-455 | Harry Sujivan | 1 |
| 22T03-475 | Karshiga Vigneswaran | 2 |
| 22T03-463 | Saanuja Vivekanandan | 3 |
| **Grade 3 - General Knowledge** | | |
| 22T03-455 | Harry Sujivan | 1 |
| 22T03-456 | Jashwvin Thayalarupar | 2 |
| 22M03-120 | Arani Balamurugan | 3 |
| **Grade 6 - Mathematics** | | |
| 22T06-547 | Suganthini Vigneswarar | 1 |
| 22T06-540 | Krujan Kuhenthiran | 2 |
| 22T06-537 | Ananya Parthasarathy | 3 |
| **Grade 6 - Tamil** | | |
| 22T06-542 | Nilaa Pratheepan | 1 |
| 22T06-537 | Ananya Parthasarathy | 2 |
| 22T06-548 | Thilakshan Kubendran | 3 |
| **Grade 6 - General Knowledge** | | |
| 22T06-542 | Nilaa Pratheepan | 1 |
| 22M06-162 | Lakshana Sasikumar | 2 |
| 22T06-548 | Thilakshan Kubendran | 3 |
| **Grade 9 & 10 - Mathematics** | | |
| 22T09-599 | Janoshan Sathasivam | 1 |
| 22T09-608 | Tharunika Gnaneshan | 2 |
| 22T09-610 | Aashwin Aravinthan | 3 |
| **Grade 9 & 10 - General Knowledge** | | |
| 22M10-196 | Meshach Stanislaus | 1 |
| 22T09-599 | Janoshan Sathasivam | 2 |
| 22T09-608 | Tharunika Gnaneshan | 2 |

| Index no | Name | Rank |
|---|---|---|
| **Grade 1 - Mathematics** | | |
| 22T01-404 | Hashini Janarthanan | 1 |
| 22T01-411 | Nila Kamalathasan | 2 |
| 22M01-101 | Sakina Srirangan | 3 |
| **Grade 1 - General Knowledge** | | |
| 22T01-404 | Hashini Janarthanan | 1 |
| 22T01-401 | Anisha Jegaruban | 2 |
| 22T01-411 | Nila Kamalathasan | 3 |
| **Grade 4 - Mathematics** | | |
| 22T04-503 | Thenuya Sujeevan | 1 |
| 22T04-493 | Kowshigan Vivekanandan | 2 |
| 22T04-507 | Rithvik Machavaram | 3 |
| **Grade 4 - Tamil** | | |
| 22T04-492 | Kirshanth Niranjan | 1 |
| 22T04-481 | Aaratha Mohan | 2 |
| 22T04-497 | Pranesh Thireshkumar | 3 |
| **Grade 4 - General Knowledge** | | |
| 22T04-503 | Thenuya Sujeevan | 1 |
| 22T04-489 | Risvitha Kirikaran | 2 |
| 22T04-498 | Raji Chithakan | 2 |
| **Grade 7 - Mathematics** | | |
| 22M07-170 | Anbuselven Nadarajah | 1 |
| 22T07-564 | Kishoen Thayalarupan | 2 |
| 22T07-562 | Kathir Paraneetharan | 3 |
| **Grade 7 - Tamil** | | |
| 22T07-555 | Aarani Iyngaran | 1 |
| 22M07-172 | Jeevana Varsha Nallamuth | 2 |
| 22M07-170 | Anbuselven Nadarajah | 3 |
| **Grade 7 - General Knowledge** | | |
| 22T07-572 | Sangeerth Sujeevan | 1 |
| 22T07-565 | Nilujan Kumarathas | 2 |
| 22T07-574 | Thriloush Jasotharan | 3 |
| **Grade 11 & 12 - Mathematics** | | |
| 22T11-627 | Canishan Sureshan | 1 |
| 22T11-631 | Preethaa Kanthikumar | 2 |
| 22T11-628 | Kavean Sriranjarasan | 3 |
| **Grade 11 & 12 - General Knowledge** | | |
| 22T11-630 | Praveen Srisegar | 1 |
| 22T11-631 | Preethaa Kanthikumar | 2 |
| 22T11-628 | Kavean Sriranjarasan | 3 |

| Index no | Name | Rank |
|---|---|---|
| **Grade 2 - Mathematics** | | |
| 22T02-444 | Suyaniththa Suyanthan | 1 |
| 22T02-431 | Dhanya Anushan | 2 |
| 22T02-432 | Eesha Praiyalan | 3 |
| 22T02-433 | Hapishan Kirupakaran | 3 |
| **Grade 2 - General Knowledge** | | |
| 20TSK-405 | Aarikaa Sivasankaran | 1 |
| 20TSK-422 | Aditi Parthasarathy | 1 |
| 20MSK-102 | Jeremy Stanislaus | 3 |
| **Grade 5 - Mathematics** | | |
| 22T05-526 | Thamilini Pirathapan | 1 |
| 22T05-517 | Pranavi Sureshan | 2 |
| 22T05-522 | Sajen Sivasankaran | 3 |
| **Grade 5 - Tamil** | | |
| 22T05-511 | Abinaya Iyngaran | 1 |
| 22M05-150 | Abina krishnan | 2 |
| 22T05-524 | Shagana Myooran | 3 |
| **Grade 5 - General Knowledge** | | |
| 22T05-517 | Pranavi Sureshan | 1 |
| 22T05-526 | Thamilini Pirathapan | 2 |
| 22T05-522 | Sajen Sivasankaran | 3 |
| **Grade 8 - Mathematics** | | |
| 22T08-585 | Changavi Mathialagan | 1 |
| 22T08-590 | Sasvin Karunamoorthy | 2 |
| 22M08-180 | Avina Balamurugan | 3 |
| **Grade 8 - Tamil** | | |
| 22M08-183 | Velvili Mayarajah | 1 |
| 22T08-582 | Adshaya Shivakughan | 1 |
| 22T08-589 | Prisha Yugan | 3 |
| **Grade 8 - General Knowledge** | | |
| 22T08-590 | Sasvin Karunamoorthy | 1 |
| 22T08-585 | Changavi Mathialagan | 2 |
| 22T08-588 | Keerthika Gnaneshan | 3 |

**Scan the QR code see the results online.**

contest@mahajanacollegeosa.org | mahajanantoronto@gmail.com | www.mahajanacollegeosa.org

## ஜீவன் முக்தி (பகுதி 580)

# ஜோதி ஸ்தம்ப தியானம்



பலன்கள்

12 அக்னி தத்துவ சக்தியை நமக்குள் உருவாக்கும் ஜோதி ஸ்தம்ப இயானம்.

2: உங்களது மூலாதார சக்தியை ஆனந்தமாக்குவதற்கு இந்தத் தியான முறை மிகவும் அழகான முறையாகும்.

செயல் முறைக்கான விளக்கம்

முதுகுத் தண்டுவடம் நேராக நிற்க கண்களை மூடியபடி நேராக சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள்.

நீங்கள் ஒளியாக இருப்பதுபோல் கற்பனை செய்தபடி இருங்கள்.

நீங்கள் ஒளி. எல்லாமே ஒளிமயம்.

உங்களை நீங்கள் ஒரு சக்தியாக என்றும் உணர்வதே இல்லை. உங்களை ஒரு பொருளாகத்தான் நீங்கள் உணர்வது வழக்கம். உங்களை ஓர் ஒளித் தூணாகக் கற்பனை செய்துதிறந்து அதன் ஆற்றலைப் பிரபஞ்சத்திற்குள் செல்லும்படி விடவும்.

ஓர் எச்சரிக்கை

எந்தக் காரணம் கொண்டும் இந்தத் தியான பயிற்சியைப் பாதியில் நிறுத்தக் கூடாது.

ஆரம்பிப்பதற்கு முன்பே இரண்டு மணி நேரம் எந்த இடையூறும் ஏற்படாதவாறு செய்து கொள்ள வேண்டும்.

எந்தத் தடங்கலையும் நடுவில் அனுமதிக்க வேண்டாம். பாதி வழியில் நிறுத்திவிட்டு எழுந்தால் சக்தி ஒரு குறிப்பிட்ட மையத்தில் கட்டியாகத் தேங்கிவிடும். அது உடல் மனச் சீர்கேடுகளுக்குக் காரணமாகி விடும்.

உங்களது மூலாதார சக்தியை ஆனந்த சக்தியாக மாற்றுவதற்கு இந்தத் தியானமுறை மிகவும் அழகான முறை.

தொடர்ந்து இந்த முறையில் பயிற்சி செய்து வர உங்களின் அமைதியையும் மனதையும் பாதிக்கும் அளவுக்கதிகமான காம உணர்வுகள் மெல்ல அப்படியே நின்று விடும்.

நாள் முழுவதும் அதிகமான வழிபாட்டுணர்வை நீங்கள் உணர்வீர்கள். சக்தி உங்கள் தலையை நோக்கி அதிக அளவில் பாய்வதால் மிகுந்த உயிர்த் துடிப்பு உள்ளவராக உணர்வதோடு உங்களது செயல்பாடுகளும் மிகுந்த திறமையுடன் அமையும். மிக முக்கியமான அம்சம் நீங்கள் தொடர்ச்சியான ஆனந்த நிலையைப் பெற்றுவிடுவதுதான்.

இனி முதுகெலும்பின் நுனியிலிருக்கும் மூலாதார மையத்தின் மீது கவனத்தைத் திருப்புங்கள். அது ஒளிப் பந்துபோல ஒளிமயமாகவும் உயிர்த்துடிப்பாகவும் இருப்பதாக உணருங்கள்.

இனி, அந்த ஒளி, மேல் நோக்கி, உங்கள் தொப்புள் வரை நகர்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஒருவிதமான வெதுவெதுப்பு உள்ளே மேலெழுவதை உணரலாம். அது உண்மையான வெதுவெதுப்பு! தொப்புளும் இடைப் பகுதியும் ஒளிப் பந்தாக மாறும். ஒளியின் ஒரு பகுதி மேல் நோக்கி உயரத் தொடங்கும்.

அடுத்து, அந்த ஒளி, மேல்நோக்கி இதய மையத்தை நோக்கி நகர்வதாக உணருங்கள்.

இதயத்தில் ஒளியையும் வெது வெதுப்பையும் உணருங்கள்.

மூச்சு ஆழப்படுவதை உணருங்கள் இதயத் துடிப்பு மிகவும் அமைதியாக அடிப்பதை உணருங்கள்.

அந்தச் சக்தி அதன் பிறகு புருவ நடுச் சக்கரம் நோக்கி நகர்வதைக் காணுங்கள். அந்தப் பகுதி முழுவதும் ஒளியால் சூழப்பட்டிருப்பதை உணருங்கள்.

மெதுவாக ஒளிச் சக்தியைத் தலைப்பகுதிக்கு உயர்த்தவும்.

சக்தி தலைப்பகுதியை அடையும்போது பல புதுமையான தோற்றங்களை அனுபவிப்பீர்கள். தலைச்சுற்றலும் மயக்கமும் கூட ஏற்படலாம். அதிக சக்தி தலைக்கு ஏறும்போது பெரிய வெடிப்புப் போன்ற உணர்வும் ஏற்படலாம். அதற்கு அஞ்சாதீர்கள்.

தலை சுற்றுவதுபோலத் தோன்றினால் விழுவதுபோல உணர்ந்தால் விழுந்து விடுங்கள். மயக்கம் வந்தாலும் சரி கவலை வேண்டாம். அது 'யோக நித்திரை' என்னும் மிகுந்த ஆழ்நிலை உறக்கம்.

தியானிப்பவர் பலர் இந்த நிலை அனுபவம் பெறக்கூடும். அதற்காக அஞ்ச வேண்டியதில்லை. அரைமணி நேரத்தில் நீங்கள் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவீர்கள்.

சக்தி தலைப்பகுதியை அடையும்போது தலை முழுவதும் மெதுவாகச் சூடேறும். தலையே ஓர் ஒளிப்பந்தாக மாறிவிடும்.

அக்னி தத்துவ சக்தி உங்களுக்குள் பொங்குவதற்கான அடையாளங்களில் இதுவும் ஒன்று.

இப்போது, அந்த ஆற்றலைப் பிரபஞ்சத்திற்குள் செலுத்துங்கள். உங்கள் தலையே அழகிய தாமரை மலரின் மடல்களாக மெல்லத் திறந்து அதன் ஆற்றலைப் பிரபஞ்சத்திற்குள் செல்லும்படி விடவும்.



## ஆத்ம ஸ்புரணா

பலன்கள்

3: நீர் தத்துவ சக்தியை நமக்குள் உருவாக்கும் ஆத்ம ஸ்புராணா தியானம். நீ ரைப்போல் உங்களுக்குள் ஓடிக் கொண்டிருக்கும் உணர்வோட்டத்தை அதிகரிக்கும் தியானம் இது.

2: ஆழ்ந்த மௌனத்தையும் எதார்த்த நிலையையும் க்ஷண நேரத்தில் பற்றிக் கொள்வீர்கள்.

இந்தத் தியான முறையைப் பற்றி:

ஒவ்வொரு கணமும் நம்முடைய ஒவ்வொரு அசைவையும் கவனத்தில் கொள்ளச் செய்யும் தியானம் இது.

இது தந்திர சாஸ்திரத்தில் இருப்பது. மகா குருவான குர்ட்ஜியெஃப் இதனை பிரபலப்படுத்தினார்.

செயல்முறைக்கான விளக்கம்:



உங்களை நீங்கள் நினைவு கொண்டு இருந்தால் போதும்.

உண்ணும் போதும் பருகும்போதும் நடக்கும் போதும் பேசும்போதும் *நான்* என்ற தன்னுணர்வு 'நான்இருக்கிறேன்' என்ற உணர்வு உங்களுக்குள் என்றும் நினைவு கூறுங்கள்.

இது எளிதானது என்று நினைத்து விட வேண்டாம்.

நாம் நம்மைப் பற்றியதான உணர்வை சில வினாடிகளுக்கு மேல் நீடித்து வைத்திருக்க முடியாது. உடனே மறந்து விடுவோம்.

சுய நினைவு என்பது நினைப்பது அல்ல. அதாவது சிந்திப்பதும் அல்ல.

அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். 'நான் இருக்கிறேன் நான் இருக்கிறேன்' என்ற சொற்களையே திரும்பத் திரும்ப நினைக்கிறோம்.

சொற்கள் அனுபவம் ஆகாது. அதைச் சொல் வடிவமாக மாற்றாதீர்கள். இயல்பாக உணருங்கள்.

நாம் இருக்கிறோம் என்று அதைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். நான் இருக்கிறேன் என்பதை உணருங்கள்.

வெயில் உங்கள் முகத்தின் மேல் விழுவதையும் காற்று உங்கள் கூந்தலைக் கோதுவதையும் உணருங்கள்.

இந்த அனுபவங்களை உங்களுக்குள் இருந்து கொண்டு அனுபவிக்கும் அந்த உண்மையான உங்களை 'நான்' என்று வெறுமனே உணருங்கள்.

ஒரு கணத்தில் நீங்கள் உங்களுக்குள் தூக்கி எறியப்படுவீர்கள்! அப்போது ஆழ்ந்த மௌனத்தையும் எதார்த்த நிலையையும்கூட தெறிக்கும் நேரத்தில் பற்றிக் கொள்வீர்கள்.

அந்த விழிப்புணர்வை எல்லா நேரங்களிலும் உணருங்கள்.

இது 'எங்கும் எப்போதும்' செய்யக் கூடிய தியானம். எனவே இதை எந்த நேரத்திலும் செய்யலாம் நீரைப்போல உங்களுக்குள் ஓடிக் கொண்டிருக்கும் உணர்வோட்ட அதிகரிக்கும் இந்தத் தியானத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

## யந்திரத் தியானம்

**பலன்கள்**

***1: நிலத் தத்துவ சக்தியை நமக்குள் உருவாக்கும் யந்திரத் தியானம்.***

***2: நலம் தரும் யந்திரங்களைக் கொண்டு தியானம் செய்வதால், சக்கரங்களின் மூலம் குணப்படுத்துவது எளிதாகி விடும்.***

**செயல்முறைக்கான விளக்கம் :**


***காலம் : 21 நிமிடங்கள்.***

நமது உடலிலுள்ள சக்கரங்கள் சக்தி பெறுவதற்கான நுழைவாயில்களாக இருப்பதால், இவற்றின் மூலமாக நாம் விரைவாகவும் ஆழமாகவும் சக்தி பெற்றுவிட முடியும்.

நலம் தரும் யந்திரங்களைக் கொண்டு தியானம் செய்வதால், சக்கரங்களின் மூலமாக குணமாவது எளிதாகிவிடும்.

ஒரு பிரச்சினை வரும்போது சக்கரத்தின்மீது கவனம் ஒருமுகப்படட்டும். உங்கள் கண்கள் நலம் தரும் யந்திரத்தின் மீது நிலைத்திருக்கட்டும்.

சக்கரத்திலிருந்து அந்த யந்திரத்தைப் பார்ப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். சக்கரத்திலிருந்து யந்திரத்தின் மேல் கவனம் குவியட்டும் அந்த யந்திரத்திலிருந்து உங்களைநோக்கி சக்தி பாய்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.



உங்களுக்கும் அந்த யந்திரத்திற்கும் இடையில் ஒரு சக்தி வட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

இது பாய்வதை உணருங்கள்.

இதை 11 நிமிடங்கள் செய்யவும்.

அடுத்து கண்களை மூடிக் கொண்டு அந்த யந்திரம் அதற்குரிய சக்கரத்தின் மையத்தை நோக்கிப் பிரவேசிப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அந்த மையத்தில் அந்த யந்திரத்தைப் பிடித்து நிறுத்துங்கள். அந்தச் சக்தி உங்கள் உடல் முழுவதிலும் கலந்து கரைந்துவிட அனுமதியுங்கள்.

குணப்படுத்தும் சக்தி, நலம் இழந்த உறுப்பிற்குள் பாய்வதை உணருங்க இதை 10 நிமிடங்கள் செய்யுங்கள்.

நீங்கள் விரும்பினால் மறுபடியும் ஒரு முறை செய்து பார்க்கலாம். இந்தத் தியானத்தை 21 நாட்கள் தொடர்ந்து செய்யுங்கள்.



## மீட்பர் கிறிஸ்து சபை
## Redeemer Christ Assembly, Brampton

# பெரிய வெள்ளி – உயிர்த்தெழுந்த ஞாயிறு
# Good Friday & Easter

மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.– **வெளிப்படுத்தின விசேஷம் 1: 18**

**அன்பான வாசகப் பெருமக்களே!**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை (இயேசுவை) உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். – **யோவான் 3: 16**

பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவரான இயேசு, இவ்வுலகிற்கு மானிடனாய் மனுவுரெடுத்து வந்து, சகல மனுக்குலத்தின் பாவங்களுக்காக ஒரே பலியாக கல்வாரிச் சிலுவயிலே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மரித்த இயேசு மூன்றாம் நாம் உயிர்த்தெழுந்து மனித சமுதாயத்திற்கு, இலவசானதும், இலகுவானதுமான இரட்சிப்பை பெறும் வழியை ஏற்படுத்தினார்.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.– **ரோமர் 5: 8–10**

**அன்பானவர்களே!!**

இயேசுவின் பிறப்பு, உலக சரித்திரத்தையே இரண்டாகப் பிரித்து **“கிறிஸ்துவிற்கு முன் – கிறிஸ்துவிற்குப் பின்”** என்று முழு உலகமே வருடங்களை கணக்கிடுவதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறுதலிக்கவோ, புறக்கணிக்கவோ, எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் உபயோகத்தில் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இது தேவனால் உண்டானதென்பதும், இயேசுதாமே இவ்வுலகிற்கு மனுவுருவெடுத்து வந்த தெய்வம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

**பெரியோரின் ஆசி உரைகள்**

மேலும் அநேக பெரும் மகான்களும், மதிப்புமிகு கல்விமான்களும், பெரும் தலைவர்களும் இயேசுவை தெய்வம் என்னும் கருத்துக்களை விபரித்த சில ஆதாரங்களைப் பார்ப்போம்:

### சுவாமி வீவேகானந்தர்

1. கீழை நாட்டைச் சார்ந்தவனான நான் நசரேத்து நல்கிய இயேசு நாதரை இறைஞ்சுவதாயிருந்தால், எனக்கு ஒரேவழிதான் உண்டு. அதுயாதெனில், அவரைக் கடவுளாகத் தவிர வேறு முறையில் என்னால் வழிபடமுடியா தென்பதே.”- **சுவாமி வீவேகானந்தரின் ஞானதீபம்: சுடர் 2: பக்கம் 453**
2. “மகனைப் பார்த்தவர் தந்தையைப் பார்த்தவராவர்” என்பது விவிலிய வேதவாக்கு. மகனைப் பார்காமல் தந்தையைக் காணலாம் என்பது பொருளற்ற வீண் பேச்சு, குளப்பம் மிகுந்த தெளிவிலாத் தத்துவம், பகற்கனா. ஆன்ம வாக்கையில் உங்களுக்கு ஓர பற்றுக்கோடு வேண்டுமானால், ஏசுவின் உருவிலே விளக்கமுற்று நிற்கும் கடவுளை மிகவும் நன்றாகப் பற்றிக்கொள்ளுங்கள்”.– **சுவாமி வீவேகானந்தரின் ஞானதீபம் சுடர் 7: பக்கம் 270–271**
3. “இந்தியாவுக்குக் கிறிஸ்தவ ஞானப்பணியாளர்கள் வேண்டும். நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் அவர்கள் இங்கே வந்து திரளட்டும். கிறிஸ்துவின் தூயவாழ்வின் வரலாற்றை எங்களுக்கு நன்கு எடுத்து ஓதுவீர்களாக. அவர் தந்த ஞானநன்மொழி எங்கள் சமூகத்தின் இதயத்தை ஊடுருவிப் பாயட்டும். இயேசு நாதரைப் பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை முடுக்குகளிலும் பிரசாரம் செய்யுங்கள்”.– **சுவாமி வீவேகானந்தரின் ஞானதீபம் சுடர் 1: பக்கம் 128–129**
4. **Do You Need Salvation?**
   Seek Jesus, Jesus is Superior than any of your imaginable Gods. – **Gnanadeepam: Sudar 7, Page 270**

### Dr. S. Radhakrishnan

As far as my knowledge there is only one person deserving to be called “GURU”
He is none other than “JESUS OF NAZARETH”

### Mohandass Karamchand (Mahathma Gandhi)

A sinless man, who sacrificed himself not only for others but also for the welfare of his enemies. He became the tool for the redemption of the world. He alone is JESUS.

## மீட்பர் கிறிஸ்து சபை Redeemer Christ Assembly, Brampton

### மகாகவி சுப்பிரமணீய பாரதியார்

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான் எழுந்துயிர்த்தான், நாள் ஒரு மூன்றில் நேசமா மரி மகத லேனா நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள் **- பாரதியார் கவிதைகள் 76. யேசு கிறிஸ்து**

### திரு வி. கலியாணசுந்தரனார்

உலகமே உய்யவேண்டி உருக் கொடு மண்ணில் வந்தாய் நலமிகு உவமையாலே ஞான சீலங்கள் சொற்றாய் கலகமுங் கரவுங் கொண்ட கண்ணிலாப் பேயைச் சாய்த்தாய் அலகிலா ஒழிபே! இயேசு ஐயனே! போற்றி! போற்றி! **- வி. கல்யாணசுந்தரனார்**

### பக்தர்கள் பயபக்தி

தெய்வீக பயத்தோடும், பக்தியோடும் பக்தர்கள் ஆலயங்களில் பின்வரும் விளக்கத்தை சமஸ்கிரத மொழியில் அர்ச்சித்து உண்மையோடு வழிபட்டுவருகின்றனர்:

- ஏழைக் கோலத்தில் மனிதனாய் உலகத்தில் வெளிப்பட்ட தேவனே உம்மைப் போற்றுகிறேன்
- கன்னியின் வயிற்றில் பிறந்தவரே உம்மைப் போற்றுகிறேன்
- பிதாவின் குமாரனாகியவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்
- பரிசுத்த ஆவியினால் பிறந்தவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்
- விருத்தசேதனம் செய்துகொண்டவரே உம்மை துதிக்கிறோம்
- சூலம் போன்ற மரத்தில் பலியானவரே உம்மை ஆராதிக்கிறேன்
- உடம்பில் ஐந்து காயங்களை பெற்றவரே உம்மை வாழ்த்துகிறேன்
- மரணத்தை ஜெயித்தவரே உம்மை போற்றுகிறேன்
- பிதாவின் மடியில் அமர்ந்திருப்பவரே உம்மை வாழ்த்துகிறேன்
- தம் இன்னுயிரை தியாகம் செய்த வள்ளலே உம்மை போற்றுகிறேன்
- அகில உலகையும் படைத்தவரே உம்மை வாழ்த்துகிறேன்
- பரமண்டலங்களின் தேவனே உம்மை துதிக்கிறேன்
- எங்கள் நோய்களை சுகப்படுத்தும் பரிகாரியே உமக்கு ஸ்தோத்திரம்
- எங்களின் பாவங்களைப் போக்குபவரே உமக்கு ஸ்தோதிதிரம்
- திருமண பந்தம் இல்லாமல் பிரமச்சாரியாக வாழ்ந்தவரே உமக்கு ஸ்தோத்திரம்

மேலே கொடுக்கப்பட்ட லட்சணங்களையுடயவர் இவ்வுலகிற்கு மானிடாய்ப் பிறந்து, சகல மனித சமுதாயத்திற்காகவும் கல்வாரிச் சிலுவையிலே இரத்தம் சிந்தி, பாவ நிவாரண பலியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசு என்பதை முற்றும் முழுவதுமாக விபரித்துக் காண்பிக்கிறது. எந்த மொழியில் மந்திரித்தாலும் இயேசு கிறிஸ்து ஒருவரே இந்த குணாதிசயங்களை உடையவர் என்பதை சரிவரப் புரிந்து, உணர்ந்து ஜீவிக்க உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடனும், பணிவுடனும் உங்களை அழைக்கிறோம்.

**மேலும் அன்பானவர்களே!!**

எங்கள் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக பரலோகதிதிலருந்து இறங்கி மனுஷனாக அவதரித்து தன் இரத்தம் முழுவதையும் விரயமாகக் கொடுத்து, பலியாகி மரித்து, தெய்வீக லட்சணங்களின்படி மூன்றாம்நாள் உயிரோடு எழுந்த அந்த ஒரே பரிசுத்த தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவம் நீங்கி, சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உங்கள் ஒவ்வொருவருக்காகவும் இறை ஆசி வேண்டி நிற்கிறோம். இயேசு மட்டுமே எமது பாவங்களை மன்னிக்க அதிகாரம் உள்ளவர். இயேசு நல்லவர். இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். நாம் உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம்.
கர்த்தர் (கடவுள்) உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று, அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக்கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.**- சங்கீதம் 103: 8–19**

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."**- பிலிப்பியா 4: 8**

**இயேசுவின் உயிர்தெழுந்த நன்நாள் வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.**

**பாஸ்டர் அல்பிரட் செருபிம்**

**மீட்பர் கிறிஸ்து சபை Brampton 647-271-7645**

# இவ்வார ராசிபலன்

## 15-04-2022 வெள்ளி தொடக்கம் 21-04-2022 வியாழன் வரையும்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். தொலைதூர பயணம் ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். புதிய நட்பில் கவனம் தேவை. பழையக் கடன் அமையும். பங்குச்சந்தை லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு வளரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. சுறுசுறுப்பு பெருகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். இல்லத்தில் அமைதி பெருகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். கல்வியில் மேன்மை உண்டு. நண்பர்களால் பாராட்டு கிட்டும். வார்த்தைகளில் கவனம் தேவை. மங்களச் செய்தி வரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. பழைய பகை மாறும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2

அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T




**ரிஷபம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். போட்டி, பொறாமைகள் விலகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். திருமண தீபம் சுடர்விடும். எதிலும் வெற்றி எட்டும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகள் மாறும். புதிய நட்பு ஏற்படும். வாகனமாற்றம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். எடுத்த முயற்சி வெற்றிப் பெறும். உறவுகளால் நன்மை ஏற்படும். விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,6,9,1

அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A




**மிதுனம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப்பெண்களின் எண்ணம் ஈடேறும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வழி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். பயணம் பலன் தரும். முயற்சிகள் பலிதமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். விவேகம் கைகொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,K




**கடகம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். மாற்றத்தை விரும்புவீர்கள். பணக்கட்டுப்பாடு அவசியம். வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி தரும். வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். காரியங்கள் கை கூடும். புதிய வாய்ப்புக்கள் வரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத் தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை மேலோங்கும். சேமிப்பு அதிகமாகும். பழைய பாக்கி வசூலாகும். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழைய கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ் கௌரவம் உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,5,9,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**சிம்மம்:** இல்லம் தேடி வாய்ப்பு வரும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். பங்குச்சந்தை கவனம் தேவை. தனவரவு உண்டு. கல்வியில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் தொடரும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் கூடும். ஆலய தரிசனம் அமைதியை தரும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உறவினர் பகை மாறும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். மனநிம்மதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 6,9,2,3

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,D




**கன்னி:** நல்லோர்கள் சந்திப்பு கிட்டும் வாரம். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். கடன் சுமை குறையும். பூமியால் நன்மை உண்டு. நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். ஆதாயம் பெருகும். தாய்வழி உறவு சீராகும். கல்வியால் பெருமை சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. வீண் வம்புகள் விலகும். விரோதங்கள் மறையும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். காரிய வெற்றி கிடைக்கும். செல்வாக்கு உயரும். நட்பு வட்டம் விரிவடையும். குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. விரயங்கள் கூடும். பயணங்கள் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆண்களுக்கு அதிகாரம் உயரும். கனிவான பேச்சு அவசியம். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 7,9,3,1

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**துலாம்:** குழப்பங்கள் நீங்கும் வாரம். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு பெருகும். உடல்நலத்தில் ஆதரவு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். தந்தையால் குடும்பத்தில் மேன்மை உண்டு. பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன் சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். வாகன மாற்றம் உண்டு. ஆலய தரிசனம் அமைதி தரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். முதலீடு உண்டாகும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புகள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். உபயோகமான காலம். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவார்கள். மூத்தோர்கள் மனக்குறை அகலும். காதலில் வெற்றிக் காண்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,9,8,6

அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,P




**விருச்சிகம்:** இனிப்பான செய்திகள் வரும் வாரம். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் வெற்றித்தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் விலகும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். புதுமையை விரும்புவீர்கள். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தந்திரமாக செயல்படுவீர்கள். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். நன்மைகள் பெருகும். வீண்வம்புகள் அகலும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் பலன் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகள் தாமதம் ஏற்படும். காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். பயணம் உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். பழைய பகை தீரும். பெருமிதம் நிறைந்த காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,6,5


அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**தனுசு:** சாதனை படைக்கும் வாரம். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பிள்ளைகளால் தனவரவுண்டு. வெளியூர் பயணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் ஆதிக்கம் உயரும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். சுமாரான சூழ்நிலைகள் காணப்படும். தீர்த்த யாத்திரை உண்டு. பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினரால் அலைச்சல் உண்டு. உடன்பிறப்பால் உதவி உண்டு. உடல் அசதி உண்டாகும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். அதிர்ஷ்ட வாய்ப்பு கிட்டும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**மகரம்:** பொன், பொருள் சேரும் வாரம். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வி ஆர்வம் கூடும். வருமானம் வரும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். செயல்களில் துணிவு கூடும். கமி'ன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். காரிய வெற்றி கிட்டும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெகுமதி கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். குடும்ப பொருளாதார நிலை உயரும். ஆனந்தம் பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 8,1,4,2

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,M

(தொடர்ச்சி _31__ பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(_30__ பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** காரிய வெற்றி கிட்டும் வாரம். பயணத்தால் வெகுமதி கிட்டும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. அன்னதானம் ஆரோக்கியம் தரும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெருகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நினைத்த செயலை சாதித்துக் காட்டுவீர்கள். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். திருமண முயற்சி பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**மீனம்:** வாய்ப்புக்கள் பெருகும் வாரம். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பழையக்கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்பு மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அதிகாரம் குவியும். பூமியால் நன்மை உண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,1,4,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A

# கடற்கரையில் செத்து ஒதுங்கிய கடல் டிராகன்கள்.. சர்வதேச அளவில் அதிர்ச்சி



கடற்பகுதியில் மட்டுமே காணப்படும் அரிய வகை கடல் டிராகன்கள் அதிக அளவில் செத்து கரையில் ஒதுங்கியுள்ளது சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலியா நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு கடலோர பகுதிகளில் கடல் டிராகன்கள் அதிகளவில் வசித்து வருகின்றன. நீண்ட மூக்குடன், பார்ப்பதற்கு குட்டி டைனோசார்கள் போன்று காணப்படும் இந்த கடல் டிராகன்கள் அரிய இன வகையாக கருதப்படுகிறது. பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக கடல்நீரில் வாழ்கின்றன. இதனை பாதுகாக்கவும் ஆஸ்திரேலியா அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் தற்போது கடல் டிராகன்கள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன. வலிமையான நீரோட்டங்களின்போதும் அவற்றில் சிக்காமல் இவை தாக்குப்பிடித்து தங்களது வசிப்பிடங்களிலேயே தொடர்ந்து நீடிக்கும் திறன் கொண்டவை. எனினும் புயல்களால் இவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்து உள்ளது. இந்த நிலையில், சமீப நாட்களாக இவை திடீரென அதிக அளவிலான எண்ணிக்கையில் கரையில் செத்து ஒதுங்கி வருவது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி கடல் டிராகன் நிபுணர் மற்றும் கடல்வாழ் சூழலியலின் பேராசிரியரான டேவிட் பூத் கூறும்போது, கடந்த 2 வாரங்களாக 20க்கும் அதிகமான கடல் டிராகன்கள் செத்து கரைப்பகுதியில் ஒதுங்கி வருகின்றன. இந்த எண்ணிக்கை சிட்னியில் 50க்கும் கூடுதலாக இருக்க கூடும். ஆனால், அதுபற்றிய தகவல்கள் வெளிவரவில்லை. இதற்கு அதிர்ச்சி தரக்கூடிய வகையிலான தட்பவெப்ப நிலை மாறுபாடு, கடல் மாசு ஆகியவற்றின் மொத்த பாதிப்பு காரணிகளாக உள்ளன என்று அவர் கூறியுள்ளார். தொடர்ந்து ஏற்படும் பருவநிலை மாறுபாட்டால், அரிய வகை மற்றும் அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்றாக உயிரியியலாளர்களால் வகைப்படுத்தப்பட்டு உள்ள இந்த கடல் டிராகன்களின் எண்ணிக்கை வடக்கு பகுதியில் குறைந்து வருவது அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்துவதாக கூறினார். குளிர் நிறைந்த நீர்ப்பகுதியை நோக்கி அவை பயணிக்க கூடிய சூழலும் ஏற்பட்டு உள்ளதாக தெரிவித்தார்.





கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
சிறுகதைத் தொகுப்பு
நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய
சர்வதேச சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற 16 சிறுகதைகள் அடங்கிய
'சர்வதேச தமிழ்ச் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு
ஏப்ரல் மாதம், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில்
வெளியிட இருப்பதால், இலக்கிய ஆர்வலர்களை இந்த நிகழ்வில்
கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:
ஏப்ரல் 17, 2022
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3:00-6:00 மணிவரை

இடம்:
Bhairavi Music Academy
27 Casebridge Ct. Unit- 5
Scarborough, ON
M1B 4Y4







தலைவர்: குரு அரவிந்தன்
செயலாளர்: ஆர்.என். லோகேந்திரலிங்கம்

தொடர்புகளுக்கு: (647) 274-2618
அல்லது (416) 732-1608



மொன்றியால்
வீணைமைந்தன்
எழுதுகின்றார்




அத்தியாயம் - 17

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் - அது முடிந்த பின்னாலும் என் பெயர் இருக்கும்" என கவிஞர் வாலி ஐயா அவர்கள் மக்கள் திலகம் எம்ஜிஆர் - க்காக தெய்வத்தாய் படத்தில் ஒரு பாடல் எழுதியிருப்பார். இன்றும் மக்கள் திலகம் பேசப்பட்டு வருகிறார் நினைக்கப்படுகிறார். ஏழைகள் நெஞ்சில் வணங்கப்படுகிறார்.

அதே போன்று "பாரதி" என்ற மூன்று எழுத்துக்குரிய ஒரே "மகாகவி" என்றென்றும் நினைக்கப் படுவார் வணங்கப் படுவார், என்பதில் ஐயமில்லை. தமிழ் தாய் தத்தெடுத்த மகா சொத்து. அவரே தாய்மொழிக்கு முத்து!

மகாகவி பாரதி ஐயாவின் 100வது நினைவு ஆண்டில் நானும் அவர் நினைவாக ஏதாவது எழுதவேண்டும் என்ற தமிழ் ஆர்வத்தில் இத்தொடரை எழுதி அவர் திருப்பாத கமலங்களில் காணிக்கையாக்கி உள்ளேன் என்பதில் ஒரு திருப்தி. மேலும் தமிழ் சினிமாவில் பாரதியாரின் பாடல்களும், கவிதைகளும் இடம் பெற்ற சில படங்களை நினைவு கொண்டு பதிவு செய்துள்ளேன். அவ்வப்போது சில படங்களில் இடம்பெற்ற பாடல்கள் "மகாகவி" எழுதிய பாடல் வரிகளும் சேர்த்து எழுதப்பட்டுள்ளதையும் காண்கிறேன். உதாரணமாக இயக்குனர் ஸ்ரீதரின் "இளமை ஊஞ்சலாடுகிறது" படத்தில் கமலஹாசன் அவர்கள் ஒரு பாடகராக மேடையில் தோன்றி தனது முன்னாள் காதலி ஸ்ரீபிரியாவை பார்த்து பாடுவார். அவர் பாடும் பாடலில் பாரதி ஐயாவின் "கண்ணம்மா என் காதலி" இல் எழுதிய வரிகள் சில இடம்பெறும்.

"...வார்த்தை தவறிவிட்டாய் - அடி கண்ணம்மா மார்பு துடிக்குதடி...!
பார்த்த இடத்திலெல்லாம் - உன்னைப் போலவே
பா வை தெரியுதடி..." தொடர்ந்து கமல் அவர்கள் "என்னடி மீனாட்சி சொன்னது என்னாச்சு... என ஸ்ரீபிரியாவுக்குக் கேள்விக்கணை தொடுப்பார்.!



இயக்குனர் "மணிரத்னம்" தன்னுடைய இரு படங்களுக்கு பாரதி ஐயாவின் கவிதை வரிகளில் இடம்பெற்ற சொற்றொடர்களையே படத்தின் தலைப்பாக வைத்திருந்தார். அவருடைய படங்களான கன்னத்தில் முத்தமிட்டால்", "காற்றுவெளியிடை" ஆகியவை உதாரணமாகிறது.

வேறு சில படைப்புகளையும் பார்ப்போம்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" (1959)
"கண்ணம்மா என் காதலி" 1945
பாரதிராஜாவின் "புதுமைப்பெண்" (இத்தலைப்பில் இருதடவை)
"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" 1960
"கண்ணன் என் காதலன்" 1968
"தீராத விளையாட்டுப் பிள்ளை"
"எங்கிருந்தோ வந்தான்"
"ஓடி விளையாடு பாப்பா" 1959.
"வெந்து தணிந்தது காடு
"சூரரைப் போற்று
"இவ்வாறு பல படங்களின் தலைப்பு பாரதி ஐயாவின் பாடல் வரிகளையே நினைவூட்டுகிறது.

ஏபி நாகராஜன் "நவராத்திரி" படத்தில் ஓரிடத்தில் சாவித்திரியின் மனநி-லையை பிரதிபலிப்பது போல், (பின்னணியில்) "பெண்ணொன்று பூமி தனில் பிறந்துவிட்டால்..." என பாரதியின் பாடல் வரி சேர்க்கப்பட்டிருக்கும். இதேபோல்

"பாயுமொளி நீ யெனக்கு
பார்க்கும் விழி நானுனக்கு
"வீணையடி நீ எனக்கு

மேவும் விரல் நானுனக்கு எனும் வரிகளையும் (பெயர் மறந்த திரைப்படத்தில்) கேட்டிருக்கிறேன். "நின்னைச் சரணடைந்தேன்" எனவும் ஒரு பட தலைப்பு இருப்பதாக கூறுகிறார்கள்.

கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி" நூலின் தலைப்பும் பாரதியுடையதேயாகும்!

"மக்கள் திலகம்" - சரோஜாதேவி இருவரும் நடித்த "பெற்றால் தான் பிள்ளையா" படத்தில் இடம்பெற்ற "கண்ணன் பிறந்தான்.. எங்கள் கண்ணன் பிறந்தான்.." என்று ஆரம்பிக்கும் பாடலின் இரு வரிகளிலும். அதேபோல் மக்கள் திலகம் நடித்த "சக்கரவர்த்தி திருமகள்" படத்திலும் இடம்பெற்ற "காதல் என்னும் சோலையிலே ராதே ராதே என்பது மகாகவி எழுதிய வரிகள் ஆகும்!.

இன்னும் துருவித் துருவி ஆராய்ந்தால்... பாரதியின் பல சொற்றொடர்களும்... கவிதை வரிகளும்.. செலுலோயிட் படக் காட்சிகளில் இணைக்கப்பட்டு இருப்பதைக் கண்டறியலாம். வாசகர்களே நீங்களும் கொஞ்சம் முயற்சி செய்து பாருங்கள்.

நிறைவாக பாரதியை ஐயாவின் தமிழ் வீச்சை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழ் எழுதும் நண்பர் ஒருவரின் வாழ்க்கை பயணத்தில் ஏற்பட்ட, மறைவுக்குப்பின் பாரதி-யை சந்தித்த மெய்சிலிர்க்கும் அனுபவத்துடன் இத்தொடர் கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

இப்போது அந்த பாரதி மைந்தனே உங்களுடன் பேசுகிறார். இதோ அவரின் வாக்குமூலம்...

"...ஏறக்குறைய 10 தடவைகளுக்கு மேலாக பாரதம் சென்று வந்திருப்பேன். ஒரு தடவையாவது மகாகவி பாரதி பிறந்த மண்ணான எட்டயபுரத்தையோ, புலம்பெயர்ந்து வாழ்ந்த புதுச்சேரியையோ மிதிக்கும் பாக்கியம் எனக்கு கிட்டவில்லை.

1996ஆம் ஆண்டு ஒரு முக்கிய அலுவல் காரணமாக சென்னை செல்ல வேண்டி வந்தது. இடையில் இரு நாட்கள் அரசு விடுமுறை நாட்களாகின. என்ன செய்யலாம்? எங்கு போகலாம்? என சிந்தித்தேன். மனதில் ஒரு பொறி தட்டியது "மகாகவி" வாழ்ந்த புதுச்சேரிக்கு போவதென்று முடிவு செய்தேன். புதிய இடம், புதிய சூழல் வாடகை வண்டி ஒன்றை அமர்த்திக்கொண்டு "குயில்பாட்டு" எழுதப்பட்ட அந்த சோலைநகருக்கு பயணமானேன்.


பயணம் முழுவதும் என் கவித் தந்தை பாரதி வாழ்ந்த இடத்தை எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்ற மனோவேகத்துடன் பயணம் தொடர்ந்தது. புதுச்சேரியை அடைந்ததும் மகாகவி பாரதி வாழ்ந்த இடத்திற்கு போகும்படி சாரதிக்கு ஆணையிட்டேன். அவருக்கு பாரதியை தெரியவில்லை? வழியில் போன ஒருவரிடம் விவரம் கேட்டேன். சரியாக நினைவாலயம் முகவரி தந்தார்.

மிகவும் பழமையான ஓட்டு வீடு. முதியவர் ஒருவர் வீட்டுக் கதவைத் திறந்தார். "இது மகாகவி பாரதியார் வாழ்ந்த வீடா?" என்றேன். ஆமாங்க!

"உள்ளே வரலாமா"?
"தாராளமா வாங்க"

இரு கதவுகளையும் திறந்து கொண்டே அழைத்தார்.

உள்ளே முதல் அடி வைத்ததும் உடம்பெல்லாம் சிலிர்த்து விட்டது.எனது கவிதந்தை வாழ்ந்த இல்லம், அவர் திருப்பாதங்கள் பதிந்த இடம் என்னுள் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. சுவரெல்லாம் மகாகவியின் வெவ்வேறு தோற்றங்களை கொண்ட புகைப்படங்கள் மாட்டப்பட்டு இருந்தன. "இந்தியா" பத்திரிகையின் பல்வேறு பிரதிகள். முண்டாசுக் கவிஞன் முறுக்கிய மீசையுடன் அன்னை செல்லம்மாளுடன் சேர்ந்திருந்த அழகான படம். விழுந்து வணங்கினேன். ஒதுக்குப்புறமாக ஒரு சாய்வு நாற்காலியை கண்டேன். அக்கதிரை பற்றி பெரியவரிடம் கேட்டேன். "ஆமாங்க! கவிஞர் ஐயா உட்கார்ந்து இளைப்பாறும் நாற்காலி" பெரியவர் "ஒரு நிமிடம்" என்று சொல்லி விட்டு உள்ளே சென்றார்.



இதுதான் தருணம் என்று கவித்தந்தை சாய்ந்திருந்த அந்த சாய்வு நாற்காலியில் சற்றே சாய்ந்தேன். அக்கணம் என் உடல் முழுவதும் மின்சாரம் பாய்ந்த உணர்வு. பிரம்மிப்பு அடைந்தேன். என் கவிதை தந்தை என் உடலை தீண்டியது போன்ற உணர்வு. உடலிலும் உயிரிலும் ஊடுருவியது போல் ஒரு நினைவு. விழிகளை மூடினேன். அந்த மகா புருஷனின் சக்தி என் நாடி நரம்புகள் அத்தனையும் தீண்டி நேராக என் நெற்றியின் மத்தியில் புடைத்து வினோதமான உணர்வு. அவருடைய வீரமும், துணிவும், கோபமும் என்னுள் புகுந்து போலும் வியப்பில் ஆழ்ந்தேன்.

எனது கவித்தெய்வம் என்னை ஆட்கொண்டு விட்டது என ஆனந்தம் கொண்டேன். என் விழிகள் பனித்தன. மூச்சு சூடானது.!

பெரியவர் வரும் காலடி ஓசை கேட்டதும். சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தேன். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு. எழுதிய என்னுயிர் கவித்தந்தை. தமிழ்த் தாயின் தவப் புதல்வன் என்னுள் புதிய சக்திஒன்றைப் பாய்ச்சியது போன்று மெற்சிலிர்த்தேன்.

பெரியவர் என்னைப் பார்த்து. "" ஏன் சார் அழுகின்றீர்கள்? என்றார்.

"என் தந்தையை நினைத்தேன். அழுதேன் என்றேன்.""

சில நிமிடங்கள் மௌனித்து மோன நிலையில் ஆழ்ந்தேன். என் கவித்தந்தையின் உடல் தான் மறைந்தது. அவர் மகத்துவம் என்றும் மறையாதது. நினைவாலயத்தை விட்டு துணிவுள்ள தமிழனாக என் தந்தையின் மிடுக்குடன் வெளியே வந்தேன். எ ன து இலக்கியத் தோழர் கவிஞர் செகப்பிரியன் ஸ்ரீகாந்தின் அனுபவம் இன்றும் என்னுள் செறிந்துள்ளது.

"வாழ்வு பெருக்கும் மதியே சக்தி! மாநிலம் காக்கும் மதியே சக்தி!
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி! சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி!
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி! விண்ணை அளக்கும் விரிவே சக்தி!
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி! உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி!

**பாரதியின்இந்த அற்புதமான கவிதை வரிகளோடு இந்தத் தொடர் நிறைவடைகின்றது - வீணைமைந்தன்**

**தமிழர் வரலாற்றில் முதற் தடவையாக உலகின் தமிழ் பேசும் வர்த்தக வெற்றியாளர்களையும் துறை சார் நிபுணர்களையும் இணைக்கும் 3 நாள் மாநாடு மே மாதம் 5ம் 6ம் 7ம் திகதிகளில் இலண்டன் மாநகரில் நடைபெறுகின்றது.**

உலகத் தமிழ் வெற்றியாளர் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்காய் எடுக்கப்பெற்றுள்ள முயற்சி. இதை வெற்றியடைச் செய்ய அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும் என அழைப்பு விடுகின்றார்கள் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினர்.
தமிழர் வரலாற்றில் முதற் தடவையாக உலகின் தமிழ் பேசும் வர்த்தக வெற்றியாளர்களையும் துறை சார் நிபுணர்களையும் இணைக்கும் 3 நாள் மாநாடு-
மே மாதம் 5ம் 6ம் 7ம் திகதிகளில் இலண்டன் மாநகரில் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களை அறிய பின்வரும் இணைய இணைப்பிற்குச் செல்லவும்.
https://www.tamilrise.org/










*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 51)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இவற்றையெல்லாம் மண்டபத்தில் மறைவில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த பெரியபழுவேட்டரையருக்கு நெஞ்சு வெடித்துப் பிளந்தது. தலை சுழன்றது ஆறு தலைமுறையாக சோழ குலத்திற்கும், பழுவூர்க் குலத்திற்கும் நிலை பெற்று வளர்ந்த உறவு எப்படி சின்னா பின்னமானது? நம்முடைய பொக்கிஷ த்தைத் திருடி எம் குலத்திற்கு விரோதம் செய்ய நினைக்கும் இவர்களை உடனே கொன்றே ஆக வேண்டும்! என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. ஆனால் என் நீண்ட கரங்களின் சக்தியே போதும் என்று தன்னை வெளிப்படுத்திக் கொண்டு அவர்கள் மீது பாய்ந்து அவர்களை ஓடவிடாது பிடித்துக் கொண்டார். ஆனால் அவர்கள் தப்பித்து விட்டனர். போகும் போது மண்டபத்தின் முகப்பில் மேல் அவரைத் தள்ளி விட்டார்கள் அவர் நினைவிழந்தார். சிறிது நேரம் கழித்து பழுவேட்டரையர் மெதுவாக கண் திறந்ததும் அவர் கண்கள் கூசும் படியாக ஒரு பிரகாசமான வெளிச்சம் வான் வெளியில் தோன்றியது. அவர் தன் கண்களை மூடித்திறந்தார். ஒளி குறைந்து சென்று பின்னர் மறைந்து இருள் சூழ்ந்து கொண்டது. இது அதிசயம் என்ன நடந்திருக்கக் கூடும் என்றபடி வானத்தை பார்த்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தார். வானத்தில் தோன்றிய தூம கேது எங்கே அது தானா பூமி நோக்கி வந்து மறைந்தது உலகில் ஏதோ ஆபத்து வரப் போகிறதா? ராஜ்ஜிய குடும்பத்தில் யாருக்காவது விபத்து நேரப் போகி-றதா? வால் நட்சத்திரம் மறையும் போது அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் யா-ரேனும் மரணம் அடைவர் என்று மக்கள் நம்புகின்றனர். உண்மையில் மூன்று விபத்துக்கள் நடக்கப் போகின்றதா? நான் எழுந்திருக்க முடியாது இந்தக் காட்டின் நடுவே தரையில் படுத்திருக்கிறேன். இந்த விபத்தை தடுத்தே ஆக வேண்டும் என் முதல் கடமை முக்கிய கடமை ஆதித்தகரிகாலனைக் காப்பாற்ற வேண்டும். என் தலையில் நேராகப் பழி விழாது காப்பாற்ற வேண்டும். என்றபடி மெல்ல எழுந்தார் கொள்ளிடத்தை கடந்து கடம்பூர் போக வேண்டும் போ-குமுன் குடந்தை சென்று தஞ்சைக்கும், நாகைக்கும் எச்சரிக்கை அனுப்பி விட வேண்டும். எது விதியோ அப்படியே நடக்கட்டும் என் முயற்சியை நான் முடிந்தளவு செய்வேன். என்ற உறுதியோடு குடந்தை நகரை நோக்கி நடந்தார். அப்பொழுது அவருக்கு சோதிடரின் ஞாபகம் வந்தது அவர் முதல் மந்திரி அநிருத்தருக்கு வேண்டியவர் இவரின் உதவியில் தஞ்சைக்கும், நாகை பட்டினத்திற்கும் ஓலை கொடுத்துவிட்டு போகலாம். என்றபடி சோதிடர் வீட்டை அடைந்தார். சோதிடர் வீட்டில் நின்ற காவலன் பழுவேட்டரையரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அதனால் அவரைத் தடுத்தான் பழுவேட்டரையரோ அவன் கழுத்தை பிடித்து தள்ளி விட்டு உள்ளே வந்தார். அப்பொழுது அவர் காதுகளில் பெண்களின் குரல் கேட்டது. அதுவும் குந்தவையின் குரல் கேட்டு தன் காரியம் வெகு இலகுவாகிவிட்டதே! அவளிடம் இந்த செய்தியை சொல்லிவிட்டால் என் பொறுப்பும் குறைந்து விடும். என்று எண்ணியபடி உள் நுழைந்தார். பழுவேட்டரையர் நுழைவதைக் கண்ட குந்தவை, வானதியை கையை பிடித்து இழுத்துக் கொண்டு அவசர அவசரமாக அடுத்த அறைக்குள் போனாள். தஞ்சை அரண்மனையில் ஈழத்து ராணி மந்தாகினியும், பூங்குழலியும் காணாமல் போனதில் இருந்து பெரும் கலக்கம் கொண்டிருந்தாள் குந்தவை. உடனே அநிருத்தரிடம் சென்றாள். அங்கே அருள்மொழியைப் பற்றிய செய்தியை தெரிந்து கொண்டாள். நாகைபட்டினத்தில் அடித்த புயலினால் அவர் வெளிப்பட்டு விட்டார் அவரை பெரு நகர மக்கள் வெற்றி முழங்க தஞ்சை அழைத்து வருகிறார்களாம். இதைக் கேட்டு குந்தவை அருள்மொழிக்கு தஞ்சையில் நடந்தவையாவும் சொல்ல வேண்டும், தஞ்சை வர நேர்ந்தால் பழுவேட்டரையர்கள் படைவீரர்கள் அவனைத் தடுத்து நிறுத்துவார்கள். பூதிவிக்கிரமகேசரி தென் பிரதேசத்துப் படைகளுடன் கொடும்பனார் வரை வந்து விட்டனர். இரு படைகளும் தஞ்சையருகில் சண்டை பிடித்தால் என் தந்தையின் உள்ளம் புண்படும். அவருக்கு உயிர் ஆபத்து வர நேரும் மக்களும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுக் கலகம் மூண்டு சோழ நாடு அழிய வேண்டி ஏற்படும். இதைத் தடுக்க அருள்மொழிவர்மனை பழையாறு அழைத்துச் செல்ல வேண்டும். பின்னர் பெரியபழுவேட்டரையரை அழைத்து இளவரசருக்கு நாடாளும் ஆசை இல்லை என்பதை தெரிவித்து அவரை தந்தையிடம் அழைத்துப் போக வேண்டும் என்று பரபரப்புடன் தாயாரிடம் மட்டும் சொல்லிவிட்டு பழையாறை புறப்பட்டாள். பழையாறை போகும் வழியில் சோதிடம் கேட்டுக் கொள்ள அங்கு வந்தாள்.

அப்பொழுதுதான் பழுவேட்டரையரும் அங்கு வந்தார் சோதிடரே நான் யார் தெரியுமா என்று பெரியபழுவேட்டரையர் கேட்டார் ‘உம்மால் எனக்கு ஒரு முக்கிய காரியம் ஆக வேண்டும் முக்கியமான உதவி நீ செய்ய வேண்டும் முதலில் என் பசிக்கு உணவு தாரும்’ என்றார். அதற்கு சோதிடர் ‘ஐயா எளியவனான என் வீட்டிற்கு தாங்கள் வந்தது என் முன்னோர்கள் செய்த பாய்க்கியம் தாங்கள் கோரும் உதவியை சொல்லுங்கள்’ என்றார். ‘சோத-’டரே சக்கரவர்த்திக்கும் அவருடைய குமாரர்கள் இருவருக்கும் இன்றைக்கு பெரிய கண்டம் காத்திருக்கிறது யமதர்மன் அவர்களை நெருங்கி வந்து கொண்டிருக்கிறான் சக்கரவர்த்தியின் யமன் பழுவூர் மாளிகையில் பொக்கிஷ நிலவறையில் அமர்ந்திருக்கிறான். அருள்மொழியின் யமன் யானைப் பாகனின் அங்குசத்தில் ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தடுத்து நிறுத்தி, சக்கரவர்த்தியையும் அருள்மொழியையும் காப்பாற்ற வேண்டியது உமது பொறுப்பு. இதோ என் முத்திரை மோதிரம் எடுத்துக் கொண்டு உன் சீடன் தஞ்சைக்குப் போகட்டும் நீ திருவாரூர் சென்று இளவரசை எச்சரிக்க வேண்டும் செய்வீரா? என்று ஆத்திரத்துடனும், பரபரப்புடனும் கூறினார். தங்கள் கட்டளை எதுவோ அப்படியே செய்கிறேன்’ என்றார் சோதிடர். அப்பொழுது பாதச் சலங்கை ஒலி கேட்டது. ‘சோதிடரே நான் அவசரமாக புறப்பட வேண்டும் அந்த ஆலயத்திற்கு அருகில் ரதம் ஒன்று நிற்கிறதே அதை நான் எடுத்துச் செல்லப் போகிறேன் கொள்ளிடக் கரையில் சென்றதும் அதை திருப்பி அனுப்பி விடுகிறேன்’ என்றார் பழுவேட்டரையர். அப்பொழுது குந்தவை அடுத்த அறையில் நின்று அங்கு வந்தாள் பெரியபழுவேட்டரையர் வியப்படையவில்லை. அவர் ஊகம் சரியாக இருந்தது தான் சொல்ல வந்த செய்தியை குந்தவை காதில் போட்டுவிட்டேன். சாமர்த்தியமான பெண் என்று மன அமைதி கொண்டார். ‘ஐயா மன்னிக்க வேண்டும் தாங்கள் வீட்டின் உள் வந்த போது தாங்கள் யார் என்று கண்டு கொள்ள முடியவில்லை தங்கள் பேச்சை எல்லாம் கேட்க நேர்ந்தது’ என்றாள் குந்தவை. ‘தாயே நீயும் என் சகோதரன் காலாந்த கண்டனும் நடக்கும் சதி-களை பற்றி நான் தெரிந்து கொள்ள எத்தனை பிரயத்தனம் செய்த ீர்கள் நான் எதையும் கண்டு கொள்ளவில்லை நேற்று பாண்டிய நாட்டு சதிகாரர்கள் இருவ-ரின் சம்பாசனையை ஒட்டுக் கேட்டேன். அதன் பலனாக உண்மையை அறிந்து கொண்டேன் இந்த பாதகி நந்தினியை நான் என் கையாலே கொன்று ஒழிக்க வேண்டும்’ என்றார் பழுவேட்டரையர். அப்பொழுது குந்தவை அவர் கால்களில் விழுந்து வணங்கி எழுந்து ‘ஐயா எனக்கு ஒரு வரம் வேண்டும்’ என்றாள். பழுவேட்டரையரோ ‘இது என்ன ஏன் என்னை சோதிக்கிறாய் அம்மா என் பாவச் செயலிற்கு பரிகாரம் தேட வேண்டும் உனது வரம் என்ன’ என்றார். அதற்கு குந்தவை ‘இளையராணி நந்தினியை தாங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம் அது தான் கோரும் வரம் நந்தினி என் சகோதரி அவளுக்கு தீங்கு செய்தால் அது சோழ குல்ததிற்கு செய்த துரோகமாகும் அருள்மொழிவர்மனை காவேரியில் இருந்து காப்பாற்றிய மந்தாகினியை நினைவுள்ளதா? அவர் இளையராணி நந்தினியின் தாயார் இளையராணியை மணம் செய்து தாங்கள் அவரை அரண்மனைக்கு அழைத்து வந்த போது என் தந்தை நினைவிழந்தார் காரணம் இளையராணியின் அன்னை இறந்துவிட்டதாக என் தந்தை நினைத்திருந்தார். நந்தினியைக் கண்டதும் அவர் நினைவிழந்தார்’ என்றாள். வி-தியின் விளையாட்டு விசித்திரமாக இருக்கிறதே இந்த உறவு சத்தரவர்திக்குத் தெரியுமா? கரிகாலனுக்குத் தெரியுமா என்று கேட்டார்.




‘ஆமாம் ஐயா இரு நாட்களுக்கு முன்பு என் தந்தை அந்த மூதாட்டியை நேரில் பார்த்து தெரிந்து கொண்டார் கரிகாலனுக்கு வந்தியத்தேவன் சொல்லியிருப்பான்’ என்றாள். ‘தாயே எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும் நீ உன் தந்தையையும் தம்பியையும் காப்பாற்றுவது உன் பொறுப்பு நான் புறப்படுகிறேன் உன் சகோதரி நந்தினியியைப் பாதுகாக்கும் கடமையும் உண்டு என்று நினைவுபடுத்திக் கொள்கிறேன்’ என்றார் பழுவேட்டரையர். அவ்வேளை ஆழ்வார்க்கடியான் சோதிடரைப் பார்க்க அங்கு வந்தார் அங்கு குந்தவையும் வானதியும் நிற்பதைக் கண்டு ‘தாயே மன்னிக்கவும் தாங்கள் இங்கு இருப்பதை நான் அறியேன் எப்பொழுது தஞ்சையில் இருந்து புறப்பட்டீர்கள் கொடும்பனார் படைகள் தஞ்சையை சூழ்ந்து கொண்டனவா நேற்று இரவு முதல் மந்திரி சக்கரவர்த்தியை பார்த்து விட்டு வந்த போது அவருக்கு இரு செய்திகள் கிடைத்தன. ஒன்று நாகைபட்டினத்தில் இருந்து இளவரசர் புறப்பட்டு தஞ்சை வருகிறாராம் மற்றையது சேனாதிபதி விக்கிரம கேசரியிடமிருந்து ஒரு ஓலை வந்தது சக்கரவர்த்தியை தஞ்சைக் கோட்டையிலும், சின்ன இளவரசரை ஏதோ ஒரு இரகசிய இடத்திலும் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக குற்றம் சாட்டி பழுவேட்டரையர்களை தனாதிகாரி பொறுப்பபையும் தஞ்சை காவல் பொறுப்பையும் உடனே நீக்கி விட வேண்டும் என்றும், இளவரசரைக் கொண்டு வந்து ஒப்புவிக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தது இல்லாவிட்டால் இன்று மாலைக்குள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை ஆரம்பமாகிவிடும். இந்த செய்தி வந்தது முதல் மந்திரி என்னை நாகபட்டினம் போகும்படி சொன்னார் இளவரசரை செம்பியன் மாதேவியிடம் ஒரு ஓலை கொடுக்ககுமாறும் கூறினார். மேலும் சேனாதிபதி கொடும்பானார் விக்கிரம கேசரி இளவரசர் அருள்மொழிவர்மரிற்கும், கொடும்பனார் இளவரசி வானதி தேவிக்கும் உடனே திருமணம் நடந்தாக வேண்டும். ஆதித்தகரிகாலர் தமக்கு இராஜ்ஜியம் வேண்டாம் என்று சொல்வதால் அருள்மொழிக்கே அடுத்த பட்டம் உரிமையாக வேண்டும் உடனே யுவராஜ பட்டாபிசேகம் செய்ய வேண்டும். இதற்கு சம்மதிக்காவிட்டால் தஞ்சைக் கோட்டையை மூன்று நாட்களுக்குள் தரை மட்டமாக்கி விடுவேன் என்று சொல்லச் சொல்லி அனுப்பியிருக்கிறார்’ என்றார்.

இதைக் கேட்ட வானதி, ‘என்ன என் பெரியப்பாவிற்கு பைத்தியம் பிடித்துவிட்டதா?’ என்று ஆத்திரம் கொண்டு கேட்டாள் அப்பொழுது குந்தவை ‘வானதி இது உண்மை தானே பழுவேட்டரையர்கள் மதுராந்தகருக்கு பட்டம் கட்ட வேண்டும்’ என்று முயற்சிக்கிறார்கள் ஆனால் கொடும்பானார் மன்னரும், திருக்கோவலூார் மலையமானும் அருள்மொழிக்கு பட்டம் கட்ட வேண்டும், திருமணம் செய்ய வேண்டும் என்பதை வெளிப்படையாக சொல்லியிருக்கிறார்கள். திருக்கோவலூார் மலையமான் ஒரு பெரிய சைன்யத்துடன் கடம்பூர் கோட்டைக்குச் செல்கிறார். ‘நான் எப்படி உள்நாட்டு சண்டை வராமல் தடுப்பது இங்கு யுத்தம் மூண்டால் அது சகோதர சண்டையாக இருக்கும் உற்றார் உறவினர்க்குள்ளே நி-கழும் சர்வ நாச யுத்தமாக இருக்கம் இந்த விதியை என்னவென்று சொல்வது. இவர்களுடைய சண்டையினால் இந்த சோழ ராஜ்ஜியமே அழிந்து விடும் போலிருக்கிறதே’ என்றாள் குந்தவை. அப்பொழுது வானதி ‘அக்கா இது என்ன விவகாரம் என்னை சோழ சிங்காசனத்தில் ஏற்றுவதற்காக என் பெரிய தந்தை சண்டையை ஆரம்பித்திருக்கிறார் போலத் தெரிகிறது நான் தஞைசை சென்று அதை தடுத்து நிறுத்துவேன்’ என்றாள். அப்பொழுது கொடும்பனார் இளவரசி சிம்மாசனம் ஏறுவதை வெறுக்கிறாளா? என்றபடி பூங்குழலி அங்கு வந்தாள். அதைக் கண்டு குந்தவையின் கண்கள் விரிந்தன. வியப்புடன் ‘பெண்ணே நீ எப்படி இங்கே வந்தாய் உன்னையும், ஈழத்து ராணியையும் காணாமல் நாம் எல்லோரும் தேடி அலைந்தோம்’ என்றாள். அதற்கு பூங்குழலி ‘மன்னிக்க வேண்டும் தேவி என் அத்தை என்னை பலவந்தமாக பழுவூர் அரண்மனையின் சுரங்கப் பாதை வழியா இழுத்துக் கொண்டு வந்து வெளியே அனுப்பினாள். ஏனென்றால் பொன்னியின் செல்வருக்கு ஏதோ ஆபத்து வரப் போகிறது என்று அவள் தன் அதிசய சக்தியயால் அறிந்து கொண்டாள். அதனால் அவரைக் காப்பாற்றுமாறு என்னை அனுப்பினார். அந்த சுரங்கப் பாதையில் ஒருவன் ஒழிந்திருக்கிறான் அவன் அரண்மனையில் யாரையோ கொல்லப் போகிறானாம் அவனைத் தான் பார்த்துக் கொள்கிறேன் நான் அரண்மனைக் காரியங்களில் தலையிடுவதில்லை என்று கோடிக்கரைக்கு போய்க் கொண்டிருந்தேன் இந்த திருமலைதான் என்னை இங்கு அழைத்து வந்தார்’ என்றாள். குந்தவை பூங்குழலியிடம் ‘ஏன் உனக்கு எங்களைப் பிடிக்கவில்லை என்று கேட்க ஏன் அவளுக்க சிங்காசனம் பிடிக்கவில்லை என்று கேளுங்கள் பின்னர் என்னிடம் கேளுங்கள்’ என்றாள் பூங்குழலி. ‘அக்கா இவள் என்னைச் சொல்கிறாள் நான் சொல்லுகிறேன் கேளுங்கள் தாங்கள் திருப்பாதங்கள் மீது ஆணையாகச் கொல்கிறேன் நான் பூமாதேவி சாட்சியாக சபதம் செய்கிறேன் பொன்னியின் செல்வர் இந்தக் கண்டத்தில் பிழைத்தார் ஆயின், அவர் மனமுவந்து என்னைக் கரம் பிடித்து மணந்து கொண்டாரானால், அந்த பெரும் பேறு கிடைத்தால் தஞ்சை அரண்மனைச் சிம்மாசனத்தில் நான் ஒரு நாளும் உட்காரமாட்டேன் இது சத்தியம்! சத்தியம்!’ என்றாள். இதைக் கேட்ட குந்தவை கோபமும் பரிதாபமும் கொண்டு ‘வானதி இது என்ன சபதம் ஒரு முட்டாள் தன-மான சபதம் ஏன் இப்படிச் செய்தாய்’ என்றாள். அதற்கு வானதி ‘அக்கா என் அறிவு தெளிவாக உள்ளது என் மனதிற்குள் உள்ளதை இப்பொழுது வெளிப்படுத்தினேன்’ என்றாள். ‘திருமலை நீ இளவரசரரைப் பார்க்கப் போனாய் அல்லவா? ஏன் பூங்குழலியை இங்கு அழைத்து வந்தாய்’ என்றாள் குந்தவை. அதற்கு திருமலை ‘நான் பொன்னியின் செல்வரை சந்திக்க போனபோது வழியெல்லாம் ஒரே வெள்ளம் போக முடியவில்லை என்னைப் போல் இவளும் தடைப்பட்டு நின்றதைக் கண்டேன். படகு சம்பாதித்து இருவரும் திருவாரூர் போக த ீர்மானித்தோம். அப்பொழுது கோயிலுக்குப் பக்கத்தில் ரதப் படகைப் பார்த்தேன். தங்களிடம் அதை வாங்கிக் கொள்ள நினைத்தேன் அதற்கிடையில் பழுவேட்டரையர் அதைக் கொண்டு சென்றுவிட்டார். அதனால் சோதிடரின் சீடனை படகு கொண்டுவருமாறு அனுப்பினேன். அதற்காக காத்திருக்கிறேன் பழுவேட்டரையர் கூறியது எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். சக்ரவர்த்திக்கு உண்மையில் பெரிய ஆபத்து நெருங்குகிறது அது முதல் மந்திரிக்கு கூடத் தெரியாது’ என்றார். அதற்கு குந்தவை, ‘நீ உடனே தஞ்சைக்கு செல் வா-னதியையும் உடன் அழைத்துச் செல் கொடும்பனார் படைகள் தஞ்சையை முற்றுகையிட்டிருந்தால், அவர்களைத் தாண்டிச் செல்ல இவள் உதவுவாள் நான் பொன்னியின் செல்வரைப் பார்த்துக் கொள்கிறேன்’ என்றார்.

*தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

# "இனிமேல் நான் சினிமாவில் நடிக்கமாட்டேன்" நடிகை ரோஜா அறிவிப்பு

ஆந்திர மாநிலத்தில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையில் ஒய்.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது. அப்போது, இரண்டரை ஆண்டுகளில் அமைச்சரவை மாற்றம் செய்யப்படும் என்று ஆந்திரா முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, அண்மையில் அமைச்சர்கள் சிலர் ராஜினாமா செய்தனர்.

இந்நிலையில், ஆந்திராவில் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையில் நடிகை ரோஜா உட்பட 25 அமைச்சர்கள் பதவியேற்றனர். மாநில தலைநகர் அமராவதியில் உள்ள மாநில செயலகம் அருகே நடைபெற்ற பொது நிகழ்ச்சியில், கவர்னர் பிஸ்வ பூசன் ஹரிசந்தன், 25 அமைச்சரவை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

நேற்று புதிய மந்திரி சபை பதவியேற்று கொண்ட நிலையில், பிரபல நடிகையும், நகரி தொகுதி எம்.எல்.ஏ.வுமான ரோஜாவுக்கு, சுற்றுலாத்துறை மற்றும் இளைஞர் மற்றும் கலை விளையாட்டு மேம்பாட்டுத்துறை ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில், நடிகை ரோஜா செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில், ஜெகன்மோகன் ரெட்டி எனக்கு கொடுத்த இந்த வாய்ப்பை வாழ்நாளில் என்றும் மறக்க மாட்டேன். மந்திரி ஆகி விட்டதால் இனி சினிமாவிலும், டெலிவிஷனிலும் நடிக்க மாட்டேன் என தெரிவித்துள்ளார்.



# "பீஸ்டு" படம் தோல்வியால் அதன் இயக்குநர் நெல்சன் ரஜினியின் படத்தை இயக்குவார் என்பது சந்தேகமே!



சின்னத்திரையில் ரியாலிட்டி ஷோக்களை இயக்குவதன் மூலம் சினிமாவிற்கு அறிமுகமான இயக்குனர் நெல்சன் திலீப்குமார், அதன் பிறகு வெள்ளித்திரையில் கோலமாவு கோகிலா, டாக்டர் போன்ற வெற்றி படங்களை கொடுத்த பின் அவருடைய இயக்கத்தில் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்த தளபதி விஜயின் பீஸ்ட் திரைப்படம் வெளியானது.

இந்நிலையில் திரையரங்கு உரிமையாளர்களுக்கும் விநியோகஸ்தர்களுக்கும் இடையே ஒரு சில பிரச்சினை நிலவியதால், கரூர் உள்ளிட்ட ஒரு சில இடங்களில் பீஸ்ட் திரைப்படம் நேற்று திரையிடப்பட முடியாத நிலை ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து ராக்கிங் ஸ்டார் யாஷ் நடிப்பில் பிரசாந்த் நீல் இயக்கத்தில் வெளியான கேஜிஎ.ஃப் 2 திரைப்படம் திரையரங்கில் வெளியாகியது. பீஸ்ட் திரைப்படத்தை விட கேஜிஎ.ஃப் 2 திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை நூறு சதவீதத்திற்கும் மேல் பூர்த்திசெய்து ஒரே நாளில் 300 இடங்களில் திரையிடப்பட்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து அடுத்தடுத்த நாள்களிலும் இதன் எண்ணிக்கை அதிகரிக்க போகிறதாம். இவ்வாறு பீஸ்ட் திரைப்படத்தின் வசூல், கேஜிஎ.ஃப் 2 திரைப்படத்தினால் சரியாக அடி வாங்கப் போகிறது. அதுமட்டுமின்றி பீஸ்ட் படம் வெளிவந்து ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. இதனால் நெல்சன் திலீப்குமார் பெரும் சிக்கலில் மாட்டியுள்ளார். அதாவது அடுத்தடுத்த படங்களில் ஒப்பந்தமாகியிருந்தாலும் முக்கியமாக ரஜினி 169 வது படத்தில் நெல்சன் ஒப்பந்தமாகியிருந்ததுஅனைவருக்கும் தெரியும்.

அதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு சன் பிக்சர்ஸ் வெளியிட்டது. ஆனால் தற்போது பீஸ்ட் படம் படுதோல்வி அடையும் சூழ்நிலையில் இருப்பதால், அடுத்த ரஜினி 169 படத்தை தொடங்குவது சந்தேகம்தான் என்கிறது கோலிவுட் வட்டாரம்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு விசேட மலிவு விற்பனை

**30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்**

## ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.



பனங்கருப்பட்டி



தேன் நெல்லி

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.









காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

# SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com




Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING





## Ontario's Senior Ministers and MPPs gathered to support PC Provincial Candidate Logan Kanapathy -Markham-Thornhill



எதிர்வரும் ஒன்றாரியோ மாகாணத் தேர்தலில். கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளராக **-Markham-Thornhill** தொகுதியில் போட்டியிடும் லோகன் கணபதி அவர்களை ஆதரித்து உற்சாகமளிக்கும் வகையில் நேற்று மாலை ரொரன்ரோ மாநகரில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் ஒன்றாரியோவின் அமைச்சர்களான **Ontario's Minister of Higher Education and Colleges Mrs Jill Dunlop and Minster of Education Stephen Lecce** மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல்லினங்களைச் சார்ந்த ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அவர்களோடு தமிழ் பேசும் வர்த்தகப் பிரமுகர்களாக சங்கர் நல்லதம்பி. ரஜீவ் செபராசா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். லோகன் கணபதி அவர்களின் அலுவலக உதவியாளர் சிவா அவர்கள் நிகழ்விற்கு அவசியமான பணிகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தார். லோகன் கணபதி அவர்களின் குடும்பத்தினரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

## கனடாவிற்கு வந்துள்ள தமிழகத்தின் இலக்கியவாதியை வாழ்த்திய மூன்று கனடிய அரசியல் தலைவர்கள்



தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள தமிழகத்தின் இலக்கியவாதிகளில் ஒருவரான திருமதி அண்ணாமலை தமிழரசியை செவ்வாயன்று நடைபெற்ற வைபவத்தில் வாழ்த்திய மூன்று கனடிய அரசியல் தலைவர்கள் அவரிடம் சிறிது நேரம் உரையாடியும் மகிழ்ந்தனர்.

அன்று ஹுாவைடில நகருக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு வந்திருந்த கனடாவின் **Minister Responsible for the Federal Economic Development Agency for Southern Ontario Minister Helena Jaczek** மற்றும் **Whitby** நகரத்தின் பாராளுமன்ற உறுப்பினர் **MP Turnbull** மற்றும் **Whitby** நகரபிதா **Mayor Mitchell** ஆகியோர் கலந்து கொண்டு, விட்பி நகரத்தின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடினர்.

அவ்வேளை அங்கு சமூகமளித்த திருமதி அண்ணாமலை தமிழரசியை மேற்படி மூன்று அரசியல் தலைவர்களும் வரவேற்று தமது வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டு தமிழரசியின் கனடிய வருகை பற்றியும் கலந்துரையாடினர்.



## ஸ்காபுறோ மேல்மருவத்துார் ஆதிபராசக்தி குருமன்றத்தில் சித்திரா பறுவ தினத்தை முன்னிட்டு விசேட பூசைகள்

ஸ்காபுறோவில் நாஸ்டின் வீதியில் அமைந்துள்ள மேல்மருவத்துார் ஆதிபராசக்தி குருமன்றத்தில் எதிர்வரும் 16-04-2022 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் சித்திரா பறுவ தினத்தை முன்னிட்டு விசேட பூசைகள் நடைபெற்று வழிபாடுகளும் இடம்பெறும். அன்றைய தினம் சக்திகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பூசைகளில் பங்கெடுத்து அன்னையின் அருளைப் பெறுமாறு மன்றத்தினர் அழைக்கின்றார்கள். 647-436-9647

